விலை சதம் 25

# சுதந்திரன்

SUTANTIRAN

புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 பங்குனி திங்கள் 19-ம் நாள் (2—4—67) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 21 | இதழ் 41



# பிரதமரின் ஆலோசனை மீதே கலைக்கப்பட்டது

"எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட மக்களினதும் நல உரிமைகளை பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையெடுக்க உள்ளூராட்சி அமைச்சர் என்ற முறையில் எனக்கு சில அதிகாரங்களுண்டு. அந்த வகையில் மட்டுநகரின் புதிய மாநகரசபை எல்லைக்குள் சேர்க்கப்பட்டுள்ள கல்லடி கிராமசபை வட்டார மக்களின் நலன் கருதியே மட்டுநகர் மாநகர சபைத் தேர்தலை ஒத்திவைத்துள்ளேன். தேர்தலை ஒத்தி வைக்கும்படி எனக்கு பிரதமர் கூறிய ஆலோசனையை தொடர்ந்தே இந்த நடவடிக்கையை மேற்கொண்டேன். தவிர தமிழரசுக்கட்சிக்காக நான் மட்டுநகர் தேர்தலை ஒத்திவைத்தேன் என்று கூறப்படுவது வேண்டுமென்றே என்மீது குற்றம் சுமத்துவதற்கு சிலர் செய்யும் சூழ்ச்சியாகும். அந்தக் கூற்றை நான் முற்றாக ஆட்சேபிக்கிறேன்." இவ்வாறு மட்டுநகர் மாநகர சபைத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதுபற்றி உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

இம்மாதம் 30ம் திகதி மட்டக்களப்பின் புதிய மாநகர சபைக்கான தேர்தல் நடக்கவிருந்ததும், அத்தேர்தலை இம்மாதம் 23ந் திகதி உள்ளூராட்சி அமைச்சர் திடீரென ஒத்திவைத்ததும் தெரிந்ததே. இதுபற்றி மட்டுநகர் மக்களிடையே ஏற்பட்டுள்ள குழப்பத்தைத் தீர்க்கும் பொருட்டும், மட்டுநகர் மக்களுக்கு உண்மைநிலையை உணர்த்தும் பொருட்டும், சுதந்திரன் நிருபர் உள்ளூராட்சி அமைச்சரைப் பேட்டிகண்டபோது தான் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒரே வட்டாரத்தில் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த இருவர் போட்டியிட்டதனால் அப்போட்டியை தவிர்க்கும் பொருட்டே நீங்கள் தேர்தலை ஒத்திவைத்துள்ளதாக சிலர் பிரசாரம் செய்கிறார்களே, அதுபற்றியென்ன கூறுகிறீர்கள், என்று அமைச்சரை நமது நிருபர் கேட்டபோது அமைச்சர் கூறியதாவது:—

'கட்சி என்பது என்ன, அரசாங்கம் என்பது என்ன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அமைச்சர்என்ற முறையில் எனது கடமைகளை நான் ஆற்றும்போது எனக்குக் கட்சிவேறுபாடு எதுவும்கிடையாது. இது என்னுடைய நிர்வாக முறையை நன்கு தெரிந்தவர்களுக்கு விளங்கும். மட்டுநகர் மாநகரசபைத் தேர்தலை ஒத்திவைத்தது அமைச்சர் என்ற முறையில்தான். கட்சிக்காரன் என்ற முறையில்அல்ல. எனவே கட்சிக்காக—அரசியல் காரணங்களுக்காக—தேர்தலை ஒத்திவைத்தேன் என்று கூறுவதுஒரு அப்பட்டமான பொய் பிரசாரமாகும்.'

அமைச்சர் மேலும் கூறியதாவது:—

'மாநகர சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்பதை நான் 21ந் திகதியே செனட்சபையில் சூசகமாக வெளியிட்டிருக்கிறேன். மட்டுநகர் தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென்று மட்டக்களப்பின் இரண்டு எம். பி. களும், கல்குடா எம். பி. யும் என்னைச் சந்தித்து ஒரு கோரிக்கையை சில நாட்களுக்கு முன் சமர்ப்பித்திருந்தார்கள்.

உள்ளூராட்சி மன்றங்கள் வசதி கூடிய வட்டாரங்களுக்கு அதிக வரியும், வசதிகுறைந்த வட்டாரங்களுக்கு குறைந்த வரியும், விதிக்கக்கூடிய உரிமையை பெறுவதற்கு வழி வகை செய்யும் மசோதா என்னால் மூதவையில் கொண்டு வரப்பட்டு ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆனால் அது இன்னும் சனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்படவில்லை. சனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்ட பின்னர்தான் அது சட்டமாகும். அதன் பின்புதான் அதனை அமுலாக்க முடியும்.

'நான் மட்டுநகர் மாநகர சபைத் தேர்தலுக்கான திகதியை கெசட்மூலம் அறிவித்த பொழுது, வேறுபட்ட வரி

## மட்டுநகர் தேர்தலை பின் போட்ட காரணம்

## அமைச்சர் விளக்குகிறார்

[சுதந்திரன் நிருபர்]

விதிக்க மாநகரசபைக்கு அதிகாரம் அளிக்கும் இந்த மசோதா, எப்படியும் தேர்தல் தினத்துக்கு முன்பு சட்டமாகி விடும்என்றேஎதிர்பார்த்தேன்.

'இதற்குக் காரணம் உண்டு. மாநகரசபையாக்கப்பட்டுள்ள மட்டுநகரின் புதிய எல்லைக்குள் முகத்துவாரம், கல்லடி உப்போடை, நொச்சிமுனை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் போன்ற அபிவிருத்தி குறைந்த கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு நகர சபையின் எல்லையை விஸ்தரித்து மாநகரசபையாக்கும் போது, அந்த நகரசபையைச்

(8-ம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சருக்கு தக்க பதிலளிப்போம்

## மந்திரியின் கூற்றைக் கண்டிக்கிறார் எஸ். ஜே. வி.

'குடிசன மதிப்பு புள்ளி விபரத்தின்படி கிழக்கு மாகாண மக்களில் எண்பது சதவிகிதம் பேர் தமிழ்பேசும் மக்களாவர். ஆகவே கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களின் பிரதேசமல்லவென்று கல்வியமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியது ஒரு பெரிய தவறு. சந்தர்ப்பம் வரும்போது கல்வியமைச்சரின் இந்தக்கூற்றுக்கு பாராளுமன்றத்தில் தக்க பதிலளிப்போம்' இவ்வாறு ஏறுவூர் கிராமசபை நிறைவேற்றித் தமிழரசுத் தந்தைக்கு அனுப்பி வைத்த ஒரு தீர்மானத்துக்கு பதிலளித்து மேற்படி கிராமசபைக்கு அவர் எழுதிய பதிலில் குறிப்பிட்டிருக்கிறார்.

சமீபத்தில் கல்வி மந்திரி கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் பிரதேசமல்ல என்று பாராளுமன்றத்தில் கூறிய கூற்றைக் கண்டித்தும், அதை அமைச்சர் உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென்று கோரியும், அமைச்சரின் இந்தக் கூற்றை தமிழரசுக்கட்சி இதுவரை கண்டிக்காததற்குவருத்தும் தெரிவித்தும் தீர்மானம்

(9ம் பக்கம் பாக்க)

## நவரத்தினம் பதுளை விஜயம்

இ. தொ. கழகத் தலைவரும், சாவகச்சேரி எம். பி. யுமான திரு. வி. என். நவரத்தினம்எம். பி. இம்மாதம் 5ம் திகதி பதுளைக்கு விஜயம் செய்கிறார். பதுளை லோவர் வீதியில் அமைக்கப்பட்டுள்ள இ. தொ. கழகக் கிளையின் பணிமனைக்கு முதன் முதலாக விஜயம் செய்யும் திரு. நவரத்தினம், பதுளையில் பொதுக் கூட்டம் ஒன்றிலும் பேசுவார் என்று தெரிகிறது.

பதுளை மாவட்ட இ. தொ. கழகக் கிளையின்வளர்ச்சிக்கும், அங்கு எழுந்துள்ள சில தொழிலாளர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் திரு. நவரத்தினம் ஆலோசனை கூறுவார் என்று தெரிகிறது.

கழகப் பணிமனையில் அன்று மாலை நடைபெறவிருக்கும் விசேட கூட்டத்தில், திரு. நவரத்தினத்துடன். பதுளை மாவட்டப் பிரதிநிதி. திரு.

(9ம் பக்கம் பார்க்க)

பொ. சி. மோதல் வலுக்கிறது

## அடுத்த கூட்டத்தில் விளக்கம் வேண்டும்

## உடுப்பிட்டி எம். பிக்கு பொ. கட்சி கட்டளை.

பொ. கட்சிக்குள், யாழ்ப்பாணப்பிரதி நிதிக்கும் உடுப்பிட்டிப் பிரநிதிக்கும் இடையில் நடைபெற்று வந்ததாகக் கூறப்பட்ட கருத்து மோதல் இப்பேது உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டதாகத் தெரிகிறது. சமீபத்தில் கொழும்பில் யாழ்ப்பாணப் பிரதிநிதிக்கு அளித்த வரவேற்பொன்றில் உடுப்பிட்டிப் பிரதிநிதி, இரட்டை நாக்கால் பேசுவதைப் போல சிலேடையாகப் பேசியதாகவும் யாழ்ப்பாணப் பிரதிநிதியை தாக்கும் முறையில் அவரது பேச்சு அமைந்திருந்தது எனவும் அவர் அடுத்த பொ. கட்சி செயற்குழுக் கூட்டத்தில் விளக்கம்

(9-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை வாழ வைக்க மலையகம் நோக்கி வாருங்கள்!

## வட பகுதி ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள்

"வடபகுதி ஆசிரியர்கள் தோட்டம் சய்வதிலும், சீட்டுக்கட்டுவதிலும் இன்று கவனம் செலுத்துகின்றார்கள்" என்று டாக்டர் நாகநாதன் எம். பி. கூறியதில் எள்ளளவும் பிழையில்லை. ஆசிரியத் தொழில் என்பது ஒரு பிழைப்புத் தொழிலல்ல. அது ஒரு அழைப்புத் தொழில். (It is not a job but a vocation) ஆனால் நம்மில் பலர் அதை ஒரு ஊதியம் தரும் தொழிலாக மட்டுமே கருதி ஊழியம் புரிந்து வருகின்றோம். இது ஆசிரியன் என்ற பதத்திற்கே அடுக்காதவொன்றாகும். தொண்டு மனப்பான்மை, சேவையுள்ளம், தியாகவுணர்வு ஒன்றுமேயில்லாதவர் எவரும் இத்தொழிலுக்கு அருகதையற்றவர்கள். அவர்கள் அத்தொழிலை விடுத்து விலகி வேறு தொழில் செய்தலே நன்மையாகும். இதனால் வீடு பிழைக்கும். நாடு பிழைக்கும்.

### தமிழை அழிப்பவர் யார்?

வடபகுதி ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் வருடக்கணக்காக அப்பகுதிக்குள்ளேயே அடங்கி, ஆனந்தமாக வாழப்பட்டார்க்கின்றனர். பல வருடங்களாக மலையகத்தில் கடமையாற்றி வாத நோயோடு வருந்தும் வயோதிப ஆசிரியர்கள் பலர் வடக்கிற்குச் செல்ல வழியின்றித் தவிக்கின்றனர். ஆனால் வடபகுதி ஆசிரியர்களோ தோட்டங்களில் வைத்த பயிர் வாட்டமுற்றால் என்செய்வது என்று வருந்துகின்றார்கள். இது விசனம்தரும் விடயமாகும்.

நாட்டிலே தமிழை வளர்க்கவும் தமிழை அழிக்கவும் அரசியல் வாதிகளால் முடியாது. ஆனால் ஆசிரியர்களால் முடியும். எமது நாட்டிலே, தமிழ் வடக்கிலே வாழ்ந்தால் போதும் என்று, இதர இடங்களைத் தமிழாசிரியர்கள் புறக்கணிப்பார்களேயானால் அது தமிழ்த் தாய்க்குச் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும். இப்பழியைச் சுமந்து எதிர்காலச் சந்ததியிடம் பழிச்சொல் கேட்காமல் தப்பும்படி தமிழாசிரியர்களை வேண்டுகின்றோம்.

### சிங்களவர்களாக்கும் சேவை உங்களுடையதா

மலையகத்திலுள்ள ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலைகளுக்கும் ஐம்பது வீதம் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்கள் சரியான கல்வியைப் பெறமுடியாமல் தவியாய்த் தவிக்கின்றனர். அரைவாசி, கால்வாசித் தமிழ்மாணவர்கள் சிங்களப் பாடசாலைக்குச் சென்று சிங்களம் பயிலுகின்றனர். இன்னும் சில பாடசாலைகளில் முஸ்லீம் ஆசிரியர்களே நியமிக்கப்படுகின்றனர். இந்த இக்கட்டான நிலைமைகளுக்கெல்லாம் காரணம் வருவதற்கு விரும்பாத வடமாகாண ஆசிரியர்களே ஆகும். மலையக மக்களை—தமிழ் மக்களை, சிங்களவர்களாக்கும் முயற்சி அரசாங்கங்களினால் கைக் கொள்ளப்படுகின்றது என்றுசொல்வது முழுத்தவறு. தொண்டுசெய்ய விரும்பாத, கடமைசெய்ய விரும்பாத, தியாகம்செய்ய விரும்பாததமிழாசிரியர்களே தமிழ்மக்களைச் சிங்களச் சாகியமாக்குதற்குத் தீவிரமாக முயலுகின்றார்கள். இவ்விதமானவர்களைத் தமிழ்ச் சமுதாயம் வெறுக்கின்றது.

### வடக்கு மாகாண வாலிபர்க்கு இடக்கு

இவர்கள் வடக்கு மாகாண வாலிபர்களுக்கும் பெரும் இடக்காகவுள்ளனர். மேலதிகமாகவே இவர்கள் அங்கு அடங்கியிருப்பதால் காலியிடங்கள் அங்கு ஏற்படக்காரணம் இல்லை. இதனால் எத்தனையோ சேவையுள்ளம் படைத்த படித்த வாலிபர்கள் வேலையின்றித் தவிக்கின்றார்கள். மாணவ ஆசிரியர்களாக ஏராளமாணவர்கள் எடுபடுவதற்கு இவர்கள் தடையாகஇருக்கின்றார்கள். எனவே, வடக்கிலுள்ள வாலிபர்களுக்கு வாழ்வளிப்பதற்காகக் கொஞ்சகாலம் வடக்கைவிட்டு நகர்ந்திருங்கள் என்று இங்குள்ள வாலிபர்கள்இவர்களை இறைஞ்சுகின்றார்கள். இவர்கள் இரக்கங் காட்டல் வேண்டும்.

இங்குள்ளவர்கள் அங்கு செல்ல வேண்டும். அதற்காக மட்டுந்தான் இங்கே வாருங்கள் என்று அழைக்கவில்லை. இங்கும் வந்து உங்கள் திறமையான சேவையை ஆற்றுங்கள். அங்குள்ள வாலிபர்களையும் வருங்கால ஆசிரியர்களாக ஆக்குங்கள் என்றுதான் அழைக்கின்றோம். வராத நிலை நீடிக்குமாக இருந்தால் வருங்காலத்

அல்பிறட்

தில் வடக்கு மாகாணப் பாடசாலைகளிலுங்கூட முஸ்லீம் ஆசிரியர்கள் தான் நிறைந்து காணப்படுவர். சிங்கள ஆசிரியர்கள் படையெடுத்தாலும் நாம் ஆச்சரியப்பட முடியாது. ஆகவே இந்தப் பழியை ஏற்றுக்கொள்ளாமல் மகிழ்ச்சியுடன் இங்கு வாருங்களேன்.

### அரசாங்கம் செய்யவேண்டியது

இப்பகுதியில் விரும்பி உவந்து கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் விசேட உதவிகளைச் செய்ய முன் வருதல் வேண்டும்.

(1) வடக்கிலே உள்ள ஆசிரியர்களிற் சிலருக்கு ஆனையிறவுக்கு அப்பால் என்ன ஊர் இருக்கின்றது என்பது தெரியாது. பூமிசாஸ்திர ரீதியான புத்தக அறிவுண்டு. ஆனால் நேரடி அனுபவங் கிடையாது. இவர்களுக்கு மூன்று சோடி புகையிரத வசதிச்சீட்டு எதற்கு? எனவே, வடக்குக்கு வெளியிற் செல்ல விரும்பாத ஆசிரியர்களுக்குரிய இவ்வசதியைக்குறைத்து வெளிமாகாண ஆசிரியர்களுக்குக்கூட்டிவழங்க வேண்டும்.

(2) கொடுக்கப்படும் 'அலவன்ஸில்' வடக்கு மாகாண ஆசிரியர்களைவிட ஐம்பது வீதம் கூட்டி வழங்கப்படல் வேண்டும். இங்கு வருபவர்கள் வீட்டுப்பிரச்சினையால் பெரிதும் கஷ்டப்படுவதால், பாடசாலைகளோடு வீட்டு வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும். இன்றேல் வீட்டு வாடகைப் பணத்தைக் கூட்டிக் கொடுக்கவேண்டும்.

(3) பதவி உயர்வு அளிக்கப்படும் காலத்தில் வெளியூர்களில் அதிககாலம் சேவை செய்தவர்களுக்கு அதை ஒரு முக்கிய தகுதியாகக்கணித்துப் பதவி உயர்வுகளை வழங்க வேண்டும்.

இவ்வாறான ஏதோ ஒரு நடவடிக்கை இல்லாது விட்டால் இப்பிரச்சினைநீண்டுகொண்டே போவது திண்ணம்.

ஆகவே, வடக்குமாகாண ஆசிரியர்கள் சேவை என்பது இல்லாவிட்டாலும் கடமை என்ற உணர்வோடாவது இங்கு வந்து, எங்களோடு இருந்து மலையகத்திலும் தமிழ் வளர்க்க வேண்டுமென வருந்தியழைக்கின்றோம். வருகிற 'மே'யில் நடைபெறும் மாற்றத்தில் மறுப்பில்லாமல் விருப்புடன் வருவீர்கள்—வந்து தொண்டு புரிவீர்கள் என்று ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருமே அன்னை தமிழின் மேல் அன்பு கொண்டெதிர்பார்த்திருக்கின்றோம்.

# ஆசைத்தம்பி தெரிவித்த அருமையான யோசனை

சென்னை சட்டமன்றத்தின் அரியணைஉரை விவாதத்தின்போது பேசிய தி. மு. க. தலைவர்களில் ஒருவரான திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஒரு அருமையான யோசனையை தெரிவித்திருக்கிறார். தி. மு. க. பற்றி ஈழத்தில் சிங்களமக்களிடையே ஒரு தவறான பிரசாரத்தை எதிர்க்கட்சியினர் நடத்திவருவதால் அந்த தப்பபிப்பிராயத்தை களைந்தெறிய ஒரு நல்லெண்ணத் தூதுக்குழுவை ஈழத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பதுதான் அவரது ஆலோசனை.

சென்னையில் ஒரு பல மிக்க அரசியற் கட்சியாக விளங்கி வரும் தி. மு. கழகம் நடைபெற்று முடிந்த இந்தியப் பொதுத்தேர்தலில்தமிழகத்து பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையைப்பெற்று ஆட்சி பீடமேறியதுமுதல் இங்கு சிங்கள மக்களிடையே தி. மு. க. பற்றிய எதிர்ப்புப் பிரசாரம் வெகு வேகமாகசிங்களவகுப்பு வாதிகளால் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது.

### துவேஷப் பிரசாரம்

சிங்கள இனத்தையும், சிங்கள மொழியையும் ஈழநாட்டையும், வெகுவிரைவில் தி. மு. க. கபளீகரம்செய்துவிடப் போகிறதென்றும், விரைவில் தி. மு. க. ஆட்சியின் உதவியுடன், இலங்கையில் ஒரு தமிழ் இராச்சியத்தை தமிழரசுக்கட்சி நிறுவி விடுமென்றும் மிகவும் கீழ்த்தரமான முறையில் துவேஷப் பிரசாரம் நடைபெற்றுவருகிறது.

இலங்கையின் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர்களே இப்பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல்களிலும் தி. மு. க. பூச்சாண்டிப் பிரசாரம் மிகவும் தாராளமாக நடைபெற்றிருக்கிறது. இம்மாதம் நடைபெற்ற தெவிநுவரை இடைத்தேர்தலின் போதும் சுதந்திரக்கட்சியினர் தி. மு. க. வின் ஆதரவுடன் [illegible] தங்கள் பிரசாரத்தைக் குடத்தி வாக்குவேட்டையாடுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

கூட்டரசாங்கக் கட்சிகளில் ஒன்றான சுதந்திரக்கட்சி தி. மு. க. பற்றி இப்படி துவேசப் பிரசாரத்தை மேற்கொண்டிருக்கும்போது, அதேகுழுவைச் சேர்ந்த இன்னொரு கட்சியான லங்கா சமசமாஜக்கட்சியின் ஆதரவுபெற்ற தொழிற்சங்கமான லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் தி. மு. க. ஆட்சிக்கு பாராட்டுச் செய்தி அனுப்பியிருக்கிறது.

சுதந்திரக்கட்சி சிங்களமக்களிடம் ஆதரவு பெறுவதற்காக தி. மு. க. வுக்கு எதிராக விஷத்தைக் கக்க, தோட்டத் தமிழ் மக்களின் ஆதரவை பெறுவதற்காக சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்கம்,

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

அறிஞர் அண்ணாவுக்கு பாராட்டு செய்தி அனுப்பி வைத்திருக்கிறது. இப்படி கூட்டரசாங்கக்கட்சிகள் இன்று இரட்டைவேடம்போடுகின்றன.

### ஆசைத்தம்பி யோசனை

சுதந்திரக் கட்சியினர்இன்று பாமர சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக, இலங்கையிலுள்ள தமிழ்பேசும் மக்களையும் தமிழரசுக்கட்சியினரையும் தி. மு. க. வுடன் இணைத்துப் பிரசாரம் செய்யலாம்—ஆனால் இதன் பலாபலன், எவ்வளவு பெரிய பயங்கரத்தில் கொண்டுபோய் விடும் என்பதையும் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்பதையும் ஏற்கெனவே சுதந்திரனில் பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

இச்சமயத்தில் தி. மு. க. பற்றி ஈழத்திலுள்ள சிங்கள மக்களின் தப்பபிப்பிராயங்களைப் போக்குவதற்கு ஒரு நல்லெண்ணத் தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று திரு. ஆசைத்தம்பி தெரிவித்துள்ளயோசனை வரவேற்கப்படக் கூடியதொன்று.

இங்கு அப்படியொரு நல்லெண்ணத்தூதுக்கோஷ்டி வருமேயாகில், இங்குள்ள சிங்களத் தலைவர்களையும், சிங்களப் பெருமக்களையும், பிரமுகர்களையும் கண்டு தி. மு. க. பற்றி அவர்கள் மனதில் இருக்கும் மனப்பிராந்திகளை களைந்தெறிய அது உதவும் என்றே நம்புகிறோம்.


தி. மு. க. வுக்கு எதிராக பொய்ப் பிரசாரத்திலீடுபட்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவியையும், மற்றும் கூட்டரசாங்கக்கட்சித் தலைவர்களையும் இத் தூதுகோஷ்டி சந்தித்துப் பேசினால், (தி. மு. க. பற்றி உண்மையிலேயே அவர்களுக்கு தவறான விளக்கம் இருந்திருக்குமானால்) அவர்களின் தப்பெண்ணம் மறைவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டு விடுவதோடு, பின்னர் சிங்களமக்கள் மத்தியில் தி. மு. க பூச்சாண்டி காட்டி வோட்டுவாங்கும் தந்திரமும் பலிக்காது போய்விடும். அந்த வகையில் தி. மு. க. நல்லெண்ணத் தூதுக்குழு இலங்கைக்கு வருவதை வரவேற்கிறோம்.

### பரஸ்பரம் நட்பை வளர்க்கும்

தமிழகத்திலிருந்து அப்படியொரு நல்லெண்ணத் தூதுக்குழு இலங்கைக்கு வருவது இலங்கை மக்களுக்கும் தமிழ் நாட்டு மக்களுக்குமிடையே உண்மையான அன்பை பரஸ்பரம் பறிமாறிக்கொள்ளவும் வழிசமைக்குமென்பதில் ஐயமில்லை.

இலங்கைக்கு வரக்கூடிய தி. மு. க. நல்லெண்ணத் தூதுக்குழு, இலங்கையிலுள்ள பெரும்பான்மையான பௌத்த மக்களின் சமயத் தலைவர்களான மகாநாயக தேரோக்களையும் சந்தித்து, அவர்களது ஆசியைப் பெறுவதுடன், அப்படியொரு சந்திப்பை ஏற்படுத்துவதன்மூலம், தி. மு. க. ஆட்சியால், இலங்கையின் ஆதிபத்தியத்துக்கு ஆபத்து ஏற்படும் என்ற தவறான எண்ணத்தை மாற்றவும் முயற்சிக்க வேண்டுமென்று சொல்லிவைக்க விரும்புகிறோம்.


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14, டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




செ. ச. நாதன்,
வவுனியா.

கே: வவுனியா நகரசபையாக்கப்பட்டு பல வருடங்களாகியும் சாப்புச் சட்டமுறை அமுலாக்கப் படவில்லை. என்ன செய்யலாம்?

ப: ஒரு நகரசபை உறுப்பினர்மூலம் பிரசினையை சபையில் எழுப்ப ஏற்பாடு செய்யுங்கள். சபையை வற்புறுத்த ஒரு பொதுக்கூட்டத்தை நடத்துங்கள். நகர மக்களிடம் கையெழுத்துகள் வாங்கி ஒரு மகஜரை சபைக்கு சமர்ப்பியுங்கள். பலன் கிடைக்கும்.

கே: வவுனியா பஸ் நிலையத்தில் மக்கள் கியூ வரிசையில் நின்று பஸ்ஸில் ஏறுவதற்கான ஒழுங்கைச் செய்வதற்கு யாரைக் கேட்பது என்று தெரியவில்லை?

ப: நகரசபையையும் இ. போ. ச. வையும் வற்புறுத்துங்கள்.

ஃ

க. கோணமலை,
சாவகச்சேரி.

கே: என் சிநேகிதன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். அவளோ என் பக்கத்துவீட்டுப் பெண். தனக்கு உதவிசெய்யும்படி கேட்கிறனே நான் அவனுக்கு என்ன உதவி செய்வது?

ப: பக்கத்து வீட்டில் வசிப்பதால் இருவருக்குமிடையே 'தபால் பியூன்' வேலை பார்க்கலாமல்லவா?

கே: இந்த பரந்த பூவுலகின் கண் மானிடர் எதற்காக பிறக்கிறார்கள்? எதற்காக வாழ்கிறார்கள்? எதற்காக இறக்கிறார்கள்?

ப: இம்மூன்றுக்கும் இன்னும் உலகில் இடமிருப்பதால்.

ஃ

சின். கென்னடி,
யாழ்ப்பாணம்.

கே: வெளிநாடுகளிலேபொதுவுடமையாளர்களின் வெற்றிக்கும் உழைப்புக்கும் ஆதரவுதெரிவிக்கும் எதிர்க்கட்சியினர்கள் தமிழ்நாட்டில் அறிவுக்கடலான அறிஞர் அண்ணா அவர்களின் அணியின் வெற்றிக்குமட்டும் பயப்படக் காரணம் என்னவோ?

ப: பயப்படவில்லை. உள்ளூர வரவேற்கிறார்கள்! பயப்படுவதாக நடிப்பது பாமர சிங்கள மக்களின் வாக்குகளைவேட்டையாடுவதற்காகவே—

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: தமிழ்நாட்டில் தி. மு. க. வெற்றியடைந்துவிட்டது என்ற செய்தியைக் கேட்டதும் இலங்கைப் பிரதமர் என்ன நினைத்திருப்பார்?

ப: வரவேற்றிருப்பார் மக்களின் தீர்ப்பை—அவர்ஒரு ஜனநாயகவாதியல்லவா?

ஃ

மு. துரைசாமி,
எல்ல.

கே: அண்ணாவின் ஆட்சி கூடாதென்று கூறும் தமிழனை எப்படி அழைப்பது?

ப: காங்கிரஸ்காரன் என்று அழையுங்கள்.

ஃ

எஸ். நாகராஜா,
கைதடி.

கே: தி. மு. க. வினதுகொடியின் நிறம் கறுப்பும் சிகப்பும் இதன் கருத்தென்ன?

ப: சிகப்பு சோஷலிசம்——கறுப்பு முதலாளித்துவம். சோஷலிசம் வளர வளர கறுப்பு குன்றி, சிகப்பு விரிவடையும். முழு சோஷலிசம் ஏற்படும்போது கறுப்பு முற்றாக நீங்கி முழு செந்நிறக் கொடியாக வளர்ந்து காட்சியளிக்கும்.

வே. பத்மகாந்தன்,
நல்லூர் வடக்கு.

கே: சிங்கள மக்களைத் தமிழர் வாழும் பிரதேசங்களில் குடியேற்றுமாறு ஆர். ஜி. சொல்கிறாரே?

ப: தமிழ்மண்ணை சிங்களப் பிரதேசமாக்குவதற்காகவே இச் சதித் திட்டம். முன்னைய அரசாங்கங்கள் கிழக்குமாகாணத்தில் பல குடியேற்றத் திட்டங்களில் சிங்களவர்களைக் குடியேற்றியதால்தான் கல்வி மந்திரி இன்று மார்தட்டுகிறார் கிழக்கு மாகாணம் தமிழ் பிரதேசம் அல்ல என்று.

ஃ

க. லோகநாதன்,
விநாயகபுரம்.

கே: குயுக்தியாரே இடைத் தேர்தலில் ஐ. தே. கட்சி தோற்றுவருவது எதைக் காட்டுகிறது?

ப: எதிர்க் கட்சியினருக்குக் கிடைக்கும் வாக்குகளின் தொகைஅரசாங்கக் கட்சிக்குக் கிடைக்கும் வாக்குகளின் தொகையைவிட அதிகம் என்பதைக் காட்டுகிறது.

கே: ஜீ. ஜீ. பொன்னம்பலம் மறுபடியும் ஐ. நா. சென்றால்......?

ப: உடுப்பிட்டியார் தனிக் கட்சி அமைக்கக்கூடும்.

ஃ

அர்த்தநாரீசுவரன்,
பதுளை.

கே: இ. ஒ. கூட்டுத்தாபனம் செய்தி ஒலிபரப்பில், கொலை, கொள்ளை, கற்பழிப்பு முதலியவற்றை அறிவித்தால்...?

ப: தந்தி, மித்திரன், சவச போன்ற ஏடுகளை மூடவேண்டியதுதான்.

ஃ

ஞானம்பிகை,
சுண்ணாகம்.

கே: எனக்கு வயது 16. நான் சில வேளைகளில் பொறுமை யிழந்து வயதுக்கு மூத்த பெரியவர்களையும் கண்டபடி பேசி விடுகின்றேன். தற்கு ஒரு மருந்து கூறும் குயுக்தியாரே?

ப: பொறுமை இழக்கும் போது ஒரு கையால் உதடுகள் இரண்டையும் ஒன்றாகச்சேர்த்துப் பிடித்துக்கொள்ளுங்கள். இது பழக்கமாகிவிட்டால், படிப்படியாக பொறுமையை இழக்கும் பழக்கம் மறைந்து விடும்.

ஃ

டி. சந்திரசேகரன்,
யாழ்ப்பாணம்.

கே: யாழ்நகர முன்னணி என்ற பெயரால் பழைய முனிசிபல் மெம்பர்கள் கூடி ஒரு முன்னணி அமைக்கப் போகிறீர்களாமே! இதற்குத் தகுந்தபெயர் ஒன்று கூறுங்கள் பார்ப்போம்!

ப: 'ஏற்றியிறக்கும் பின்னணி' என்பது இதற்கு பொருத்தமான பெயர். மேயர்களை நாள்தோறும்ஏற்றியிறக்குவதையே தொழிலாகக்கொண்ட பிற்போக்குஅணி என்பது இதன் பொருள்.

ஃ

ஸ்ரீரஞ்சினி,
காங்கேசன்துறை.

கே: எனது அத்தைமகன் என்னோடு கதைக்க மிகவும் தயங்குகிறாரே, என் மனம் அவரையே நாடுகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

ப: அவர் [illegible] அவரது தயக்கத்தைப்போக்குவது [illegible] உங்கள் பொறுப்புதான். அதற்கான உபாயங்களைக் கையாளுங்கள்.

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: தற்போது இளம் பெண்கள் எல்லாம் கூலிங்கிளாஸ் போட்டுக்கொண்டு ஆண் துணையில்லாமல் தனியாக ஊர் சுற்றுவது ஏன்?

ப: கூலிங்கிளாஸ்போட்டுக் கொண்டால் எந்த ஆணையும் கூர்ந்து நோக்கலாம். தன்னைத்தான் கவனிக்கிறாள் என்பதை எந்தஆணும்தெரிந்துகொள்ள முடியாது. கறுப்புக்கண்ணாடி துணையிருந்தால் ஆண் துணை தேவையில்லை. ஆணா பெண்ணா என்பதைக் கண்டுபிடிக்கவே ஐந்து நிமிடம் ஆகுமே!

ஃ

இரத்தினம்,
தேவிபுரம்.

கே: நான் நாள் ஒன்றுக்கு 2.50 உழைக்கின்றேன். அதில் சுருட்டுக்கு 1.50 போகிறது. இதை நிறுத்த எவ்வளவு பாடு பட்டாலும் முடியாமல் இருக்கிறது. இதற்கு நீங்கள் ஒரு வழி கூறுங்கள்.

: சிகரெட்டுக்கும் பீடிக்கும் எவ்வளவு செலவு செய்கிறீர்கள் என்பதைக் கூறவில்லையே. எஞ்சிய ரூ. 1/- சாப்பாட்டுக்குச் செலவு செய்கிறீர்களா? இனிமேல் நாள்தோறும் ரூ. 1 - மட்டும் உழைத்து சாப்பாட்டு செலவைச் செய்யுங்கள் புகைப்பிடிப் பழக்கம் தானாக ஒழிங்கிவிடும்.

கே: மாமாநான்எத்தனையோ பேருக்கு உதவி செய்கிறேன் அவர்கள் எனக்கு கெடுதியே செய்கிறார்கள். இதற்கு என்ன செய்வது?

ப: உதவிசெய்யாதீர்! அவர்களும் கெடுதிசெய்யமாட்டார்கள்.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவளும் காதலித்தாள். இப்பொழுது என்னைக் கண்டதும் தலையை குனிகிறாள். இது எதற்கு?

ப: உமக்குஅடித்ததுஅதிர்ஷ்டம்! தந்தையாகப் போகிறீர்கள்!

ஃ

த. இ.,
ஏழாலை தெற்கு.

கே: நான் கறுப்பாக இருப்பதால் காண்பவர் அனைவரும் என்னைக் கேலி செய்கிறார்கள். இந்தக் கறுப்பை மாற்றச் செய்ய வழி கூறும்?

ப: உணவு மூலம் உடலாரோக்கியத்தைப் பெற்றுவிட்டால் கறுப்பு ஒருகவர்ச்சியைக் கொடுக்கும். கூடியளவு செயற்கை அழகைபெற முயற்சி செய்யுங்கள்.

ஃ

க. மரியாம்பிள்ளை,
முள்ளியான்.

கே: முஸ்லீம் கலாசாரப் பல்கலைக்கழகம் வேண்டும்என்னும் மூதூர் முதல்வரின் பிரேரணையினை யாழ். உறுப்பினர் ஆமோதித்திருக்கின்றாரே! இதன் காரணம் யாதோ?

ப: தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவதைத் தடுப்பதற்குஇத் தீர்மானமாவது கைகொடுத்து உதவாதா என்ற நப்பாசையாக இருக்கலாம்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12



கருவாடு ஏற்றுமதி!

இலங்கைக்கு 'இந்தியக் கருவாடு' அனுப்பி வைக்கப்படும்.

—செய்தி.

—இங்கிருந்து இந்தியாவுக்கு மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களான உழைத்து உழைத்து கருவாடுகளாய்க் காய்ந்து போன மனிதக் 'கருவாடுகளை' எப்பொழுது அனுப்பி வைக்கப் போகிறார்கள் என்று கேட்கிறார் ஒரு சிங்கள வகுப்புவாதி.

யார் திருவிளையாடல்?

பாடசாலையொன்றில் கிடந்த சாராயப் போத்தல்களை கலால் இலாகா அதிகாரிகள் கைப்பற்றினர்.

செய்தி.

—இது ஆசிரியர்களின் திருவிளையாடலா? மாணவர்களின் திருவிளையாடலா? அல்லது இரு பகுதியினருமாக சேர்ந்து நடத்திய திருவிளையாடலா?

குக்கல் குக்கல் தான்!

சுதந்திரக் கட்சியில் மீண்டும் சேர்வதற்கு திரு. ராஜரத்தினா அனுப்பிய விண்ணப்பப் பத்திரத்தை சுதந்திரக் கட்சி செயற்குழு நிராகரித்தது.

செய்தி.

—குக்கலைப்பிடித்து குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அது குப்பை மேட்டையே மீண்டும் தேடி ஓடும் என்று பெரியவர்கள் கூறி வைத்த வாக்கு பொய்யாகுமா?

பாலாபிஷேகம்!

வாஷிங்டனில் பல குடியானவர்கள் தங்கள் மனைவிகளைப் பாலால் குளிப்பாட்டுகிறார்கள்.

—செய்தி.

—அவர்களுக்கு மனைவிகளாக நாம் கொடுத்துவைக்கவில்லையே என்று இங்குள்ள சில பெண்கள் ஏங்கலாம்.

எலி வேட்டை!

எலி வேட்டையாட மாணவர் படையொன்று மலேசியாவில் திரட்டப்படுகிறது.

—செய்தி.

—இங்கும் இப்படியொரு படை அமைக்கப்பட்டால் 'பதுக்கல் எலிகளை' சுலபமாகப் பிடித்துவிட முடியும் என்கிறார் ஒரு மாணவர்.

இரவினில் ஆட்டம்!

வட பகுதியில் 'இரவு ராணிகள்' நடமாட்டம் அதிகரிக்கிறது.

—செய்தி.

'இரவினில் ஆட்டம், பகலினில் தூக்கம்-இது [illegible] கள் வாழ்வு' என்[illegible] இரவு ராணி.

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

(போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்,

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடதுசாரிகளின் "பாச்சா" தமிழ் மக்களிடம் பலிக்காது

## சோசலிச முன்னணியின் சுயரூபம் என்ன?

**கோவை மகேசன்**

**'பூனை** இல்லா வீட்டில் எலி சதிராட்டம் போட்டதாம்' என்பது ஒரு நாடோடி வழக்கு.

இப்பொழுது சில காலமாக, கூட்டரசாங்கக் கட்சிகளில் ஒன்றான கம்யூனிஸ்ட் கட்சி வடமாகாணத்தில் போட்டு வரும் காட்டுக் கூச்சல்களையும் விடுக்கும் சவால்களையும் பார்க்கும் போது மேற்கண்ட நாடோடி வழக்குத்தான் ஞாபகத்துக்கு வருகிறது. போதாக்குறைக்கு, சுதந்திரக் கட்சியின் இன்னொரு கிளையான இஸ்லாமிய சோசலிச முன்னணியும் வடமாகாணத்தை கடந்த மாதம் எட்டிப் பார்த்திருக்கிறது. கிழக்கு மாகாணத்துள் நுழைய ஆலோசித்து வருகிறதாகச் செய்திகள் கூறுகின்றன.

தமிழ் பேசும் மக்களின் அபரிமிதமான ஆதரவைப் பெற்று அவர்களின் ஒரே அரசியற் ஸ்தாபனமாக விளங்கும் தமிழரசுக் கட்சி, தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து அல்லும் பகலும் அனவரதமும் ஆலோசனை நடத்துவதும், அது பற்றி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதும் முதலான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதால் அதன் தலைவர்களுக்கு மக்களிடம் நேரடியாக பிரச்சாரம் செய்ய போதிய அவகாசம் கிடைப்பதில்லை.

### தமிழரசாரின் மௌனம்

தமிழரசுக் கட்சியினர் இன்று மேடைகள் தோறும் மக்களைக் கூட்டி பிரசாரத்தில் ஈடுபடுவதை குறைத்துக் கொண்டு, உருப்படியாக தமிழ் பேசும் மக்களுக்கு சில உரிமைகளையாவது பெற்றுக் கொடுத்து விட வேண்டுமென்பதில் அதிக அக்கறை செலுத்தி வருகிறார்கள். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டுமென்பதை தமிழரசுத் தலைவர்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். எனவேதான், இன்று பேச்சைக் குறைத்துக் கொண்டு 'தூற்றுவார் தூற்றட்டும் - போற்றுவார் போற்றட்டும் - என்ற அடிப்படையில், செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தமிழரசார் இப்படி தமது கவனத்தை உருப்படியான ஆக்க வேலைகளில் திருப்பி விட்டிருக்கும் நேரத்தில தான் - தமிழரசாரின் மௌனத்தைப் பயன் படுத்திக் கொண்டு, வீராதிவீரர்கள் போலவும், சூராதி சூரர்கள் போலவும், இடது சாரிகள் யாழ்ப்பாணத்தில் பவனி வரப் பார்க்கிறார்கள்.

### புதிய வேலை

இன்று அவர்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு வலை ஆலயப் பிரவேசப் பிரச்சினை. தமிழ் பேசும் பிரதேசத்தில் மீன் ஏதாவது கிடைக்காதா என்ற நப்பாசையில் இந்த வலையை வீசிப்பார்க்கிறார்கள்.

இந்த இடது சாரிகள் யார்? இவர்களின் பூர்வோத்திரமென்ன? தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இவர்களுக்கு எவ்வளவு தூரம் உண்மையான பற்று இருக்கிறது? என்பதெல்லாம் தமிழ் பேசும் மக்களுக்கு பழைய பாடம். இவர்களின் அரசியல் பல்டிகளை - ஏமாற்று வித்தைகளை நன்கு தெரிந்து கொண்டவர்களான தமிழ் பேசும் மக்கள் இவர்களை எப்பொழுதும் எட்டத்திலே தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பாவம், இவர்களுக்கொரு நப்பாசை போலும், தமது துரோகங்களை, தமது அரசியல் பல்டிகளை - தமிழ் பேசும் மக்கள் மறந்திருக்கக்கூடும் என்பதாக, ஆனால் தமிழ் பேசும் மக்கள் அத்தனை தூரம் மறதிக் காரர்கள் - மந்தபுத்திக்காரர்கள் - என்று இடது சாரிகள் நினைத்தார்களானால், நிச்சயம் ஏமாறத்தான் போகிறார்கள்.

### தொன்மை மறவேல்

சுதந்திரக் கட்சியினருடன் சேர்ந்து கொண்டு இடது சாரிகள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக நடத்தி வந்த பிரச்சாரத்திற்கு சான்று கூற வேண்டுமானால் அதிக தூரம் போகத் தேவையில்லை. 1965ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ந் திகதி நடந்த சம்பவங்களை தமிழ் பேசும் மக்கள் ஒரு முறை அசை போட்டுப் பார்த்தாலே போதும். அது மறக்கக் கூடிய ஒன்றும் அல்ல.

இந்த நாட்டிலே, தமிழ் மொழிக்கு தேசிய அரசாங்கம் முதன் முதலாக வழங்க முன் வந்த உரிமையை—சம அந்தஸ்து அல்ல; காலஞ்சென்ற பண்டாரநாயகா தமிழரசுத் தந்தையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கூறப்பட்ட அந்தஸ்துகூட அல்ல; அதிலும் குறைந்த ஒரு சலுகையை—வழங்கும் தமிழ் மொழி விசேட சட்டத்தை சுதந்திரக்கட்சியினரோடு சேர்ந்து எதிர்த்தவர்கள்தான் இந்த இடதுசாரிகள். அதுமட்டுமல்ல, பாராளுமன்றத்திலே பேசும் போது, தமிழ்மொழிக்கு உரிமை கொடுக்கும் இந்தச் சட்டத்தால் பெரும்பான்மை சிங்கள மக்களின் உரிமை பறிபோகிறதென்றும் சிங்களம் மட்டும் சட்டம் சிதைவுறுகிறதென்றும் 'கண்ணீர்' வடித்த போலிகள்தான் இவர்கள்.

எந்த இடதுசாரிகள் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வேண்டுமென்று ஒரு காலத்தில் மேடைகளில் முழங்கினார்களோ—எந்த இடதுசாரிகள் சிங்களம்மட்டும் சட்டத்தை அன்று எதிர்த்துகுரல் கொடுத்தார்களோ அவர்கள் 1965ம் ஆண்டு ஜனவரி 8ம் நாள், தமிழ்மொழிக்கு இந் நாட்டிலே தேசிய அரசு அளிக்க வந்த சிறிய உரிமையை —அது சிங்கள மக்களின் உரிமையைப்பறிப்பதாக கூறி— எதிர்த்திருக்கிறார்கள் என்பது தமிழ்பேசும் மக்கள் அத்தனை சுலபமாக மறக்கக்கூடிய ஒன்றல்ல.

### தோசை வடை

அதுமட்டுமா? அதைத் தொடர்ந்து சிங்களமக்கள் மத்தியிலே தமிழ்பேசும் மக்களை அவமானப்படுத்தும் முறையிலே கிளப்பிவிடப்பட்ட 'தோசை வடை' கோஷத்திலும் முன்னணியில் நின்றவர்கள் இந்த இடதுசாரிகள் என்பதை எவரும் மறந்திருக்க முடியாது.

இன்றுகூட என்ன நடக்கிறது! தமிழ்பேசும் மக்களுக்கு இந்நாட்டிலே ஓரளவு பிரதேச ஆட்சியுரிமையை வழங்கக் கூடிய மாவட்ட சபைகள் நிறுவப்படுவதை தென்னிலங்கையிலே சுதந்திரக்கட்சியினருடன் சேர்ந்து எதிர்க்கும் இடதுசாரிகள்தான் தமிழ் பிரதேசங்களில வந்து தமிழ்பேசும் மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்.

### சினதாசரின் முயற்சி

ஆலயப்பிரவேசப் பிரச்சினையை வைத்துக் கொண்டு அதில் சுழி போடப்பார்க்கிறார் சினதாசராகிவிட்ட திரு. சண்முகதாசன் ஆலயப் பிரவேசப் பிரச்சினையில் மட்டுமல்ல, பொதுவாகவே சிறுபான்மைத் தமிழர் பிரச்சினையில், அக்கறையெடுத்து சிறுபான்மைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போட்டியிட்டு வந்திருப்பவர்கள் தமிழரசார்தான் என்பதை எந்தச் சிறு குழந்தையும் ஒப்புக்கொள்ளும்.

தமிழரசுக்கட்சி சிறுபான்மைத் தமிழர் விஷயத்தில் அக்கறை எடுத்து வருவதற்கு காரணம் எந்த வித அரசியல லாபத்தையும் கருதியல்ல. சிறுபான்மை மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டு அவர்களும் ஏனைய தமிழ் மக்களோடு சமமாக வாழ்ந்தால்தான், இந் நாட்டில் தமிழ்பேசும் மக்கள் தலைநிமிர்ந்து வாழலாம் என்பதில் தமிழரசுக்கட்சி அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறது.

### அடிப்படை இலட்சியம்

1949ம் ஆண்டு கட்சி ஆரம்பிக்கப்பட்டபோதே, அதன் அடிப்படைக் கொள்கைகளில் தீண்டாமை ஒழிப்பும் ஒன்றென்பதை, கட்சி பிரகடனப் படுத்திவிட்டது. எனவே, சிறுபான்மைத் தமிழர்களின் வாக்குகளைப் பறிக்க வேண்டுமென்ற நோக்கமோ, அல்லது சிறுபான்மைத் தமிழர்களைப் பயன் படுத்தி கட்சியை வளர்க்க வேண்டும் என்ற அவசியமோ, தமிழரசுக்கட்சிக்கு கிடையாது. தமிழரசார் சிறுபான்மைத் தமிழர் விஷயத்தில் அதிக அக்கறையெடுத்து, சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை களைந்தெறியப் பாடுபடுகிறார்கள் என்றால் அது கட்சியின் அடிப்படை இலட்சியங்களில் ஒன்று என்பதாலேயே.

எனவே 1949ம் ஆண்டிலிருந்தே கட்சி, சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முழுமுயற்சிகளைமேற் கொண்டுவருகிறது. இடையில் அரசியல நெருக்கடிகள் ஏற்பட்டபோது அந்த முயற்சியில் சிறிது தளர்ச்சி ஏற்பட்டாலும், இன்று மீண்டும் அம் முயற்சியில் கட்சி இறங்கியிருக்கிறது.

### வன்னியரின் சேவை

சிறுபான்மைத் தமிழர் பிரச்சினையில், கட்சி வெறும் மேடைப்பேச்சுக்களை மட்டும் நம்பியிருக்கவில்லை. காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம், கிராமம் கிராமமாகச் சென்று தீண்டாமையொழிப்பில் தீவிரமாக ஈடுபட்டார். தீண்டாமையொழிப்புக்காக அமரர்வன்னியசிங்கம் செய்த சேவை, இலங்கையில் வேறு எந்தத் தலைவரும் செய்யாத ஒரு சேவையென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆலயப் பிரவேசம், சமபந்திபோசனம், தேனீர்க்கடை பிரவேசம் முதலிய நடவடிக்கைகளில் கட்சி இறங்கி ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறது.

அமரர் வன்னியசிங்கம் எடுத்த நடவடிக்கைகளால் பல இந்துக்கோயில்கள் சிறுபான்மை மக்களுக்காக திறந்து விடப்பட்டன. அதுமட்டுமன்றி, தமிழரசுக் கட்சி எதிர்க்கட்சியிலிருந்த போதே பாராளுமன்றத்திலே தீண்டாமையொழிப்புச் சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. இச் சட்டத்தை பாராளுமன்றத்திலே பிரேரித்தவர் காலஞ்சென்ற அமரர் இராசவரோதயம். அத்துடன், சிறுபான்மைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை செனட்டராக்கிய பெருமையும் தமிழரசுக்குண்டு.

தமிழரசார் தீண்டாமையை மெல்ல மெல்ல, ஆனால். வேரோடு களைந்தெறியக் கூடிய நடவடிக்கைகளில் இறங்கியுள்ள நேரத்தில்தான், சீனாவே சரணம் என்று கூறும் திரு. சண்முகதாசன் சிறுபான்மைத் தமிழரிடம் சென்று வலையை விரித்து பார்க்கிறார்.

### என்ன செய்திருக்கிறார்கள்?

திரு. சண்முகதாசனும் சரி, வேறு எந்த இடது சாரித் தலைவர்களும் சரி, சிறுபான்மை தமிழர்களுக்கு ஏதாவது ஒரு சிறு உரிமையையாவது இதுவரை பெற்றுக்கொடுத்திருக்கிறார்களா? மேடைகளில் ஏறி, புரட்சி, இரத்தம், பலாத்காரம், என்று பேசிவிட்டால் உரிமை வந்துவிடுமா? அதிகம் வேண்டாம்-இவர்களின் முயற்சியால் ஒரு கோயிலாவது சிறுபான்மை மக்களுக்கு திறந்து விடப்பட்டதுண்டா? ஒரு தேனீர்க்கடைப் பிரவேசம் நடைபெற்றதுண்டா?

பலாத்காரம், புரட்சி என்று பேசி சிறுபான்மைத் தமிழர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டு, ஏனைய தமிழர்களுடன் மோதுதலை ஏற்படுத்தி அதில் ஏதாவது அரசியல் லாபம் பெற முடியாதா என்று பார்க்கிறார் போலும் திரு. சண்முகதாசன். ஆனால், தமிழரசுக் கட்சியும் தமிழ் பேசும் மக்களும் இந் நாட்டிலுள்ளவரை திரு. சண்முகதாசனின் 'சீனத்' தந்திரங்கள் பலிக்காது என்பதை அவரும் அவரது கூட்டாளிகளும் உணரவேண்டும்.

### இஸ்லாமிய சோசலிச முன்னணி

ஜனாப் பதியுதீன் மஹ்மூதை தந்தையாகவும், சுதந்திரக் கட்சி தலைவி ஸ்ரீமாவோ அம்மையாரைத் தாயாகவும் கொண்டு பிறந்த இஸ்லாமிய சோஷலிச முன்னணியும் வடக்கு நோக்கி எட்டிப்பார்த்திருக்கிறது.

இந்த முன்னணி பற்றி வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் விழிப்புடனிருக்க வேண்டும். இது தனியே முஸ்லிம்களின் முன்னணியாக இருந்தால் நமக்கு கவலையில்லை. ஆனால், இது முழுக்க முழுக்க சுதந்திரக் கட்சியின் கிளை ஸ்தாபனமே.

வடக்கிலும், கிழக்கிலும், நேரடியாகப் போக முடியாத சுதந்திரக் கட்சி 'இஸ்லாமிய சோசலிச முன்னணியில்' ஏறி அங்கு நுழையப் பார்க்கிறது. அவ்வளவுதான்.

இலங்கையிலுள்ள சிறுபான்மையினர் விஷயத்தில் சுதந்திரக் கட்சியின் கொள்கையென்ன என்பது வெள்ளிடைமலை. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல, ஒரே மொழியைப் பேசி ஒன்றாக வாழும் தமிழரையும் முஸ்லிம்களையும் பிளவுபடுத்தி, அதன் மூலம் இந்த நாட்டில் ஒரு சர்வ சிங்கள ஆட்சியை ஏற்படுத்துவதே சுதந்திரக் கட்சியின் இலட்சியம். வடமாநிலத்தில் சிங்களவரைக் குடியேறும்படி திரு. ஆர். ஜி. சேனநாயக்கா சமீபத்தில் கூறியிருப்பதும் ஈண்டுக் கவனிக்கத் தக்கது.

### சிங்களம் தாய் மொழியா?

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் முஸ்லிம்கள் தமிழைத் தமது தாய் மொழியென்று கருதி வாழ்பவர்கள். ஆனால் இஸ்லாமிய சோசலிச முன்னணித் தலைவரோ சிங்களம்தான் முஸ்லிம்களின் தாய் மொழியென்று கூறுபவர். இஸ்லாமிய சோஷலிச முன்னணித் தலைவரின் இந்த முடிவை வடக்கிலும், கிழக்கிலும் வாழும் முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா?

### சிங்களவரா? முஸ்லிமா?

இன்று முஸ்லிம்களுக்காக உருகுவது போல சுதந்திரக் கட்சியினர் காட்டிக் கொள்ளலாம். ஆனால், முஸ்லிம்களின் துணை கொண்டு தமிழ் மக்களை நசித்து விட்டால் அதன் பின்னர் சுதந்திரக் கட்சி முஸ்லிம்களுக்கு எதிராக தனது வெறியைத் திருப்பி விடாதென்பது என்ன நிச்சயம்?

முஸ்லிம்கள் இன்னுமொன்றையும் கவனிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஜனாப் பதியுதீன் மாமூத் பேசும் போது சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால், யாழ்ப்பாணம் இரட்டை மெம்பர் தொகுதியாகுமென்றும் அப்பொழுது ஒரு சிங்களவர் அல்லது முஸ்லிம் பிரதிநிதியாக வர வாய்ப்புண்டு என்றும் கூறியிருக்கிறார்.

இங்கு தான் அரசியற் சூது இருக்கிறது. முஸ்லிம்கள் அல்லது சிங்களவர்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவரிடையே வெறுப்பை ஏற்படுத்தும் முயற்சியா?

## தமிழரசாரின் பேச்சுகளை திரித்துக் கூறும் சிங்களஏடு

'சிங்கள பௌத்தர்களுக்கு தேவையானபடி இந் நாட்டை ஆட்சி புரிய இடமளிக்க முடியாதென்று தமிழரசு எம். பி. கூறினார்' என்னும் தலைப் பின் கீழ் எத்த 26. 3. 67ம் திகதி வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:

'இந்த நாட்டை தனி சிங்கள—பௌத்த நாடாக்கு வதற்கு சிறிமாவுக்கோ பீலிக்சுக்கோ, ஆர். ஜிக்கோ ஒருநாளும் இடம் கிடைக்காது. என்ரு வது அத்தகைய ஒரு முயற்சி செய்யப்பட்டால் கடைசித் தமிழனின் பிரேதத்தின் மீது சென்றுதான் செய்ய முடியும் என்பதை அவர்களுக்கு நினைவு படுத்த வேண்டியிருக்கிறது என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் மலை நாட்டில் ஹாலுகங்கை அஞ்சிகடை பஜாரில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பிரமாண்டமான தொழிலாளர் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

'இந்த நாடு சிறிமாவுடையதோ, டல்லியுடையதோ, சிங்களவர்களுடையதோ அன்று. தோட்ட மக்களை கள்ளக் குடியேற்றக்காரர்களென்று கூறுவதை அனுமதிக்க முடியாது. 525, 000 அல்ல—ஒரு தமிழ் சகோதரரைக்கூட பலவந்தமாக நாடுகடத்த நாங்கள் அனுமதிக்கமாட்டோம்' என்று திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறினார்.

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் பேசுகையில், தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் சேரும் போது இந்தியர்களைப் பலவந்தமாக நாடு கடத்துவதில்லை யென்று திரு. டட்லி சேனநாயக்கா தங்களுக்கு வாக்களித்தாரென்றும், சொந்த விருப்பத்தின் மீது இந்தியாவுக்குச் செல்லும் முட்டாள்கள் யாரும் இப்போழுது தோட்டத்தொழிலாளர். மத்தியிற் கிடையாதென்றும்; இந்த அரசாங்கத்தில் ஒரு இந்தியச் சகோதரர்கூட இந்தியாவுக்கு அனுப்பப்பட மாட்டாரென்பதை தான் திட்டவட்டமாகத் தெரிவிப்பதாகவும் கூறினார்.

'இந்தியர் என்று கூறி எந்த ஒரு தமிழ் பிரசையாவது இந்தியாவுக்குப் பலவந்தமாக அனுப்பப்பட்டால் அதுவே இந்த அரசாங்கத்தின் முடிவு காலமாக இருக்கும். சிறிமா சாத்திரி ஒப்பந்தம் மூலம் சிறிமாவைப் போலவே சாத்திரியும் எமக்கு துரோகம் செய்தார். சிறிமாக்களுக்குச் சரியான பாடம் நாங்கள் கற்பித்தோம். சாத்திரியின் ஒம் பனைச்சேர்ந்த இந்திராக்களுக்கு எம். ஜி. ஆர், அண்ணாதுரை போன்ற தேசபக்தர்கள் பாடம் கற்பித்தனர். எமக்கு தீங்கு விளைவிக்கும் எந்த பெரிய மனிதனுக்கும் இந்த கதிதான் ஏற்படும்' என்று திரு. நவரத்தினம் மேலும் கூறினார்.

மேற்கண்டவாறு செய்தியைத் திரித்து வெளியிட்டுள்ள எத்த அந்தக் கூட்டத்தைப் பற்றி மேலும் கூறுவதாவது.

'இக் கூட்டத்தை முன்னிட்டு முழு ஹாலுகங்கை நகரமும் மூவர்ண தமிழரசுக் கொடிகளாலும், இருவர்ண தி. மு. க. கொடிகளாலும். அலங்கரிக்கப்பட்டிருந்தது.

கூட்டத்தையொட்டி நடைபெற்ற ஒரு பிரமாண்டமான ஊர்வலத்தில் 'அண்ணாதுரை சென்ற பாதையில்! செல்வநாயகம் செல்லும் பாதையில்! —நாம் போகிறோம் வெற்றிப் பாதையில்! நமது தாய் நாடு இலங்கைநாடு! நமது வெற்றி நாடு இந்திய நாடு! — செல்வராஜா அசரணுவார்'! என்ற கோஷங்கள் கோஷிக்கப்பட்டன.' இவ்வாறு கூறிமுடிக்கிறது. எத்த ஏடு.

## சிங்கள விவசாயிகளுக்கு மன்னாரில் இடமில்லையாம்

### மாசூலை அரசாங்க அதிபர் கைப்பற்றினாராம்

ஓர் அங்குல நிலத்தையும் வீணாக்காமல் மூலைமுடுக்குகளிலெல்லாம் கமம் செய்யுங்கள் என்ற அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி மன்னார் மாவட்டத்தில் 10 ஏக்கர் அரசாங்கக் காணியில் விவசாயம் செய்த எம். ஏ. டிங்கிரி பண்டா என்ற விவசாயிக்கு மன்னார் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசய்யா ரூபா 4725 அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறியதால் அவருடைய உத்தரவின்மீது அந்த விவசாயி கமம் செய்திருந்த வயலிலுள்ள நெல்லை அறுத்துச் சாக்குகளில் மூட்டை கட்டி எடுத்துச் சென்று விட்டனர் என்று 'எத்த' (27-3-67) ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

தரிசு நிலங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்படும் என்ற அரசாங்கப் பிரசாரத்தை நம்பி டிங்கிரி பண்டா என்னும் சிங்கள விவசாயி தரிசாகக் கிடந்த வயலில் 10 ஏக்கர் காணியில் விவசாயம் செய்தார். யோத வீவாவுக்குச் செல்லும் வாய்க்காலிலிருந்து அவர் வயலுக்குத் தண்ணீர் பெற்றார்.

இதற்காக ரூ 4725 மூன்று தினங்களில் அரசாங்கத்துக்குச் செலுத்துமாறு அரசாங்க அதிபர் திரு நேசய்யா டிங்கிரி பண்டாவுக்கு உத்தரவிட்டார். இத் தொகையைச் செலுத்தக்கூடிய நிலையில் டிங்கிரிபண்டா இருக்கவில்லை.

எனவே அவரது நெல் மாசூலை தேசிய மயமாக்குவதென்று அரசாங்க அதிபர் முடிவு செய்தார். அவரது கட்டளையின்மீது [illegible] புளியாடிக்குளம் கிராம சேவகர் டிங்கிரி பண்டா விவசாயம் செய்த மாசூலைக் கைப்பற்றினர். இந்த நெல் மாசூல் 75 மூட்டைகளாகும்.

டிங்கிரிபண்டாவுக்குநேர்ந்த கதி மன்னார் மாவட்டத்தில் சமரவீர பண்டார என்ற சிங்கள விவசாயிக்கும் நேர்ந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பண்டா போன்ற சிங்கள விவசாயிகள் விவசாயம் செய்வது குறித்து அரசாங்க அதிபரும் அந்தப் பிரதேசத்திலுள்ள தமிழரசுவாதிகளும் துவேஷ எண்ணம் கொண்டுள்ளனர். இம்மாதிரி இதற்குமுன் நடந்ததில்லை. துவேஷத்தாற்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது அந்தப் பிரதேசத்திலுள்ள சிங்கள விவசாயிகளின் கருத்தாகும்'' இவ்வாறு 'எத்த' மேலும் எழுதியுள்ளது. ''நேசையாக்களின் அரசாங்கம் பண்டாவின் நெல்லைக் கொள்ளையிட்டது'' என்ற தலைப்பு இச்செய்திக்குக் கொடுக்கப்பட்டுள்ளது-

இதுபற்றி எத்த எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

நாடு உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ள நிலையிலே பத்து ஏக்கர் காணியைக் [illegible] பரிசு வழங்க வேண்டியிருக்க அவனுடைய முழு மகசூலையும் திருடிக்கொள்வது அவனுக்குச் செய்த அநியாயம் மட்டுமல்ல அரசாங்கத்தின் புதிய கொள்கையும் அதனால் தெளிவாகிறது. அத்துடன் அவர்களின் விவசாயம் வாணொலிக்கும் பத்திரிகைகளுக்கும் மட்டுமே வரையறுக்கப்பட்டதென்பது இதிலிருந்து தெரிகிறது. நேசையாக்களின் அரசாங்கத்தின்கீழ் மன்னார் சிங்கள விவசாயி ஒருவன் அடிவைக்க அனுமதியில்லாத தமிழரசின் ஒரு பகுதியாகிவிட்டதென்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

## சிங்கள இதழ்களில்...

### நாவலுக்கு ஆட்சேபம்

மகாநாயக்கதேரோ ஒருவர் காதல் விவகாரமொன்றிற் சிக்கியதாகக் குறிப்பிட்டு எழுதப்பட்ட ''யோகம்'' என்னும் ஒரு தொடர் கதையை ''வீரகேசரி'' வெளியிட்டது பற்றி பௌத்த மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டிருப்பதாக எத்த (26-3-67) எழுதியுள்ளது.

இதுபற்றி எத்த வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:—

''பௌத்த சாசனத்தையும் மகாசங்கத்தையும் குறிப்பாக மல்வத்தை சங்க பீடத்தையும் அபகீர்த்திக்கும், நிந்தனைக்கும் உட்படுத்தி பெப்ரவரி 17ந் திகதி 'வீரகேசரி' என்னும் தமிழ்ப் பத்திரிகையில் வரலாற்றுக் கதை என்ற போர்வையில் வெளியிட்டிருந்த மகாநாயக்க தேரோவின் காதல் விவகாரம் பற்றிய செய்திபற்றி மல்வத்தை அஸ்கிரி ஆகிய இரு சங்க பீடங்களும் தங்களின் அதிருப்தியைத் தெரிவிக்கின்றன என்று மல்வத்தை பௌத்த பீடாதிபதி வண. அமுனுகம ராஜகுரு ஸ்ரீ விபஸ்ஸி மகாநாயக்கா தேரோ 'எத்த' பத்திரிகைக்குக் கூறினார்.

வீரகேசரி இவ்வாறு பௌத்த சமயத்தையும் மகாநாயக்க பதவியையும் கேலிக்கூத்தாக்கியது பற்றி சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும், தான் பிரதமமந்திரியை சந்தித்து இதனைக் கூறவிருப்பதாகவும் வண. மல்வத்தை மகாநாயக்கதேரோ தெரிவித்தார்.

அன்னிய சமயிகளின் கைக்குப்போகும் வீரகேசரி போன்ற பத்திரிகைகள் பௌத்தத்தை கேலிக்கூத்தாக்தாக்கும் இம்மாதிரியான விஷயங்களை வெளியிடுவது மிகவும் அபாயமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். வீரகேசரி ஒரு பெரிய பாவகாரியத்தைச் செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்

இது சம்பந்தமாக கல்வி மந்திரி திரு. இரியகொல்ல எத்த பத்திரிகைக்கு கூறியதாவது:

'இது மகாசங்கத்தை நிந்திப்பதற்காகச் செய்யப்பட்ட கீழ்த்தரமான முயற்சியாகும். இதனைவெளியிடுவதின் மூலம் வீரகேசரி பௌத்த சாசனத்தை நிந்தனை செய்துள்ளது என்று கூறலாம் பௌத்த சாசனத்துக்கு செய்யப்பட்ட இந்த நிபந்தனைக்காக அக்குற்றத்துக்குப் பொறுப்பானவர்களை நிறுத்தி வைத்து மண் அடிக்க வேண்டும். இது பற்றி எனது பலத்த கண்டனத்தைத் தெரிவிக்கிறேன்'

பம்பலப்பிட்டி வஜிராமாதிபதி வண. மடிஹேபஞ்ஞா சீஹ மகாநாயக்கதேரோ எத்த பத்திரிகைக்கு கூறியதாவது:-

'நாவல் என்ற பெயரால் வீரகேசரி பௌத்த சமயத்தை நிந்தித்துள்ளது. என்று கூறலாம். குறிப்பிட்ட வரலாற்றுச் சம்பவம் உண்மையோ, இல்லையோ அத்தகைய ஒரு சம்பவத்தை எடுத்துத் தூக்கிக் காட்டுவது பொதுவாக பௌத்த சமயத்துக்கும், மகாநாயக்க பதவிக்கும் தீங்குசெய்வதாகும்.

எத்த பத்திரிகைக்கு டாக்டர் மலலசேகரா அளித்த பேட்டியைஅது 27.3.67ந்திகதி வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிட்டிருப்பதாவது.

'எல்லோர் மத்தியிலும் ஒற்றுமையைக் கட்டி எழுப்பும் இந்த வேளையில் வீரகேசரி ஒரு வணக்கத்துக்குரிய பெரியாரைப் பற்றி இவ்வாறு எழுதுவது தகாது. இந்தக் கதை உண்மையா, பொய்யா என்பது எனக்குத் தெரியாது. இம் மாதிரி எழுதுவதால் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதும் தெரியவில்லை. உண்மையையும் கூட காலத்தை அனுசரித்துக் கூற வேண்டும்.'

## இடதுசாரி....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜனப் பதியுதீன் கூறுவானேன்! முஸ்லிம் பிரதிநிதி வர முடியும் என்று ஏன் உறுதியாகச் சொல்லவில்லை? காலப் போக்கில் முஸ்லிம்களையும் சிங்களவராக்கும் திட்டமா? அல்லது, தனித் தமிழ் பிரதேசமான வட மாநிலத்திலிருந்து ஒரு சிங்களவரைத் தெரிவு செய்ய சந்தர்ப்பம் ஏற்படுத்துவதன் மூலம் வடக்கிலும் பாத்தியதை கொண்டாட சுதந்திரக் கட்சி இஸ்லாமிய சோஷலிச முன்னணி மூலம் செய்யும் சூழ்ச்சியா இது?

இறுதியாக ஒன்று. 'பேச்சுப் பேச்சென்னும் பெரும் பூனை வந்தக்கால் கீச்சுக் கீச் சென்னும் கிளி' என்பது நாடோடி வழக்கில் கூறப்படுவது. அது போல, தமிழரசார் தமது முழுக்கவனத்தையும் திருப்பி, பிரச்சார இயந்திரத்தை வேகமாக முடுக்கிவிட்டால், இடது சாரிகளும், சண்முகதாசன்களும், சோஷலிச முன்னணிகளும் வடக்கிலிருந்து இருந்த இடம் தெரியாமற் போய்விடுவது உறுதி.

### புத்தாண்டு வேண்டுகோள்

தமிழ் அரசாங்க ஊழியர்களே! தமிழிலேயே சகல அரச கருமங்களையும் செய்ய முன் வாருங்கள்' இவ்வாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு புத்தாண்டு வேண்டுகோள் விடுக்க இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பல கலைகளையும் பயில முஸ்லிம்களுக்கு

# ஒரு பல்கலைக் கழகம் வேண்டும்

பல்கலைக்கழகம் என்று சொல்லும்போது அது பலகலைகளையும் கொண்ட தன்னிறைவு பெற்ற கலைக் களஞ்சியமாக விளங்கவேண்டும். அறிவியல், பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம், கலை, கலாசசாரம் என்பனவற்றையெல்லாம் ஒன்றாக அளிக்கக் கூடியதாகவிருக்க வேண்டும். அவையெல்லாவற்றையும்விட தாய்மொழிக்குத் தனிச் சிறப்பையும் வழங்கக் கூடியதாக இருக்கவேண்டும். அதைவிட்டு ஏதோ ஒரு அம்சத்தை மட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு கழகம் அமைக்கப்படுமேயானால் அது பல்கலைகளையுங் கொண்ட ஒரு பல்கலைக் கழகமாகாது.

உதாரணமாக, மூதூர் முகம்மதலி கேட்ட முஸ்லிம் கலாசாரப் பல்கலைக் கழகம் என்பது ஒரு பல்கலைக்கழகம் இல்லை. அது ஒரு முஸ்லிம் கலாசாரக் கழகம் மட்டுமேயாகும். எனவேதான் பல்கலைக் கழகம் என்ற பெயரில் பலகலைகளுமற்ற, வெறுமையான ஒரு கலாசாரக் கழகத்தை மட்டும் முஸ்லிம் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்துவிட்டுப் பேசாமல் இருக்கத் தமிழரசார் விரும்பவில்லை.

கலாசாரத்தை மட்டும் வளர்த்து முஸ்லிம் சமுதாயம் முழுமை பெற்றுவிட முடியுமா? இதர கலைகள் அவர்களுக்குத் தேவையில்லையா?

#### தமிழரசார் பற்றித் தப்புக் கணக்கு

சில முஸ்லிம் தலைவர்களும் தமிழரசாரைப்பற்றித் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள். ஏனோ இவர்கள் உண்மையை மறைத்து ஒத்தூதுகின்றார்கள் என்பது புரியவில்லை.

அதாவது முஸ்லிம் மக்களுக்குத் தமிழரசு சதி செய்துவிட்டதாம். அது முஸ்லிம் மக்களுக்கல்ல, இந்து மக்களுக்குமே தனியே ஒரு கலாச்சாரக் கழகம் இருந்துவிட்டால் போதும் என்று திருப்திகொள்ளவில்லை.

திரு. பொன்னம்பலம் அவர்கள் இந்து பல்கலைக்கழகம் தான் வேண்டும் என்கிறார். அதையும்கூட இதன்காரணமாகத்தான் தமிழரசார் எதிர்க்கின்றார்கள். ஆனால்,

**கார்நிலவண்ணன்-அல்லி**

ஒரு தன்னிறைவுபெற்ற தமிழ் பல்கலைக்கழகம் வேண்டும் என்று திரு பொன்னம்பலம் கேட்டாலுஞ்சரி, எந்தவொரு பிசாசு கேட்டாலும்சரி அதை முழுமனதோடே ஆதரிப்பார்கள். எந்தவொரு சமுதாயமும் குறை வளர்ச்சியைப் பெற பெறவேண்டும் என்று தமிழரசார் விரும்பியதில்லை. நிறைவளர்ச்சி; பூரண வளர்ச்சி பெற வாய்ப்பளிக்க வேண்டுமென்பதேஇவர்களது பேரவாவாகும்.

#### எத்துணை ஆனந்தம் இவர்களுக்கு

தமிழ்ச் சமுதாயத்தைப் பிரித்துப் காட்டிக் கொடுக்கும் தொழிலைச் சில கனவான்கள் இன்னும் விட்டுவிடவில்லையே. தமிழர் சாதி மத பேதமற்று இனவுணர்ச்சி மொழியுணர்ச்சியல் உந்தப்பட்டு ஒன்று சேரும் வேளையில், தமிழரசார் அரும்பாகுபட்டுக் கட்டிவரும் தமிழ்க் கோட்டையைத் தகர்க்க முயலுகின்றார்களே சில தன்னலவாதிகள். தமிழ் மக்களை அடிமைகளாக்கி அடகு வைப்பதில் இந்த ஆலவட்டங்களுக்குத்தான் எத்துணை ஆனந்தம்.

#### போற்றுவர் தூற்றுவர்

பிரித்து வைத்துச் சிரித்து வாழ்வதில் பெரிதும் சிறப்பு வாய்ந்தவர் எங்கள் தனிப் பெருந் தலைவர்கள். இந்துக்களுக்கொன்று வேண்டுமென்கிறார்கள். இதைத் தமிழ் மக்கள் குறிப்பாக இந்துமக்களே வேண்டாமென்கின்றனர். அந்த எண்ணங்கூட ஈடேறவில்லை, இப்பொழுது இஸ்லாமியருக்கொன்று என்பதை அடைந்து விட்டார்கள் கிறிஸ்துவர்களுக்கு வேண்டாம் என்கின்றார். தேர்தல் காலத்தில் அவர்களுடைய ஆதரவுதான் வேண்டுமென்கின்றார்கள்.

இந்தத் திருகுதாளங்கள் எங்கள் தமிழரசாரிடமில்லை. இதனால்தான் தன்னுடைய மூக்கு அறுபட்டாலும் தமிழரசாருக்குச் சகுனப்பிழையாகட்டும்என்று ஒற்றைக் காலிலே நிற்கின்றார் தனிப் பெருந்தலைவர். ஒற்றுமையான சமுதாயத்தைக்காணத் துடிக்கும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவத் தமிழ் மக்கள் தனிக்கலாசாரக் கழகத் திட்டங்களை வெறுக்கின்றனர் இத்திட்டத்தை, இதை ஏற்படுத்தியவர்களை இன்று போற்றுபவர்கள் கட்டாயமாக என்றோ தூற்றுவர். கலாசாரப் பல்கலைக் கழகம் என்பது ஒரு ஏமாற்றுவித்தை யென்பதை ஒவ்வொரு முஸ்லிமும் உணரல் வேண்டும்.

---

### அண்ணாவுக்கு ஒரு வேண்டுகோள்

'தமிழகத்தில் அறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் பல எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் அங்கம் வகிப்பதையிட்டு யாழ். இலக்கிய வட்டத்தினராகிய யாம் பெரு மகிழ்ச்சி கொள்கின்றோம். பாராட்டுகின்றோம். இதனால் தமிழகத்துக் கலை, இலக்கிய உணர்வுகளில் பெரும் மாற்றம் ஏற்படும். ஏற்படவேண்டுமென்றும் விரும்புகின்றோம். அதே வேளையில் தமிழகத்திலிருந்து இங்கு இறக்குமதியாகும் பெரும்பான்மையான நூல்களும். பத்திரிகைகளும் தரம் குறைந்தவைகளாகவும், மக்களின் இரசனையைத் தவறான வழிக்கு இழுத்துச் செல்வனவாகவும் அமைந்துள்ளது. அது பற்றி இங்குள்ள இலக்கிய இயக்கங்கள் வாசகர்கள் ஆகியோர், ஏற்கனவே அதிருப்தி தெரிவித்துள்ளனர். இது பற்றித் தங்கள் அமைச்சரவை ஏற்ற நடவடிக்கைகளைக் கையாண்டு தரமற்ற நூல்கள் சஞ்சிகைகள் இங்கு இறக்குமதியாவதைத் தடைசெய்ய வேண்டுமென யாழ். இலக்கிய வட்டம் கேட்டுக் கொள்கின்றது.'

மேற்கண்ட தீர்மானம், கடந்த 16. 3. 67 வியாழக்கிழமை மாலை திரு. ஏ. சி. பொன்னுத்துரை தலைமையில் யாழ். மாநகரசபை ஊழியர் பொழுதுபோக்குச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற யாழ். இலக்கிய வட்டக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

### அண்ணா, செல்வாவுக்கு பாராட்டு

கொழும்பு தமிழ் சமுதாய முன்னேற்ற மன்றத்தினர் கடந்த 18ந் திகதி மாலை 6 மணிக்கு தமது மண்டபத்தில் அறிஞர் அண்ணாவின் தி. மு. க. வெற்றிக்காகவும் மலையக மக்களின் நல்வாழ்வுக்காகவும் ஒரு சுமுகமான முடிவைக்கண்ட தந்தை செல்வநாயகத்திற்கும் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் மாபெரும் பொதுக் கூட்டத்தை நடத்தினர்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த புரட்சிபுலியழகன் செ.ஜோ. வின்சென்ட் பிரான்சிஸ் அறிஞர் அண்ணாவின் படத்திற்கும் தமிழரசுத் தந்தை செல்வநாயகத்தின் படத்திற்கும் மலர்மாலை அணிவித்துப் பேசுகையில் கடந்த இருநூற்றாண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த தமிழ்த்தாயை விடுவித்த பெருமை அறிஞர் அண்ணாவையைச் சாரும் எனக் குறிப்பிட்டார். அதே போன்று இன்று ஈழத் தமிழர்களின் மொழி, நல்வாழ்வு இவற்றிற்காக பல தியாகங்களைச் செய்து போராடிய தந்தை செல்வநாயகத்திற்கும் தமிழ்கூறும் நல்லுலகம் நன்றிகூறக்கடமைப்பட்டுள்ளதென்றார். இலங்கையிலிருந்து திரும்பும் மலையக மக்களுக்கு புனர்வாழ்வு அமைத்துக்கொடுக்க தனது முதல் அறிக்கையின்மூலம் கருத்து வெளியிட்ட அறிஞர் அண்ணாவுக்கும் அம்மலையக மக்களின் நல்வாழ்வுக்காக [illegible] நாடுகடத்தலைத் தவிர்க்கவும் தனி வாக்காளர் பட்டியலை இல்லாமலும் செய்த நமது தமிழரசுத் தந்தைக்கும் மலைநாட்டு மக்கள் அனைவரும் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர் எனக் கூறினார்.

அடுத்துப் பேசிய கவிஞர் ஆ. கா. வேலன் தமிழ் மக்களின் மானத்தையும் அவரின் மொழி கலாசாரம்இவற்றைக் காப்பாற்றவும் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் அறிஞர் அண்ணாவின் மந்திரி சபை தமிழ்நாட்டு மக்களின் நிலையறிந்து ஆட்சி செலுத்தப் போவதைக் கண்டு தமிழ் உலகம் பெருமைப்படுகிறதென்றார். தமிழ் நாட்டுப் பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் தமிழ் போதனமொழியாகவும் ஆகாஸ்வாணி என்ற வடசொல்லை இனிமேல் தமிழ்நாட்டு வானொலியில் பிரயோகிக்காமலிருக்க அண்ணா மந்திரிசபை வழி வகுக்கும் எனத்தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

இதன்பின் திரு ஆ. தங்கசாமி பேசினார். அவரையடுத்து நன்றியுரை வழங்கிய திரு ஆர். கிருஷ்ணன் தமிழ்ப் பல்கலைகழகம், மாவட்டசபை முதலிய கோரிக்கைகளையிட்டு பிரதமருக்கும் கல்வி அமைச்சருக்கும்ஒரு மகஜரைசமர்ப்பிக்கவும் உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வத்தைச் சந்தித்து தமது கருத்துக்களை வழங்கவும் மன்றம் தீர்மானித்துள்ளதாகக் கூறினார்.

கூட்டமுடிவில் கவிஞர் வேலனால் இயற்றப்பட்ட அண்ணாவினதும் தமிழ்த் தந்தை செல்வநாயகத்தினதும் கவிதைகள் பாடப்பெற்றன. திரு பாட்டிவாணன், திரு [illegible], இராஜையா, திரு [illegible] ணன் ஆகியோரும் பேசினர்.

---

## மக்கள் குரல்

# தமிழ் தலைவர்களை மறக்கும் தமிழ் ஏடுகள்

இலங்கையில் வெளியாகும் தமிழ் தினசரிப் பத்திரிகைகள் இப்பொழுது தமிழ் தலைவர்களை மறந்து கொண்டிருக்கின்றது. இதற்கு உதாரணமாக 22-3-67-ல் வெளியான தமிழ் தினசரிப் பத்திரிகைகளில் ஒன்றிலேனும் முன்னாள் மூதூர் முதல் எம். பியும், தமிழ்த் தலைவருமாகிய திரு. த. ஏகாம்பரம் அவர்களின் நினைவு தினத்தையொட்டி ஒரு கட்டுரையோ, கவிதையோ வெளியிடாதது வேதனைக் குரிய செயலாகும்.

தமிழ் மகனைப் பற்றி ஒரு தமிழ்ப் பத்திரிகையேனும் எழுதாதது வருந்தத்தக்க செயலாகும். அதே தினத்தில் இறந்த ஒரு சிங்களத் தலைவரைப் பற்றி எழுதும் தமிழ் பத்திரிகைகள் ஏன் ஒரு தமிழ்த் தலைவரைப்பற்றி எழுதக் கூடாது? இன பேதத்தை உண்டுபண்ணும் நோக்கமாக இந்தக் கேள்வியை நான் எழுப்பவில்லை.

தமிழ் மக்களின் உரிமையை மீட்க அல்லும், பகலும் பாடுபட்டு அடி, உதை வாங்கி தமிழ் மக்களின் உரிமைப் போரில் உயிர்நீத்த உத்தம குணசீலன் அமரர் ஏகாம்பரம் அவர்களை தமிழ் தினசரிப் பத்திரிகைகள் வேண்டுமென்றே மறந்துவிட்டன. இந்தச் செயல் தமிழ் மக்களுக்கு மாத்திரம் செய்த துரோகமல்ல. தமிழ் அன்னைக்கே இழைத்த பெரிய குற்றமாகும்.

வே. பத்மகாந்தன்,
நல்லூர் வடக்கு.

### என்றுமில்லாத பேராபத்து

என்றுமில்லாத பேராபத்து இன்று எம் இனத்துக்குச் சில தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் மூலம் திட்டமிட்டு ஏற்படுத்தப்படுகிறதோ என ஐயுற வேண்டியுள்ளது. எம் பண்பாட்டைக் கெடுத்து அறிவைத்தரும் செய்திகளை மறைத்து கொள்ளைக்கும் கொலைக்கும் கடத்தல் கற்பழிப்பு ஆகியவற்றிற்கும் முதலிடம் கொடுத்து, 5சதத்துக்கும் 10 சதத்துக்கும் விற்கும் துண்டுப் பத்திரிகைகள் இன்று தமிழர்தம் அரசியற்துறையில் நஞ்சு பாய்ச்சுவது வெள்ளிடைமலை. இப்பத்திரிகைகளை நடத்துவோர் யார் என்பதை ஆழ்ந்து சிந்திக்கும் படி வேண்டுகிறேன். இவர்கள் தமிழரின் நலன் மீது அணுவளவேனும் அக்கறை கொண்டவர்களா என்பது சிந்தனைக்குரியது.

இவற்றையெல்லாம் உணராது எம் மக்கள் இப் பத்திரிகைகள் வகுக்கும் வழியிலே விரைந்து சென்று பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் செல்லவிடின் இன்னும் 8, 10 வருடத்துள் எம் இனத்தவர் தமது அறிவு, சிந்தனை, உயர்வு ஆகியவற்றில் எத்தகைய படுமோசமான மாற்றங்களுக்கு உள்ளாவார்கள் என்பதை தமிழ் மக்கள் சிந்தனைக்கெடுக்க வேண்டும்.

இந் நிலையை நிறுத்தித் தடுப்பது எவ்விதம்? பேச்சு, எழுத்து, பிரச்சாரக்கூட்டம், கண்டனத்தீர்மானம், மற்றும் இயக்க நடவடிக்கை என எம் இனத்தின் நலன் கருதியும் அதன் நல் வாழ்வு வேண்டியும் அனைத்தும் செய்யப்பட வேண்டும்.

க. பத்மநாதன்
புங்குடுதீவு.

### செய்திக்கு மறுப்பு

11-3-67 சனிக்கிழமை தினபதிப் பத்திரிகையில் 'வெளியேறினார்கள் தமிழரசு வாலிபர்கள்' என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.கரவெட்டி கிழக்கு கிழவித் தோட்டத்தில் உள்ள தமிழரசு வாலிப முன்னணி அங்கத்தவர்கள், சிலர் கட்சி தேர்தல் வாக்குறுதிகளை மீறிவிட்டது என்றும, இலங்கை. இந்தியப் பிரச்சினையில் ஏதோ தவறு செய்துவிட்டது என்றும், குற்றம் கூறி வாலிப முன்னணியிலிருந்து வெளியேறி காங்கிரஸ் வாலிப முன்னணியை ஆரம்பித்துள்ளார்கள், என்று அச் செய்தி வெளியாகியிருக்கிறது.

இச் செய்தி ஒரு பொறுப்பற்றதென்றும், ஒரு கட்சியை மக்கள் தவறாக புரியவைப்பதற்கு பயன்படுத்தப்பட்டது என்றும் கூறக்கூடியதாகும். இச்செய்தியில் குறிப்பிட்டிருந்தபடி கரவெட்டி கிழவித் தோட்டத்தில் எங்கள் வாலிப முன்னணிக் கிளை ஒன்று இருக்கவில்லை. அதில் குறிப்பிட்ட பெயர்கள் கூட எங்கள் அங்கத்தவர்கள் பதிவேட்டில் கிடையாது. கரவெட்டி கிழவித் தோட்டத்தில் எங்களால் ஒரு கிளை பதிவு செய்யப்படவுமில்லை. அப்படி பதிவு செய்யப்படாமல் இயங்குவதற்கு நாம் அனுமதி கொடுப்பதுமில்லை. தெருவில் நிற்கும் சிலர் தாங்கள் தமிழரசு வாலிபமுன்னணியினர் என்று கூறிவிட்டு தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி அமைக்கின்றோம் என கூறிக்கொண்டால், அதைப் பொறுப்பற்ற முறையில் பத்திரிகையில் பிரசுரிப்பது ஒரு பத்திரிகை நிருபருக்கோ அல்லது பத்திரிகைக்கோ அழகல்ல.

இச் செய்தி எங்கள் இயக்க வாலிபர்களை அவமதிப்பதாகும். எமது வாலிபமுன்னணிகள் இப்படி நடக்கமுடியாது. அவர்கள் ஸ்தாபனரீதியாக இயங்குபவர்கள். எங்கள கிளைகளில் எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், சபையில் விவாதித்த தீர்மானங்களை வாலிப முன்னணி தலைமைப்பீடத்திற்கும், கட்சித் தலைமைப் பீடத்திற்கும் அனுப்பி முடிவெடுத்துக் கொள்வார்கள். அவர்களது குறைகள், சந்தேகங்கள் அனைத்தும் செயற்குழுவில் எடுக்கப்பட்டு தீர்க்கப்படும். எனவே இச் செய்தி எங்கள் சட்டதிட்டங்களுக்குக் கூட மாறுபட்டதாகும்.

எனவே இப்படி பொறுப்பற்ற செய்திகளை மக்களிடையே பரப்ப எத்தனிப்பது பத்திரிகை நிருபர்களின் கௌரவத்திற்கும் இழுக்காவதுடன், பத்திரிகாதர்மத்திற்கும் முரணாவதாகும். மேற்படி செய்திக்கும் எங்களது கிளைகளுக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்பதையும் கூற விரும்புகிறேன்.

சி. பாலசிங்கம்
நிர்வாகச் செயலாளர்,
இ. த. வா. மு.
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழுக்கு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது தமிழரசுக் கட்சி"

## வா. மு. கூட்டத்தில் நவரத்தினம் பேச்சு

"நானூறு ஆண்டுச் சரித்திர வரலாற்றிலே தமிழுக்கு இடம் தரப்படாமல் இருந்த இலங்கையில், புதியதொரு, சகாப்தத்தை உண்டு பண்ணியதும், தமிழுக்குத் தனியிடம் பெற்றதுமான பெருமை, தமிழரசுக்கட்சியையே சாரும்.

இலங்கை இந்திய வம்சா வழியினரான, மலைநாட்டுத் தமிழருக்கு, துரோகம் இழைத்தது தமிழரசு அல்ல. 1948 ம் ஆண்டு தனிப்பெரும் தலைவர்களால் துரோகம் இழைக்கப்பட்டு அல்லல்படும் அவர்களுக்கு ஓரளவு ஆதரவு கொடுத்து வாழ்வளிக்கும் நோக்கத்துடனேயே, நாம் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை ஆதரிக்க விரும்பினோம்." என்று சாவகச்சேரியில் தமிழரசு வாலிப முன்னணியின் பொதுக் கூட்டத்தில் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: '1949-ம் ஆண்டு ஆரம்பமான தமிழரசுக் கட்சி, பண்புள்ள -விருப்பு வெறுப்புகளுக்கு இடங் கொடுக்காத - ஈழத்திரு நாட்டின் ஒவ்வொருவர் பேச்சிலும், மூச்சிலும் இணைந்து விட்ட-பந்த பாசங்களை அரசியலிற் கலக்காத ஒரு சிறந்த தலைவரின் கீழ் வளர்ந்து வந்தது.

'எமது தலைவர் ஈழத்தின் அரசியல் வரலாற்றிலேயும், உலகப் பெரியார்களின் வர

தலைவனின் கீழ், கட்டுக் கோப்பின் அடிப்படையிலே வளர்ந்த எமது கட்சி, ஏனைய கட்சிகளைப் போன்று சர்வாதிகாரப் போக்குடையது அல்ல' என்று திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

'எமது கட்சியின் குறிக்கோள் மலைநாட்டுத் தொழிலாளர் வாழவேண்டும். இவர்களிடையே வாழ்ந்து கொண்டிருக்கும், 10 லட்சம் மக்க



லாற்றிலேயும், இணையாக உள்ளவர் என்றால் ஆச்சர்யப்படு

வதற்கில்லை. இப்படியான ஒருவரும், இந்தியரா? அல்ல-இலங்கையரா? அல்ல - அந்தனை பேரும் நாடற்ற பிரஜைகள் என்றொரு தனிச்சாதியினர். இப்படியான, நாடற்ற பிரஜைகளில், ஐந்தேகால் இலட்சம் மக்களைத் தான் இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியும், என்று கூறியுள்ளது.

'இப்படியான நாடற்ற பிரஜைகளுக்கு ஒரு புகலிடம் அளிப்பது தான் எமது முழு நோக்கம். தமிழரசுக் கட்சி அழிந்தால் தமிழினம் அழியும். எமக்கு வெற்றி தோல்வியைப் பற்றி அக்கறை கிடையாது. எமது குறிக்கோளின் படி - இலட்சியத்தின் வழியில் நின்று தமிழினத்தின் வாழ்வுக்கு உழைப்போம்.

'எமது குறிக்கோளையும் நோக்கத்தையும் உணர்ந்த காரணத்தினாலேயே இலங்கையில் பெரும்பான்மையான தமிழரின், அபிமானத்தைப் பெற்றுள்ளார் தந்தை செல்வா. இதை அழித்துவிட சூழ்ச்சிகளைக் கையாளும் ஏனைய கட்சி நண்பர்களே! 'உங்களால் அது ஆகாத காரியம்' என்று கூறிவைக்கிறேன்.

'திராவிட முன்னேற்றக் கழகம் அன்று தோல்வி கண்டும்' இலட்சியப் பாதையில் வெற்றி நடை போட்டது. இன்று வெற்றிக்கு மேல் வெற்றி யீட்டி ஆளுங் கட்சியாகி அமைச்சர் அவை அமைத்து விட்டது. தமிழ் நாட்டின் தனிப் பெருந்தலைவனும்-சேர - சோழ - பாண்டிய முப்பேரரசர்களை நினைவு படுத்துபவருமான அறிஞர் அண்ணாவின் வெற்றிக்கு வாழ்த்து செய்தி அனுப்பியதைப் பற்றி, பலர் பலவாறு கூறினார்கள்.

'டாக்டர் கலீல் அன்னைநாட்டு முஸ்லிம் சகோதரர்களுக்கு ஆசிச் செய்தியனுப்பியதும் சிறிமாவோ அம்மையார் வியட்நாமுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியதும், மனிதாபிமான முடையதாக இருக்கும் பொழுது, நான் தி. மு.கவுக்கு ஆசி கூறியது எப்படித் தவறாகும்?

'இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டும் என்ற நோக்கம் தி. மு. கவுக்கு இல்லை என்றும், அவர்களின் ஆதரவைப் பெறவேண்டும் என்ற எண்ணமோ - அவசியமோ இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இல்லை என்றும் திட்ட வட்டமாகக் கூறவிரும்புகிறேன்.'

---

# மூதூர் முகம்மதலி கூடு விட்டு கூடு பாய்ந்த கதை

வாக்காளர்பலர் நேரிலும், கடிதம், தந்தி மூலமாகவும் ஜனாப் முகம்மதலி அவர்களைப் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை இராஜிநாமாச் செய்ய வேண்டாம் எனக் கோருவதாகச் சில பத்திரிகைச் செய்திகளைப் படித்தேன். 'தனக்குக் கார் வாங்கித்தர மக்கள் விரும்புகிறார்கள். நான் வேண்டாமென்றுவிட்டேன்' என்று முகம்மதலி அவர்கள் பத்திரிகைச் செய்தி விடுத்தது போலவே, இந்தச் செய்திகளும் ஒரு புரட்டு என்பது மூதூர் வாக்காளர்கட்குத் தெரியும்.

### முதல் தோல்வி

1947-ம் ஆண்டின் முதலாவது பொதுத் தேர்தலில் மூதூர்த் தொகுதித் தமிழ் வாக்குகள் முகம்மதலி அவர்கட்குக் கிடைக்கவில்லை. அத் தேர்தலிலே களத்தில் நின்ற திருவாளர்கள் இ. சொக்கலிங்கம், எ. சி. செல்வராஜா ஆகிய இருவருக்குமே தமிழ் வாக்குகள் கிடைத்தன. இதனால் கொம்யூனிஸ்ட் ஆதரவுடன் போட்டியிட்ட ஜனாப் முகம்மதலி அவர்கள் ஜனாப் ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கரிடம் தோல்வியடைந்தார்.

1952ல் தமிழர் எவருமே போட்டியிடவில்லை. ஜனாப் ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர் அவர்களிடம் மனக் கசப்புக் கொண்ட தமிழர்கள் முகம்மதலி அவர்கள் பக்கம் சரிந்தார்கள். இதனால் அவர் வெற்றி பெற்றார். இது முகம்மதலி அவர்கட்கு நன்கு தெரியும்.

1956ல் மொழிப் பிரச்னை உச்சகட்டத்தில் இருந்தது. தாம் தமிழரசுக் கட்சி சார்பாகப் போட்டியிடப் போவதாகப் பொது மேடைகளில் அலி வாக்குறுதியளித்தார். அதை நம்பிய கட்சி வேறு அபேட்சகர் தேடாதிருக்கக், கடைசி நேரத்திற் காலை வாரிவிட்டு சுயேச்சையாகப் போட்டியிட்டார். அவரோடு போட்டியிட்டவர் யூ. என். பி. சார்புள்ள ஒரு சிங்களவர். இதன் காரணமாகத் தமிழர் எல்லாரும் ஜனாப் முகம்மதலியை அவரை ஒருமுகமாக ஆதரிக்க முகம்மதலி அவர்கள் பெரு வெற்றி பெற்றார்.

### இரண்டாவது தோல்வி

வெற்றி பெற்றதும், பண்டாரநாயக்காவின அரசாங்கத்தை ஆதரித்த அவர், 1960 மார்ச்சில் மீண்டும் சுயேச்சையாகப் போட்டியிட்டார்! அந்தத் தேர்தலில் களத்திலே நின்ற தமிழரசு வேட்பாளரிடம் (தமிழரின் வாக்குகள் முகம்மதலிக்குக் கிடைக்காத காரணத்தால்) தோல்வி கண்டார்.

### மூன்றுவது தோல்வி

அடுத்து ஜூலையில், மீண்டும் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலிலும் அவருக்குத் தமிழ் வாக்குகள் கிடைக்கவில்லை. தற்போது அவர் ஆதரிக்கப் போவதாகச் சொல்லிக் கொள்ளும் யூ. என். பி. அபேட்சகராகப் போட்டியிட்டார் அத் தேர்தலில். சிங்கள மக்களும் தனக்கு வாக்களித்ததாகச் சொல்லிக் கொள்கிறாரே, அது எத்தனை புரட்டு என்பதற்கு அந்தத் தேர்தலின் முடிவே சாட்சி, அத் தேர்தலில் அவர் அரசியலிலிருந்தே ஒதுக்கப்பட்டார்!

தோல்வி கண்டு மனமுடைந்த அலி அவர்கள், தன் சொந்தக் கிராமத்திலே பெருவளர்ச்சி கண்டுகொண்டிருக்கும் ஜனாப் எம். எல். ஏ. மஜீத்துக்கு விரோதமாகத் தனக்கு ஆதரவு திரட்டவும், தமிழரின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்வதற்குமாக 1961-ல் தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகத்தில் பொழுது போக்காகக் கலந்து கொண்டார். நாயும் வர உறியும் அறுந்த கதையாக அவரும் சத்தியாக்கிரகம் பண்ண முன்வர மூதூர்ப் பிரதிநிதி ஏகாம்பரமும் அமரரானர். 1962 உபதேர்தலில் த. அ. கட்சி அவரை அபேட்சகராக நியமித்தது. அவரின் அரசியல் பல்டிகளை அறிந்தவர்கள் எதிர்த்தாலும், [illegible] நேரத்தில் தந்[illegible] ருரே' என்ற ஒரே எண்ணத்தில் பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்களையே கட்டுப் பணமிழக்கச் செய்து, சுதந்திரக் கட்சி அபேட்சகரையும் சுமார் 7000 வாக்குகளால் (14000 இரட்டை வாக்குகள்) வெற்றி கண்டனர். தமிழர்வாக்குகளால் மீண்டும் அரசியற் பிரவேசம் பண்ண அலியினால் முடிந்தது!



முகம்மதலியோ, தனக்குக் கிடைக்க இருக்கும் தமிழ் வாக்குகளின் பலத்தில், தன் அரசியல் எதிரியான ஏ. எல். ஏ. மஜீத்தை அரசியலிலிருந்து ஒழிக்கத் திட்டமிட்டார். இந்த நோக்கில் தன் ஆதரவாளர்களான முஸ்லீம்களை யூ. என். பி. சிங்கள அபேட்சகருக்கு வாக்களிக்கும்படி கேட்டார்: தங்கள் (இரு) வாக்குகளை யானைக்கும் வீட்டுக்கும் கொடுக்கும்படி அவசரமாகவும், இரகசியமாகவும் சொன்னதை நன்கு விளங்கிக் கொள்ளாத பலர் ஒரே வாக்குச்சீட்டில் யானைக்கும் வீட்டுக்கும் புள்ளடியிட்டதனல் ஆயிரத்தைஞ்நூற்றுக்கும் மேற்பட்டவாக்குகள் பழுதானதை [illegible] தலைவர்கள் கண்டனர்.

இந்த நிலையில் அடுத்த தேர்தலிற் தனக்குக் கட்சி அபேட்சை கிடைக்காதெனத் தெரிந்து கொண்ட முகம்மதலி அவர்கள் பெரிய அரசியல் விற்பன்னரைப் போலப் பத்திரிகை அறிக்கை விட்டுக்கொண்டிருப்பது சிரிப்பைத்தான் தருகிறது. முஸ்லீம் பாடசாலைகட்குச் சிங்கள ஆசிரியர் அனுப்பப்படுவதை தமிழரசுக் கட்சி எதிர்ப்பதாகக் கயிறு திரிக்கிறார். தேசிய அரசாங்கம் அனுப்பு முன்னரே முஸ்லீம் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர் இருக்கிறார்களே; அப்போதிருந்தே கட்சி எதிர்க்கவில்லையே. சிறு பிள்ளைக்குக் கூட இது தெரியுமே! அவருக்கு எப்போது எப்படிப் பாடம் படிப்பிப்பது என்பதும் வாக்காளர்கட்குத் தெரியும்.

மூதூர்த் தொகுதி மக்கள்-குறிப்பாகத் தமிழர்கள்—என்றைக்கும் போலவே மற்ற எல்லாத் தொகுதிகளையும் விடக் கூடுதலான நம்பிக்கையோடு தந்தையின் தலைமையை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள். பத்திரிகை அறிக்கைகளையும் செய்திகளையும் இட்டு வெளியிடங்களிலுள்ளவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. தங்களின் வாக்குகள் சிதைவதில் உள்ள ஆபத்தைத் தமிழ் மக்கள், கடசித் தலைமைப்பீடத்தினரைவிட மிக நன்றாகவே அறிந்திருக்கிறார்கள். அடுத்த தேர்தல் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லத்தான் போகிறது.

—வளவன்.

---

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 10 பொயிண்ட் ரோமன். 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் அச்சு வார்ப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ் ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்த எங்கள் இயந்திரம் சாதாரண எழுத்துக்களையும், அலங்கார, எழுத்துக்களையும் வார்க்கக் கூடியது.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் அச்சு வார்ப்பகம்,**

194 ஏ. பண்டாரநாயக்கா விதி,

கொழும்பு -12.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1967 ஏப்ரல் மாதம் 2-ம் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 · த. பெ. 1183

# மட்டுநகர் தேர்தல்

ஒன்ற மாதக் கடைசியில் நடைபெறவிருந்த மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலை உள்ளூராட்சி அமைச்சர் ஒத்திவைத்துள்ளார். அதற்கான காரணங்களை அமைச்சர் சுதந்திரனுக்கு அளித்த ஒரு பேட்டியில் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிருர்.

தேர்தலை ஒத்திவைத்தது அமைச்சர் செய்த ஒரு மாபெரும் துரோகமாக மக்களுக்கு எடுத்துக் காட்ட சிலர் முயற்சி செய்கின்றனர். மட்டக்களப்பு மக்களிடையே இது பற்றி ஒரு கிளர்ச்சியைத் தூண்டவும் அவர்கள் முற்பட்டனர். ஆனல் ஒன்றும் பலிக்க வில்லை. மக்களிடையே 'கொந்தளிப்பு' — 'பரபரப்பு' என்றெல்லாம் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு சீர்குலைவுக்குத் தூபம் போட்டன.

கட்சியின் நலன்களுக்காகவும் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் இரு தமிழரசு உறுப்பினர்களிடையே மோதுதலைத் தவிர்க்கவுமே அமைச்சர் தேர்தலை ஒத்திவைத்தார் என்று சிலர் கதை கட்டியதுடன், அமைச்சரின் செயலுக்கு கட்சிச் சாயம் பூசினர். இந்த விஷமப் பிரச்சாரங்களை மக்கள் நம்ப மறுத்தது வியப்பன்று.

அமைச்சர் 'சுதந்திரனுக்கு' அளித்த பேட்டியில் கட்சிக்கும் நிர்வாக ரீதியில் தான் எடுத்த நடவடிக்கைக்கும் எத்தகைய சம்பந்தமும் கிடையாதென்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

கட்சியின் முன்னுள் தலைவரும் தற்போதைய உபதலைவரும், பட்டிருப்புப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு இராசமாணிக்கம் தேர்தலை அமைச்சர் பின்போட்டது தமக்கு அதிர்ச்சியை அளித்ததென்றும், கட்சியின் பாராளுமன்றக் குழுவுக்கு அமைச்சர் தமது இந்த நடவடிக்கை குறித்து விளக்கம் கொடுக்க வேண்டுமென்றும் ஒரு பத்திரிகைப் பேட்டியில் கூறியுள்ளார். கட்சியின் முக்கிய தலைவர்களிலொருவரான திரு. இராசமாணிக்கத்துக்கே தேர்தல் ஒத்திவைக்கப்படுவது பற்றி முன்கூட்டியே தெரிவித்திருக்கவில்லையென்றுல், நிச்சயமாக கட்சிக்கும் ஏற்கனவே இதுபற்றி தெரிந்திருக்கவே முடியாது. கட்சிக்கு அமைச்சரின் இந்த நடவடிக்கைக்தம எத்தகைய தொடர்பும் கிடையாதென்றும் அவர் கூறியிருப்பதை மக்கள் கவனிக்க வேண்டும்.

இதில் கட்சியின் தலையீடு எவ்வகையிலும் கிடையாதென்பதும், இது திரு. திருச்செல்வம் அமைச்சர் என்ற முறையில் நிர்வாக ரீதியில் எடுத்த ஒரு நடவடிக்கைதான் என்பதும் திரு. இராசமாணிக்கம் கூற்றிலிருந்து தெளிவாகிறதல்லவா?

மட்டுநகர் மாநகரசபைத் தேர்தலை ஒத்திவைத்தது பற்றி அமைச்சர் கட்சிக்கே விளக்கம் கொடுக்கவேண்டியுள்ளது. இந்த நிலையில் கட்சியின் நலன்களுக்காகவும் இரு உறுப்பினர்கள் தேர்தலில் மோதுவதைத் தவிர்ப்பதற்காகவும் தேர்தலை ஒத்திவைத்தார் என்று கூறுவது நகைப்பிற்கிடமான சிறுபிள்ளைத்தனமாகும்.

நிர்வாகத் திறமையிற் தலைசிறந்தவரும் கட்சி நலனைவிட மக்களின் நலனையே முக்கியமாகக் கருதுபவருமான திரு. திருச்செல்வம போன்ற பொறுப்புமிக்க ஓர் அமைச்சர் இரு உறுப்பினர்கள் ஒரே வட்டாரத்திற் போட்டியிடுவதைத் தவிர்ப்பதற்காக தேர்தலையே ஒத்திவைத்தார் என்பது பகுத்தறிவுக் கொவ்வாத கூற்ருகும்.

அடுத்து, அமைச்சரின் நடவடிக்கை நியாயமானதா, தேர்தலைப் பின்போட்டதால் மட்டக்களப்பு மக்களுக்கு நன்மை ஏற்படுமா என்பனவற்றையே மக்கள் ஆராய்ந்து அறிய வேண்டும்.

ஒரு நகரசபையின் அந்தஸ்து மாநகரசபையாக உயர்த்தப்படும்போது அதன் எல்லைகள் விஸ்தரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும். எனவே சுற்றுப்புறப் பகுதிகள் மாநகர சபையுடன் இணைக்கப்படவேண்டிய ஒரு கட்டாய நிலை உருவாகும். இந்த இணைப்பின் விளைவாக இணைக்கப்படும் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இன்னல்கள் ஏற்படாவண்ணம் காப்பதும் அமைச்சரின் தவிர்க்கமுடியாத கடமையாகும். இக்கடமையினின்று எமது அமைச்சர் அணுவளவும் தவறவில்லை என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகின்ருேம்.

மட்டுநகர் மாநகரசபை எல்லைகள் விஸ்தரிக்கப்படும்போது சில கிராமப்பகுதிகளும் அதில் இணைக்கப்பட்டன. இதனுல் அதிகவரி செலுத்த வேண்டிய நிலை அந்தப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இஃது அவர்களுக்கு ஒரு புதிய பளுவாகும். எனவே அவர்களுக்கு வரிச்சலுகை அளிக்க முன்வந்த அமைச்சர் அதற்கான ஒரு மசோதாவையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். மூதவை அதனை ஏற்றுக்கொண்டுவிட்டது. சனப்பிரதிநிதிகள் சபையும் மசோதாவை ஏற்றுக்கொண்டதும் அது சட்டமாகிவிடும். அமைச்சர் எதிர்பார்த்தபடி தேர்தலுக்கு முன்பு மசோதாவை சட்டமாக்குதற்கு அவகாசம் போதவில்லை. ஆகவே தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய கட்டாய நிலை அமைச்சருக்கு ஏற்பட்டது.

அத்துடன், பிரதம மந்திரி தெரிவித்த ஆலோசனையின் மீதே அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இரு தமிழரசு உறுப்பினர்கள் ஒரு வட்டாரத்தில் போட்டியிடுவதைத் தவிர்ப்பதற்காகவே பிரதம மந்திரி இத்தகைய யோசனையைக் கூறியிருக்கிருர் என்று கனவிலும் கருதமுடியுமா?

மூன்றே மாதங்களில் இத்தேர்தல் நடத்தப்படுமென்று அமைச்சர் தெரிவித்துள்ளார். தேர்தலை நான்கு வட்டாரங்களின் மக்கள் பகிஷ்கரித்திருந்தனர். அந்த மக்களின் குறைபாடுகளை விசாரித்தறியவும் இந்த இடைக்காலத்தை அமைச்சர் பயன்படுத்துவார் என்று அறிகின்ருேம்.

ஆதலின், மக்களின் நலன்களை முன்விட்டு அமைச்சர் [illegible] குறுகிய நோக்கங்களைக் கற்பிக்கும் குறுகிய கண்ணோட்டமுள்ள சந்தர்ப்பவாதிகளின் பித்தலாட்டப் பிரசாரத்திற்கு மட்டுநகர் மக்கள் இடமளிக்கக்கூடாதென்று கேட்டுக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்த வாலிபர்களே! உடனே மனுச்செய்க

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பூனகரி காரியாதிகாரியின் பிரிவின்கீழ்வரும் கரியாலை நாகபடுவான் குடியேற்றத் திட்டத்துக்கு விவசாயிகள், படித்த மாணவர்களிடமிருந்து யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

கரியாலை, நாகபடுவான் குடியேற்றத் திட்டத்தின்கீழுள்ள 387 காணித் துண்டுகளுக்கும் மற்றைய குடியேற்றத் திட்டங்களின்கீழுள்ள காலியான துண்டுகளுக்கும் விண்ணப்பங்கள்கோரப்பட்டிருக்கிறது. இக்குடிபேற்றத் திட்டத்தின் கீழுள்ள காணிகளுக்கு விவசாயிகள், படித்த மாணவர்கள், கிருஷிக பாடசாலையில் சித்தியெய்திய மாணவர் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.

இக்குடியேற்றத்திட்டகாணிகளுக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளபடும் கடைசித் தேதி 25-4-67. இதற்கு விண்ணப்பிக்கும் படித்த மாணவர்கள், தங்கள் கல்வித் தராதர அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதிகளையும் அனுப்பவேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இக்குடியேற்றக் காணிகளுக்குத் தெரிவுசெய்யப்படு[illegible]வர்களுக்கு, 2 ஏக்கர் வயற் காணியும், 2 ஏக்கர் மேட்டுக் காணியும் வழங்கப்படவிருக்கிறது. அத்துடன் விவசாயத்துக்கு வழமையாக அரசாங்கம் அளிக்கும் சலுகைப்பணமும் கொடுக்கப்படுமென்று தெரிகிறது.

காணிக்கு விண்ணப்பிப்போர் கீழே காணப்படும் மாதிரி விண்ணப் பத்திரம் போன்ற ஒன்றைப் பூர்த்தி செய்து 25-4-67க்கு முன்பு யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவுத் தபாலின் இடது பக்க மேல்மூலையில் 'குடியேற்றத்திட்டத்தில் நெற்காணி கோரும் விண்ணப்பம்' என்று எழுதப்படவேண்டும்.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. விண்ணப்பக் காரரின் முழுப் பெயர்...........
2. வயது.................
3. தொழில்..................
4. வசிக்கும் கிராமமும் காரியாதிகாரியின் பிரிவும்.................
5. வசிக்கும் பாராளுமன்றத் தொகுதி...........
6. கடிதம் அனுப்பவேண்டிய விலாசம்...........
7. கிராமத்தில் வசித்த வருடங்கள்..............
8. கிராம சேவையாளர் பகுதியும் இலக்கமும்...
9. விவாகமானவரா? ஆயின் (அ) பிள்ளைகளின் தொகை...........
   (ஆ) பராமரிப்பிலுள்ளோரின் தொகை......
10. மேட்டுக்காணி, நெற்காணிகளின் விபரங்கள்

1. அரசாங்க குத்தகை நிலம்:
   (அ) விண்ணப்பதாரரின் பெயரில்.............
   (மனைவியின் பெயரில...
   (ஆ) பிள்ளைகளின் பெயரில்....................
2. சொந்த நிலம்:
   (அ) விண்ணப்பக்காரரின் பெயரில்...........
   (ஆ) மனைவியின் பெயரில்....................
   (இ) பிள்ளைகளின் பெயரில்....................

11. கிருஷிக அனுபவமும் அதன் விசேட தகைமைகளும்..............

படித்த மாணவரும், கிருஷிக பாடசாலையில் சித்தியெய்திய மாணவரும் மேலே 1 தொடக்கம் 11ம் பந்தி வரை உள்ள விபரங்களைக் கொடுப்பதுடன் கீழ்க்குறிக்கப்பட்ட விபரங்களையும் தருதல் வேண்டும்.

(அ) விண்ணப்பதாரரின்கிருஷிக அனுபவம்:......
(ஆ) தற்போதைய தொழில்:...... ...........
(இ) தகப்பனுரின் தொழில்
(ஈ) பெற்ருேரின் பெயரிலுள்ள அரசாங்க அல்லது சொந்த மேட்டுக் காணி, நெற்காணி விபரங்கள்..............
(உ) விண்ணப்பதாரரின் சகோதர சகோதரிகளின் தொகை...........

........................

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

## எங்கே? எப்பொழுது?

காணிக்கச்சேரி நடைபெறும் இடங்களும் திகதிகளும் வருமாறு: இந்த இடங்களிலுள்ள காரியாதிகாரி கந்தோரில் இக்காணிக் கச்சேரிகள் நடைபெறும்.

9-5-67—நெடுந்தீவு.
11-5-67-பருத்தித்துறை
12-5-67—தெல்லிப்பழை
15-5-67—பளை.
17-5-67—துணுக்காய்.
19-5-67—கோப்பாய்.
20-5-67—சங்கானை.
26-5-67—ஊர்காவற்றுறை.
27-5-67—யாழ்ப்பாணம்.
29-5-67—சாவகச்சேரி.
30-5-67—பூனகரி.

கிளிநொச்சியில் மட்டும் காணிக்காரியாலயத்தில் 22-5-67ம் திகதி காணிக் கச்சேரி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## பிரதமரின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ப்பது வழக்கமே. ஏற்கெனவே பல நகரசபைகள் மாநகரசபைகளாக மாற்றப்பட்டபோது இந்தமுறை கையாளப்பட்டுள்ளது. அந்த வகையிற்தான், மாநகரசபையாக்கப்பட்டுள்ள மட்டுநகருடன், அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

'ஆனல் மாநகரசபையின் கீழ் வந்துவிட்டதால் அதிக வரி செலுத்தவேண்டி வருமேயென்று அபிவிருத்தி குறைந்த கிராமமக்கள் கவலைப்படுவது இயற்கை. மட்டுநகர் மாநகர சபையுடன் இணைக்கப்பட்டுள்ள, கல்லடி உப்போடை, நொச்சிமுனை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் போன்ற அபிவிருத்தி குறைந்த கிராமங்களைச்சேர்ந்த மக்களும் தங்களுக்கு அதிகவரி விதிக்கப்படலாம் என்று சந்தேகப்பட்டனர். அவர்களின் சந்தேகங்களைப்போக்குவதற்கு தேர்தலுக்கு முன்பு வேறுபட்டவரி விதிக்கக்கூடிய மசோதா சட்டமாவதை நான் ஆவலுடன் எதிர்பார்த்தேன். ஆனல் துரதிருஷ்டவசமாக இது நடக்கவில்லை. இதில் எனது தவறு எதுவும் கிடையாது.

'இந்தநிலையிற்தான், பிரதமர்என்னை அழைத்துமட்டுநகர் தேர்தலை பின்போடும்படி ஆலோசனை கூறினுர். எனவே தான் பிரதமரின் ஆலோசனையுடன், மட்டுநகர் மாநகரசபையுடன் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்திகுறைந்த கிராமங்களின் நலனைக் கருத்திற்கொண்டு தேர்தலை ஒத்திவைத்தேன்.''

இவ்வாறு கூறிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:— 'எப்படியும் ஜுலை 1ந் திகதிக்குள் மட்டுநகர் மாநகரசபைத் தேர்தல் நடைபெறும். சென்ற 30ந் திகதி நடைபெறவிருந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு மட்டக்களப்புடன் புதிதாக இணைக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 4 வட்டாரங்களிலிருந்து அபேட்சகர்கள் எவரும் போட்டியிட முன்வரவில்லை. எனது அதிகாரிகளை அனுப்பி அந்த நான்கு வட்டார மக்களின் குறைகளை அறிந்து அவற்றை நீக்குவதற்கு இந்த இடைக்காலத்தில் முயற்சியெடுக்கவும் இருக்கிறேன்'

## தமிழில் கிடைக்கும்

''இதுவரைகாலமும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இருந்துவந்த விண்ணப்பப்படிவங்கள் தமிழிலும் இனிமேல் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்'' என்று வனபரிபாலன இலாகா அதிபர் தமிழரசுத் தந்தைக்கு எழுதிய ஒரு பதிலில் உறுதி கூறியுள்ளார். வனபரிபாலன இலாகா விண்ணப்பப் பத்திரங்கள் தமிழர்களுக்கு தமிழில் கிடைப்பதில்லையென்றும் தமிழ் கிடைக்க உடனே ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமென்றும் தமிழரசுத்தந்தை எழுதிய கடிதத்தையடுத்தே அவருக்குவனபரிபாலன அதிகாரி மேற்கண்ட உறுதியை அளித்துள்ளார்.

## பென்சன் வெட்டுப்பற்றி பேச்சுவார்த்தை நடத்த;

# அவுஸ்திரேலியாவிலிருந்து மலேசியாவுக்கு அமிர்தலிங்கம் செல்கிறார்

## அவரது தொகுதி வேலைகளை இரு எம். பி. கள் கவனிப்பர்

மலேசிய பென்சன் வெட்டுப் பற்றி வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் மலேசிய அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார். தற்பொழுது அவுஸ்திரேலியா சென்றுள்ள திரு. அமிர்தலிங்கம் இதற்காக ஏப்ரல் 16ம் திகதி அவுஸ்திரேலியாவிலிருந்து மலேசியா செல்கிறார் என்று தெரிகிறது.

அவுஸ்திரேலியா, நியூசிலந்து ஆகிய நாடுகளிடமிருந்து இலங்கைக்கு பொருளாதார உதவி கோரி இலங்கையிலிருந்து ஒரு பலமிக்க பாராளுமன்றக் குழு இம் மாதம் 25ந்திகதி புறப்பட்டது தெரிந்ததே. இந்தக் கோஷ்டியில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கமும் அங்கம் வகிக்கிறார். இந்தத் தூதுக்கோஷ்டியினர் ஏப்ரல் 15 வரை, அவுஸ்திரேலியா, நியூசிலந்து ஆகிய நாடுகளுடன் நடத்தும் பேச்சு வார்த்தைகளில் திரு. அமிர்தலிங்கம் கலந்து கொள்வார்.

இதன் பின்னர் ஏப்ரல் 16ந் திகதியளவில் திரு. அமிர்தலிங்கம் மலேசியாவுக்கு செல்வாரென்றும், அங்கு மலேசிய அரசுடன் இலங்கையிலுள்ள மலேயன் பென்சனியர்களின் பென்சன் வெட்டப்பட்டுள்ளது பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் தெரிகிறது. பேச்சுவார்த்தையின் போது வெட்டப்பட்டுள்ள தொகையை மீண்டும் கொடுக்க வேண்டும் என்று திரு. அமிர்தலிங்கம் வலியுறுத்தவிருக்கிறார்.

திரு. அமிர்தலிங்கம் ஏற்கனவே கடந்த வருடம் மலேசியாவில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு போயிருந்த போதும், இது பற்றி மலேசிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது வாசகர்கள் அறிந்ததே. அந்தப் பேச்சு வார்த்தையை தொடர்ந்து நடத்தி இப் பிரச்சினைக்கு ஒரு சுமுக முடிவு காணவே திரு. அமிர்தலிங்கம் மீண்டும் மலேசியா செல்கிறார்.

திரு. அமிர்தலிங்கம் ஏப்ரல் இறுதி வாரத்தில் இலங்கை திரும்புவாரென்று தெரிகிறது. அதுவரை அவரது தொகுதி வேலைகளை நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதனும், உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கமும் கவனிப்பார்கள்.



### நவரத்தினர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வி. கிருஷ்ணசாமி, பொதுச் செயலாளர் திரு. கலியபெருமாள், துணைச் செயலாளர் கே. பி. செல்வத்துரை ஆகியோரும் சொற்பொழிவாற்றுவார்கள் என்று தெரிகிறது.

## யாழ். குழாய்நீர் வினியோகம்:

# கொழும்புத்துறை வரை விஸ்தரிக்க ஏற்பாடு

## அமைச்சர் 'திரு' உத்தரவு

யாழ்ப்பாணம் குழாய் நீர் வினியோகத் திட்டம் விரைவில் கொழும்புத்துறை வரை விஸ்தரிக்கப்படவிருக்கிறதென்று தெரிகிறது. கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் சார்பில் அதன் தலைவர் செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே சமீபத்தில் மேற்படி ஸ்தலத்துக்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட்ட உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ திரு எம். திருச்செல்வம் மேற்படி வேலையை உடன் ஆரம்பிக்கும்படி சிறப்பு ஆணையாளர்களுக்குக் கட்டளைபிறப்பித்திருக்கிறார் என்று நம்பகமாக அறியப்படுகிறது.

சம்பந்தப்பட்ட விஸ்தரிப்பு வேலைகளுக்கு ஏறக்குறைய ரூ. 15,000 வரை செலவிடப்படுமாம். இத்திட்டத்தின் பொருட்டு நடப்பு வருடத்திற்கான வரவு செலவுத்திட்டத்தில் சிறப்பு ஆணையாளர் ஏற்கனவே அடையாள மானியம் ஒன்றை ஒதுக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதய நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஏராளமான நீர் உபரியாக இருப்பதனால் அரசாங்க நீர் வேலைப் பகுதினர் கொழும்புத்துறைப் பகுதிக்கான குழாய் நீர் வினியோக விஸ்தரிப்பையிட்டு பலத்த ஆட்சேபம் எதையும் எழுப்பமாட்டார்களென்று நம்பப்படுகிறது.

1967ம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் மேற்படி செலவை அனுமதிப்பதால் வேலையை உடன் ஆரம்பிக்கும்படி அமைச்சர் கட்டளை பிறப்பித்திருக்கிறார். இவ் வேலை யாழ்ப்பாணம் மாநகரசபையின் நீர் வேலைப் பகுதியினரின் மேற்பார்வையில் நடைபெறும்

### கல்வி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றிய ஏறுவூர் கிராம சபை, அத்தீர்மானத்தின் ஒரு பிரதியை தமிழரசுத் தந்தைக்கும் அனுப்பியிருந்தது. அதற்குப் பதிலளித்து தமிழரசுத் தந்தை, ஏறுவூர் மேற்கு கிராம சபைத் தலைவருக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இக்கடிதத்தில் அமைச்சரின் தவறான கூற்றைக் கண்டித்து ஏறுவூர் மேற்கு கிராமசபை தீர்மானம் நிறைவேற்றியதை தமிழரசுத்தந்தை பாராட்டியிருக்கிறார்.

ஏறாவூர் மேற்கு கிராமசபை அதன் 20-3-67ந்திகதிய கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம் வருமாறு;—

'மட்டக்களப்பு மாவட்டம், தமிழ்பேசும் மக்களையும் தமிழ் கலாசாரத்தையும் கொண்டிருந்தும் மட்டக்களப்பு மாவட்டம் தமிழ் பகுதியல்ல என கௌரவ கல்வி மந்திரியார் அவர்கள் விடுத்திருந்த அறிக்கையை இச்சபை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. இப்படியான பொறுப்பற்ற வார்த்தையை மந்திரியார் வாபஸ் பெற வேண்டுமெனவும் இச்சபை வேண்டுகின்றது. மந்திரியாரின் அறிக்கையையிட்டு தமி[illegible] [illegible]ட்டதையிட்டு இச்சபை வருத்தம் தெரிவிக்கிறது'

## கிழக்கின் மீது திடீர் காதல்

### அமைச்சரை ஏன் அவர்கள் கண்டிக்கவில்லை?

"மலைநாட்டுத்தமிழர்களையும் கிழக்கு மாகாணத் தமிழர்களையும் இதுகாலவரை திரும்பியும்பாராதிருந்ததிரு. பொன்னம்பலத்தின் சீடரான உடுப்பிட்டிப் பிரதிநிதி கிழக்கு மாகாணத் தமிழர்களுக்காக இன்று நீலிக் கண்ணீர் வடிப்பது வெள்ளாடு நனைகிறதென்று வேங்கைப்புலி குந்தி இருந்து அழுத கதை போலிருக்கிறது" இவ்வாறு திருமலைத் தமிழ்ப் பேசும் வாலிப முன்னணியைச் சேர்ந்த ஒரு முக்கிய பிரமுகர் சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

கிழக்கு மாகாணம் தமிழ்ப் பகுதி என்பதைத் தான் ஏற்கத் தயாரில்லை என்று கல்வி மந்திரி கூறியதை தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மறுத்துப் பேசவில்லையென்று திரு. மு. சிவசிதம்பரம் குறைகூறியதாக வழக்கமாகப் பொய்ச் செய்திகளைப் பிரசுரிக்கும் 'கடுதாசி' ஒன்று சமீபத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. இது பற்றி அபிப்பிராயம் கூறும்போதுதான் திருகோணமலையில் தமிழர் உரிமைக்காக போராடிவரும் தமிழ்ப் பேசும் வாலிப முன்னணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் மேற்கண்ட கருத்தை சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

'தமிழ் பேசும் இனத்துக்குப் பொதுவான திருமலையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்க முன் வந்த தலைவர்களின் தலையான முயற்சியினை கல்வி அமைச்சருடன் சேர்ந்து தவிடு பொடியாக்க இவர்கள் முயற்சி எடுத்ததை எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

'கிழக்கு மாகாணத்தவர்கள் படிப்பறிவிற் குறைந்தவர்கள். அவர்களுக்குத் தேவையானது கல்லூரிப் படிப்பே தவிர பல்கலைக்கழகப் படிப்புஅல்ல' என்று பேசிய தமது தலைவருடன் திரு. சிவசிதம்பரம் ஒத்து ஊதினரே தவிர கிழக்கு மாகாணம் சிங்கள மயமாக்கப்படுவதைத்தடுக்க எதுவிதமுயற்சியும் எடுக்க வில்லை.

"அது மட்டுமல்லதிரு. இரிய கொல்லை பாராளுமன்றத்தில் இவ்வாறு பேசியபோது இவரே மறுப்புத் தெரிவித்திருக்கலாமே? அப்படிச் செய்யாமல் இவர் எங்கு ஓடி ஒளித்தார்?

"1960 தொடக்கம் 1965 வரை திருமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்று கூறிய உடுப்பிட்டிப் பிரதிநிதி 1965ல் யாழ்ப்பாணத்தில் இந்து கலாச்சாரப் பல்கலைக் கழகம் கேட்டுக் குத்துக்கரணம் அடித்துவிட்டார். எனவே அவர் கிழக்குமாகாணத்திற்காகப் பேச முன்வரு முன், கிழக்கு மாகாண தமிழ்ப்பேசும் இனத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு முக்கியமான தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் திருமலையில் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவு கொடுக்கட்டும்.'

## தொழிலதிபரின் மறைவு



இலங்கையின் பிரபல வர்த்தகர்களில் ஒருவராக விளங்கிய திரு. சீ. வீ. செபஸ்தியன் இம் மாதம் 23ந் திகதி காலமானது வர்த்தக வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ராஜா பீடிக்கம்பெனியின் உரிமையாளரும், ராஜா லித்தோ அச்சக நிர்வாகப்பங்காளியுமான திரு. செபஸ்தியன், இரக்க சிந்தனையும் ஈகைக்குணமும் கொண்டவர். இவர் தமது சொந்த ஊராகிய கேரளத்தைச் சேர்ந்த திருச்சூரிலேயே காலமானார்.

திருச்சூரில் நடைபெற்ற இவரது மரணச் சடங்கில் தேசியமயசேவை அமைச்சர் திரு. வீ. ஏ. சுகததாசவின் பாரியார், கொழும்பு மாநகரசபை உறுப்பினரும் யானை பீடிக்கம்பெனி அதிபருமான திரு. நீதிராசா ஜே. பி. மற்றும் இலங்கையைச் சேர்ந்த் பல தொழிலதிபர்கள், கலந்து கொண்டனர். இவரது ஆத்மா சாந்தியடைவதாக.

—

### அடுத்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கவேண்டுமென்று கோரப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

பொ. கட்சியிலுள்ள திரு. பொன்னம்பலத்தின் ஆதரவாளர்களே உடுப்பிட்டிப் பிரதிநிதிக்கு எதிரான இந்த முயற்சியில் இறங்கியிருப்பதாக பொ. கட்சி வட்டாரத்தில் பேசப்படுகிறது.

சமீபத்தில் திரு. பொ. வுக்கு கொழும்பில் நடைபெற்ற ஒரு வரவேற்பில் பேசிய உடுப்பிட்டிப் பிரதிநிதி, மறைமுகமாக திரு. பொ. வுக்கு எதிரான கண்டனக்கணைகளை வீசியதாக திரு. பொ. வின் ஆதரவாளர்கள் குற்றஞ்சாட்டினார்களாம். இவர்களை உடுப்பிட்டி எம். பி.க்கு எதிராக திரு. பொன்னம்பலமே தூண்டிவிட்டிருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

திரு. பொ. உலகம் சுற்றுவதைக் கைவிட்டு உள்நாட்டில் தங்கியிருக்க வேண்டுமென உடுப்பிட்டியார் கூறியதாகவும், இது வேண்டுமென்றே, திரு. பொ. உள்நாட்டு பிரச்சினைகளை அலட்சியம் செய்துவிட்டு உலகம் சுற்றுவதை குத்திக்காட்டுவது போல இருக்கிறதென்றும் திரு. பொ. வின் ஆதரவாளர்கள் அபிப்பிராயப் படுகிறார்களாம்.

பொ. கட்சியின் அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் இது பற்றி பூகம்பம் ஒன்று வெடிக்கலாம் என்று பேசிக் கொள்ளப்படுறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

எஸ். எச். ஏ. ஹுசைன்

# 'மலர்களல்ல...'

வாழ்க்கையின் பூரணத்துவம் தாம்பத்தியத்துடன் ஒட்டியதுதானு? 'ஆம்' என்ற அர்த்தத்திலுல் தானே மனித வாழ்கையின் பருவகால உணர்ச்சியை தணிக்கும் பொருட்டோ அன்றேல் தங்களைப் போல் குழந்தைகளும் தாம்பத்யம் என்ற சித்திரவதையின் கீழ் நசுக்கப்படல் வேண்டும் என்ற பழிவாங்கும் நோக்கமோ அன்றேல் தங்களுக்குப் பேரன் பேத்திகள் பிறந்து பரம்பரையை வளர்க்க வேண்டும் என்ற சுயநலப்பார்வையையோ என்னவோ தெரியாது, அதிகமான தாய்தந்தையரின் வழியின் கீழ் என்னையும் தாம்பாத்திய வாழ்க்கையில் உறவாக்கிஸ்டெலஸ்டாவின் கையுடன் என் கையையும் பிணைத்துவிட்டார்கள்.

எனக்குத் தாம்பத்திய வாழ்க்கை யென்பது சிறிதளவு கூடப்பிடியாது. கௌதம புத்தருக்கு கூட தாம்பத்திய நசுக்கலில் ஏற்பட்ட வெறுப்புத்தான் ஞானம் பிறக்கக் காரணமாக இருந்திருக்கக் கூடும். நான் சென் மிக்கேல் கல்லூரியில் கற்கும் காலத்தில் சங்கைக்குரிய பாதிரியார் வெம்பேக் சுவாமியார் ஞானபோதனைகள் செய்யும் போது அடிக்கடி கூறும் லூர்க்கின் வசனங்கள் இப்போதும் எனக்கு நல்ல ஞாபகமிருக்கின்றது. 'சர்வேசுரனுடைய இராச்சியத்தின் நிமித்தம் வீட்டையாவது பெற்றோரையாவது, சகோதரர்களையாவது மனைவியையாவது மக்களையாவது விட்டுவிட்ட எவனும் இம்மையில் மிகவும் அதிகமானவையும், மறுமையில் நித்திய ஜீவனையும் அடையாமல் போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்".

இந்த நற்சிந்தனையில் தான் எவ்வளவு நிறைவான பொருள். மண்ணாசையும் பொன்னாசையும் வீடும் காசும் தேடக் காரணம் தாம்பத்திய வாழ்வுதானே; தாம்பத்திய வாழ்க்கையற்று அந்த ஆசையை துறந்தால் கிட்டும் விமோசனம், இம்மையில் மிக அதிகமானவையும் மறுமையில் நித்திய ஜீவனுமல்லவா!

என் திருமணத்தைத் தொடர்ந்து என் முதலிரவைக் கழிக்க முதலில் என்னை அந்த அறைக்குள் கொண்டுபோய் விட்டார்கள் அந்த அறையிலிருந்து எழுந்த நறுமணமே என் மனதில் மயக்கத்தை ஏற்படுத்திற்று. அன்று மலர்ந்தமலர்களின் மணம் அது, மல்லிகை ரோஜா, சாமந்திசந்தன மலர்களின் கலந்த சுகந்த மணம் அது. அன்று மலர்ந்த மலர்களாலேயே அழகாக அறையை அலங்கரித்திருந்தார்கள். நான் மலர்த் தொட்டிலிலேயே அமர்ந்திருந்தேன்.

சிரிப்பொலி!

வீணையின் நாதங்கள் கலந்த ஒலி!

நான் அறையின் வாயில் பக்கத்தை நோக்கினேன். இளஞ் சிவப்பு கலந்த தூய பட்டுப்புடவையுடன் தேவகன்னிகையாய் ஸ்டெலஸ்டா நின்றுள்: அவளின் முகத்தில் வழமையைவிட இரத்தமேறிய சிவப்பு, மலர்ந்த முகமாய் தலையை நாணிய வண்ணமாய் நின்றுள். வந்து முப்பது நிமிடங்களுக்கு மேல் கழிந்து விட்டன. நான் மலர்த் தொட்டிலிலேயே அமர்ந்திருக்கின்றேன். அவளும் நாணமாய்த்தான் நின்றுள். அது மயக்கத்தில் பயமேறிய நாணம். எனக்கு ஏற்பட்ட அசட்டுத் தைரியமோ அல்லது கடமையோ நான் எழுந்து சென்று கையைப் பிடித்து வந்து என் அருகில் மலர்கட்டில் அமர்ந்திருக்கின்றேன்'

'ஸ்டெலஸ்டா'

மௌனமாகி இருக்கின்றுள்.

'நீ என்னை மனப்பூர்வமாக விரும்பித்தானு திருமணம் செய்தது?'

நிமிர்ந்து என் முகத்தை நோக்குகின்றுள்.

நான் இப்படிக் கேட்பதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆத்மாவின் புனிதமான தொர்டபுதான் காதலுக்கு இலக்கணமாய் அமைந்திருக்கும் போது வெறும் நிழலான போதையில் எழும்பருவப் பார்வையைகாதலாக்கி அதனுல் தொடர்பு கொண்டு நேரத்திற்கு நேரம் காலத்திற்குக் காலம் உடையை உணவை மாற்றுவது போல காதல் உறவை மாற்றிக் கொள்ளும் என் வயது 'நண்பர்கள் இன்று அதிகம். 'உங்களையோ உங்கள் எண்ணத்தையோ என் உள்ளத்தில் ஆழமாக எண்ணி ஜெபித்துக் கொண்டிருக்கும் நான், உணவை உண்ணும் போதும் உங்களையே காண்கின்றேன் அத்தான்' என அல்பிரட்டுக்குக் காதற் கடிதம் எழுதி லோரேட்டோ இன்று அன்ரனியுடன் உறவு கொண்டிருப்பதை அறிந்தவன் நான். அப்படிப்பட்ட லோரேட்டாக்களாக ஸ்டெலஸ்டாவும் வாழக்கூடாதென்ற ஆழமான ஆசை ஒன்றுதான் நான் இந்தக் கேள்வியைக் கேட்கக் காரணம்.

மலர்களின் மணமும் ஸ்டெலஸ்டாவின் உடையில் எழுந்த வாசனையும் உடம்பிலிருந்து எழுந்தசுகந்தமும் அவளின் மென்மையும் எனக்கு ஒரு வெறியை ஏற்படுத்துகின்றது. அவள் இயற்கையாகவே என் கால்களில் சாய்கிறுள். எனக்கு எழுந்த அதே வெறிதான் அவளுக்கும் எழுந்திருக்கக் கூடும். இருவரின் தசையுறவுப் போதையும் கண்கால் மோத மலரிலும் மென்மையான அவள் கமலமுகத்தைத் தூக்கி ஆசையுடன் நோக்குகின்றேன். ஆ! நான் காண்பதென்ன?

ஸ்டெஸ்டாவின் முகமா இது?

இல்லவேயில்லை!

இது என் தாயின் முகமல்லவா!

அவளின் முகத்தை அப்படியே விட்டு விட்டு எழுகின்றேன். பரிதாபமாகப் பார்க்கின்றுள். நான் ஜன்னலை நோக்கி நடக்கின்றேன்.

என் ஸ்டெலஸ்டாவின் முகத்தை என் தாயின் முகமாக காண வைத்தது வெம்பேக் சுவாமி தான். அவர் அடிக்கடி எனக்குப் போதனை செய்யும் 'நீ காணும் பெண்களையெல்லாம் காதலியாகவும் மனைவியாகவும் காணுமல் தாயும் தங்கையுமாகவும் காண்' என்ற போதனை என் மனதில் ஆழமாகப் பதிந்தது தான் காரணம். நான் பாடசாலைமாணவனுக வாழ்ந்த காலத்தில் வெம்பேக் சுவாமி என்னுடன் அலாதியான விருப்பம் வைத்திருந்தார். எனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களையெல்லாம் அதிகமாக அவருடன்தான் கழிப்பேன். என்னைப் பாடசாலை மாடியில் அணைத்து வைத்துக் கொண்டு வாழ்வுக்கு அத்தியாவசியமான போதனைகள் செய்வார். கோழி குஞ்சியை அணைக்கும் அணைப்புததான் இதைக் கண்டு பொறுமைப்பட்ட என் நண்பர்கள், வீதியில் வாலிப வயதான அண்ணனையும் தங்கையையும் பார்த்துக் காதலனும் காதலியாகவும் பேசுவதைப் போல எனக்கும் வெம்பேக் சுவாமிக்குமிடையில் ஏதோ ஆணுடன் ஆண் கொள்ளும் தசையிச்சை உறவிருப்பதாகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். நான் அதை அசட்டை செய்துவிட்டேன். என் மனம் குற்றமுள்ளதாயிருந்தால் குறுகுறுத்துப் பிரிந்திருக்கும். நான் அவருடன் அவரின் நற்சிந்தனைகளுடன் என் ஓய்வு நேரத்தைத் தொடர்ந்து கழித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் மாடியிலிருந்து வீதியில் நடப்பவைகளையெல்லாம் சுவாமியும்நானுமாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். கான்வென்ட் மாணவிகள் பாடசாலை விட்டு வந்துகொண்டிருந்தார்கள். கடைசியில் இரண்டுபேர். ஒன்று ஆணும் மற்றது பெண்ணுமாகத் தெரிந்தது. அந்த ஆண் நண்பன் என் நண்பன் அன்ரனி தான். மற்றது அல்பிரட்டின் தங்கை மேரி. நான் வெம்பேக் சுவாமியிடம் காட்டினேன். அவர், 'நல்ல ஜோடி தான், பாடசாலை வாழ்க்கையை நன்ருக முடித்துவிட்டு இருவரும் நன்ருக வாழட்டும் 'என ஆசி கூறினர்.

எங்கள் பாடசாலையின் ஆசிரியர், அதிலும் பாடசாலையிலும் கோவிலிலும் ஞானபோதனை செய்யும் சுவாமியான அவர் கண்டிப்பாரெனத்தான் நினைத்தேன். அவரின் சாந்தமான உள்ளத்தை நினைக்கும் என் மனதில் ஒரு மதிப்பேறிற்று.

தொடர்ந்து நான்கைந்து நாட்கள் பாடசாலைக்கு வரும் போதும் போகும் போதும் இருவரும் ஒன்ருக இணைந்து வந்து செல்வதைக் கண்டோம். அவர்கள் முகத்தில் இருக்கும் மகிழ்ச்சியும் மனதில் நிறைந்த குதூகலமும் தெளிவாகத் தெரிந்தது.

பின்னர் அவர்களிடையே பிரிவு தென்பட்டு அன்ரனி லொரேட்டாவுடன் குதூகலமாகக் கதைத்துச் சிரித்துக் கொண்டு சென்றுன். இதை வெம்பேக் சுவாமியிடம் காட்டியபோது, அப்போதுதான் முதன் முதலில் 'நீ காணும் பெண்களையெல்லாம் காதலியாகவும் மனைவியாகவும் நினைக்காமல் தங்கையாகவும் தாயாகவும் நினைத்துக் கொள்' என போதித்தார்.

அவரின் தீர்க்க தரிசனமான போதனைகளில் மிகுந்த பற்று வைத்திருக்கும் நான், எனக்குச் சகோதரிகள் இல்லாமையால் காணும் பெண்களையெல்லாம் தாயாகவே கண்டேன்.

அன்ரனியைக் காணும் போதெல்லாம் வெம்பேக் சுவாமி இதையே போதனை செய்வார். அவர் ஒவ்வொரு தரமும் போதனை செய்யும்போது அது என் மனதில் ஆழமாகப் பதியத் தொடங்கியது. ஒரு நாள் அன்ரனியின் நாட்குறிப்பு என்கைக்கு கிட்டியது. தை மாதம் பத்தாம் பக்கத்தில், 'மலர் இருக்கிறதே அது மிருதுவான தாய் - அழகான தாய் - மனதைக் கவர்வதாய் இருந்தால் அதைக் கொய்து நெஞ்சில் செருகிக் கொள்ளத்தான் வேண்டும். மேரிஇருக்கின்றுளே, அவளை தாமரையாய் - மல்லிகை - ரோஜாவாய், இல்லை அதைவிட வசீகரமாய்... அள்ளி நெஞ்சில் செருகிக் கொண்டேன், அவள் இதழை விரிக்கும் போது தேவலோகத்தில் சஞ்சரிப்பது போன்ற உணர்வினை ஏற்படுத்துகின்றது. அவளின் இமை விரிப்பிலே வாழ்வின் அர்த்தம் பொதிந்து கிடக்கின்றது. அவளை ஆசையுடன் கட்டியணைத்து... 'நாட்குறிப்பின் மாசிமாதம் ஐந்தாம் திகதியைப் புரட்டினேன். அதில் லொரேட்டாவைப் பற்றி இதைவிட வசீகரமாய் எழுதப்பட்டிருந்தது.

பெண்கள் மலர்கள்தான். ஆனுல் பலவண்டுகள் சுவைக்கும் ஒரு மலராகவும் ஒரேவண்டு சுவைக்க வழியமைக்கும் பலமலர்களாகவுமிருக்கக்கூடாது. அப்படியான மலர்களாய் வாழும் பெண்களை ஆறறிவு படைத்த மானிட ஜாதியில் இணைக்கவே கூடாது. மானிடஜாதியில் களவிலும் மறைவிலும் பணத்திற்கு கற்பை விரயமாக்கும் பழக்கமேயிருக்கக் கூடாது. ஒன்றுக்குப் பலர் என்ற நிலைகளாவிலிருந்தால் அதன் பின் திருமணம் என்ற வார்த்தைக்கு வேலையில்லை, பெண்கள் கொடிகளாயிருப்பின் ஆணென்ற மரம் ஒரு சில தேவைக்குத்தான். கொடி தன் இனத்தைப் பெருக்கிக் கொள்ள மரம் தேவையில்லை. அது படர்வதுக்குத் தான் மரம்தேவை. அந்த மரம் துளிர்விட்டு பச்சைப் பசேலென்று செழுமை பொருந்தியதாகவுமிருந்தாலும் சரி, குட்டை மரமானுலும் சரி, கொடிக்குத் தேவை படர்வதற்கு மரம் தான். திருமணத்தால் ஒரு பெண்ணுக்கு உரிமையாகும் ஆண்படரும் வெறும் மரமாகத்தானிருக்க வேண்டுமென்றுல் அவனுல் அவளுக்கு உணவும் உடையும் தான் ஜீரணிக்கப் படல் வேண்டுமென்றுல் ஒரு பெண்ணுக்கு வரன் தேடும் படலம் தேவையில்லை. அதில் அவன் அவளின் வயதையும் அழகையும் குணத்தையுத் சீதனத்தையும் கல்வியையும் எதிர்காலத்தையும் ஆராய வேண்டிய அவசியமில்லை. குழந்தையிலிருந்து பருவமடையும் வரை அவள் தந்தையின் நிழலில் வாழ்ந்ததைப் போல பக்குவப்பட்ட பின்பும் அவரின் நிழலிலேவாழ்ந்துவிடலாம். இனப் பெருக்கத் தசையுறவுக்காக வேறு ஆண்களை நாடலாம் தானே! அன்ரனியின் நாட் குறிப்பு மேலும் பெண்களின் மேல் வெறுப்பை ஏற்படுத்துகிறது.

வெம்பேக் சுவாமியின் போதனையின் ஆழமான பதிவும் லொரேட்டா, மேரி போன்றவர்களின் போக்கால் பெண்கள் மேலெழுந்த விரக்தியும் தான் என் ஸ்டெலஸ்டாவைஎன் தாயாகக் காண வைத்தது. அவளின் பருவப் பசிக்குத் தயங்கி ஒதுங்கி மனத்தால் நிறைவான தாயாக்கி வாழும் போது, எனக்கு பதுளைக்கு மாறுதல் வநதது. மனப்பூர்வமாக அதை ஏற்றுக் கொண்டு சென்று ஒரு வருடம் கழிந்திருக்காது ஸ்டெலஸ்டாவின் தாயிடமிருந்து தந்தி வந்தது. அதில், 'ஸ்டெலஸ்டா பிரசவத்திற்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிருள். உடனேவா என்று காணப்பட்டது.

தந்தியைப் பார்த்தவுடன் நான் நம்பவேயில்லை. எனக்குத்தானு வந்தது என திருப்பிப் பார்த்தேன். சாட்சாத் அலெக்சான்டருக்கே வந்திருந்தது. மேரி, லோரெட்டாவின் இனத்தில் என் ஸ்டெலஸ்டாவும் இணைந்துவிட்டாள். சீ...சீ... அவள் என் ஸ்டெலஸ்டா வேயில்லை. என் உழைப்பில் உறிஞ்சி எடுத்து உடையையும் உணவையும் ஜீரணித்து வந்தமூட்டைப் பூச்சியவள். புருஷன் என்றொரு ஆண் மகனை தன் கண்முன்னே மலையாக நிறுத்திக் கொண்டு பிற ஆடவருடன் உறவு கொள்ளும் பாலுறவுப் போதை கொண்ட மிருகம் அவள். அந்த மிருக உறவில் அவதரிக்கும் குழந்தைக்கு நான் தந்தையென கையொப்பமிட்டு உறுதியளிக்க அழைக்கின்றுள் அவளின் தாய். பெண்கள் பெண்கள் தான். மலர்கள் மலர்கள் தான். மலர்கள் மென்மையென்பதால் அழகு என்பதால் மானிட ஜாதியில் சேர்ந்துவிட முடியுமா? என்கையிலிருக்கின்ற தந்தி சுக்கு நூருக கிழிபடுகின்றது. என் மனக்கண்முன் மேரி, லொரேட்டா, ஸ்டெலஸ்டா மூவரும் கற்பினில் ஓரே நிறைபாகத் தென்படுகின்றனர். நான் போவதில்லை, அவளுக்குப் பிரசவிக்கப்போகும் குழந்தைக்குத் தந்தையாக கைச்சாத்திடப்போவதில்லை. அவள் யாருடன் உறவு கொண்டாளோ அவனை அழைத்து கைச்சாத்திட்டுக் கொள்ளட்டும். நான் கட்டிலின் மேல் சாய்ந்து கண்களை இறுக்க மூடிக் கொள்ளுகிறேன். இறுகக மூடிய கண்க

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தி. மு. க-சுதந்திரா அணியில் 4 கீறல்

- சபாநாயகர் தேர்தல்
- கொள்முதல், கட்டுப்பாடு
- ஜனதிபதி தேர்தல்
- மத்திய எதிர்க்கட்சி அணி

**பொ**துத்தேர்தல் முடிவடைந்ததும், தி. மு. க. — சுதந்திரா கட்சிகளின் 'தேன் நிலவு' முடிவடைந்து விட்டது என்று டெல்லியில் ஒரு நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. ராஜாஜி கூறியிருப்பது பலருக்கு ஆச்சரியத்தை அளித்துள்ள போதிலும் இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

கடந்த பொதுத் தேர்தலில் தி. மு. க.வும் சுதந்திராக் கட்சியும் காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவதையே நோக்கமாகக் கொண்டு, வாக்குகள் சிதறிவிடாமல் இருப்பதற்காக தேர்தல் உடன்பாடு செய்து கொண்டனவே தவிர ஒரு பொதுவான கொள்கைத் திட்டத்தின் கீழ் கூட்டணி எதுவும் அமைக்கவில்லை. அன்று ஏற்பட்டது போட்டித் தவிர்ப்பு உடன்பாடேயன்றி ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்த கூட்டணி யல்ல.

### வேறுபட்ட கொள்கைகள்

சுதந்திராக் கட்சியும், தி. மு. க. வும், நேர் எதிரிடையான கொள்கைகளைக் கொண்ட அரசியற் கட்சிகள். இவையிரண்டும் ஒரு பொதுத் திட்டத்தின் கீழ் இணைவது அசாத்தியமானது என்று பல அரசியல் அறிஞர்கள் கருத்துவெளியிட்டு வந்தனர்.

சுதந்திரக்கட்சி தொழிலதிபர்கள், நிலச் சுவான்தார்கள் ஆகியோரின் நலன்களைப்பேணுவதையே நோக்கமாகக் கொண்டது. ஜனநாயகப் பாராளுமன்ற முறையில் நல்ல பற்று இருக்கிறது இக்கட்சிக்கு.

ஆனல் தி. மு. க. வோ, சோசலிசத்தில் அசைக்கமுடியாத பற்றும், ஜனநாயகத்தில் உறுதியான நம்பிக்கையும் கொண்டது.

தி. மு. க. தலைவர்களிலும், தொண்டர்களிலும் பெரும்பாலோர் இடது பக்க ஓட்டம் உள்ளவர்கள். தி. மு. க. வை ஆதரிக்கும் மக்களோ, சமூகத்தில் உள்ள நடுத்தரமக்களும் உழைப்பாளிமக்களும் தான். அந்த ஏழை, நடுத்தர மக்களின் வாழ்க்கையைச் சீர் செய்ய வேண்டுமென்பது தி. மு. க. வின் உறுதியான கொள்கை.

### இருதுருவங்கள்

வடதுருவம், தென்துருவம் போன்று இரு வேறு நிலையிலுள்ள இந்த இரு கட்சிகளும் ஒன்று சேர்வது — கூட்டணி அமைப்பது — என்பது சாத்யமன்று. ஆனல் முக்கியமான அரசியற் பிரச்சினைகளில் இவ்விருகட்சிகளும் ஒத்துழைக்கும் சாத்தியம் இன்னும் இருக்கிறது.

கடந்த தேர்தலில், தி. மு. க. தனிமெஜாரிட்டியுடன் தமிழக ஆட்சியைக் கைப்பற்றத் தவறியிருந்து, எதிர்க் கட்சி கூட்டணி ஒன்று அமைந்து அதுவே ஆளுங்கட்சியாக வந்திருந்தால், அந்த ஆட்சி எவ்வளவு காலத்துக்கு நிலைத்திருக்குமோ? சொல்ல முடியாது. ஏன் என்றல் தி. மு. க.—சுதந்திராக் கட்சிகள் அவ்வளவு தூரம் வேறுபட்ட நிலையில் தமது கொள்கைகளையுடையதாக இருக்கின்றன.

நல்ல வேளையாக அப்படியொரு நிலை தமிழகத்தில் ஏற்படாமல் தி. மு. க. தனிக்கட்சியாக பதவிக்கு வந்து விட்டது.

### எதிர்பார்த்தது நடக்கவில்லை

தேர்தலில் தி. மு. க. பரிபூரணபெரும்பான்மைபெற்று ஆட்சிக்கு வருமென்று தி. மு. க.வுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொண்ட கட்சிகள்—முக்கியமாக சுதந்திராக்கட்சி எதிர்பார்த்திருக்க முடியாது. தேர்தலில், தி. மு. க. வுடன் சேர்ந்து ஒரு கூட்டரசாங்கம் அமைக்க முடியுமென்றும் தனது கொள்கைகளைக் சிறுகச் சிறுக அமுல் நடத்தலாம் என்றும் சுதந்திராக்கட்சி எதிர்பார்த்திருக்கலாம். மதிப்பீடு தவறிவிட்டது.

ஆனல் தி. மு. க. தனித்து ஆட்சிக்கு வந்தது சுதந்திராக் கட்சிக்கு முழு மகிழ்ச்சியை அளிக்கவில்லையென்றும், தான் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை என்றும் சுதந்திரா தலைவர் டில்லியில் நிருபர்களிடம் கூறியது இதுவாக இருக்கலாமென்று ஒரு பம்பாய் பத்திரிகை எழுதுகிறது.

சுதந்திரா—தி. மு. க. கட்சிகளிடையே தேர்தல் முடிந்த பின்பு நீண்டகாலத்துக்கு உறவு நீடித்து இருந்துவர முடியாது என்று எதிர்பார்க்கப் பட்டபோதிலும், அது இவ்வளவு சீக்கிரம் கசப்பான நிலைக்கு வரும் என்று, யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

### முதல் கீறல்

சட்டமன்ற சபாநாயகர் பதவிக்கு போட்டியிட்ட தி. மு.க. வேட்பாளர் திரு. எஸ். பி. ஆதித்தனை சுதந்திராக்கட்சி எதிர்த்துப் போட்டியிட்ட போதுதான் தி. மு. க.—சுதந்திரா உறவு விரிசலடைந்திருக்கிறது என்பது வெளிக்குத் தெரிந்தது.

ஆனல் இந்த விரிசல் தேர்தல் முடிந்த மறுநாளே சுதந்திராக்கட்சி தலைவரின் மனதில் ஏற்பட்டுவிட்டது என்பது சென்னை கடற்கரையில் நடைபெற்ற வெள்ளிவிழாக் கூட்டத்தில் ராஜாஜி ஹாஸ்யமாக குறிப்பிட்ட ஒரு வார்த்தையிலிருந்து தெரிந்தது. அதை ராஜாஜி நகைச்சுவையுடன் குறிப்பிட்டாலும், அதில் அர்த்தபுஷ்டி தொக்கிநின்றது.

'இன்று தான் முதன் முதலாக திரு. அண்ணுதுரை எனது வார்த்தையை தட்டி நடந்துவிட்டார். நான் கடைசியில் பேசப் போவதாக கூறினேன். அதற்கு அவர் மறுத்து விட்டார்.' இதுதான் அன்று ராஜாஜி கூறிய வாசகம். இந்த வாசகத்தின் பொருளை இன்று போகப் போக உணர முடிகிறது.

### இரண்டாவது கீறல்

கடந்த வாரம் சென்னை சட்டமன்றத்தில் நடைபெற்ற அரியணை உரை விவாதத்தின் போதும், தி. மு. க., சுதந்திரா கொள்கைமோதல் சர்வசாதாரணமாக நடைபெற்றிருக்கிறது. கட்டாய கொள்முதல், கட்டுப்பாடு முதலியவற்றை அடியோடு நீக்கவேண்டுமென்று சுதந்திராக்கட்சி கோரியது. அவற்றை நீக்குவதில்லையென்று தி. மு. க. அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

### மூன்ருவது கீறல்

இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலிலும் தி. மு. க. வும் சுதந்திராவும் இன்று நேர் மாருக நிற்கின்றன. ஜெயப்பிரகாஷ் நாராயணனை ஆதரிக்கும்படி தி. மு. க. வுக்கு சுதந்திராக்கட்சி விடுத்த வேண்டுகோளை, தி. மு. க. நிராகரித்துவிட்டு டாக்டர். ராதாகிருஷ்ணனையே ஆதரிக்க முடிவு செய்துள்ளது. இஃது இரு கட்சிகளிடையேயும் ஏற்பட்ட மூன்ருவது மோதுதலாகும்.

### நான்காவது கீறல்

இரு கட்சிகளின் ஒற்றுமையில் ஏற்பட்ட நான்காவது வெடிப்பு டில்லி லோகசபையில் எதிர்க்கட்சிகளின் ஐக்கிய முன்னணி நிறுவுவதில் ஏற்பட்ட தோல்வியாகும்.

தி. மு. க.வும், ஜனசங்கமும் சுதந்திராவும் சேர்ந்து லோகசபையில் ஐக்கிய முன்னணி அமைத்து வலுவுள்ள எதிர்க் கட்சியாக இயங்கவேண்டுமென்பதில் ஆர்வம் கொண்ட சுதந்திரா அதற்காகப் பாடுபட்டுவந்தது.

சென்னை கடற்கரையில் நடந்த வெற்றிவிழாக் கூட்டத்தில்சுதந்திராக் கட்சித்தலைவர் பேசுகையில் இம் மூன்றுகட்சிகளையும் இணைத்து ஓர் அனைத்திந்தியக் கட்சி உருவாக்கப் படும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று கூறினர்.

ஆனல் தி. மு. க. பாராளுமன்றத்தில் அத்தகைய கூட்டணியில் சேர மறுத்துவிட்டதாம். மூன்றுகட்சிகளையும் ஐக்கியமாக்கி ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கும் திட்டத்திற்கும் தி. மு. க. சம்மதமளிக்கவில்லை.

ஆனல் அடுத்துவரும் தமிழ் நாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இவ்விரு கட்சிகளுக்குமிடையே போட்டித் தவிர்ப்பு உடன்பாடு ஏற்படுவதுசாத்தியமேஎன்றுசென்னை தி. மு. க. வட்டாரங்களில் கூறப்படுகிறது.

—எஸ். ஆர். எம்.

# ஸ்டாலினின் மகளிடம் முக்கிய இரகசியங்கள்

## சி. ஐ. ஏ. வசம் சிக்கியவளை ரஷியர் தேடுகின்றனர்

**சு**வெட்லாளு— இந்தப் பெயர் இன்று சர்வசாதாரணமாக பத்திரிகைகளில் அடிபடுகிறது. சுவெட்லாளு வெறும் சாதாரண சுவெட்லாளுவாக இருந்திருந்தால் இன்று இவ்வளவு முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கமுடியாது. ஆனல் நீண்ட நெடுங்காலமாக சோவியத் நாட்டின் பல ரகசியங்கள் அடங்கிய கிரம்ளின் மாளிகையில் தனது இளமைப்பருவத்தை கழித்தவள் இந்த சுவெட்லாளு—ரஷ்யாவின் சர்வாதிகாரியாக விளங்கிய ஸ்டாலினின் அன்பு மகள். அதனல் தான் இன்று ரஷ்யாவை விட்டு வேளியேறி, சுவிட்சர்லாந்தில் தலைமறைவாக வாழும் இவளைப் பற்றி உலகெங்கும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஸ்டாலின் ரஷ்யாவின் சர்வாதிகாரியாக வந்த அடுத்த ஆண்டில் 1925ம் ஆண்டு பிறந்தவள்தான் இந்த சுவெட்லாளு. சின்னவயதில் கிரம்ளின் மாளிகையில் தவழ்ந்தும் ஓடிவிளையாடியும், இளமையைக் கழித்தும் வந்தவள் சுவெட்லாளு.

எனவே அவளுக்கு ஸ்டாலின் காலத்தில் நடைபெற்ற அரசியல் சம்பவங்கள், சதிகள் யாவும் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன், இன்றைய பல ரஷ்யத்தலைவர்களுக்கும் அவற்றில் எவ்வளவு பங்கு இருந்தது என்பதை [illegible] அறிந்து வைத்திருக்[illegible] தான் அறிந்துவைத்துள்ள இரகசியங்களால் தான் இன்று ரஷ்யத் தலைவர்களுக்கு இவள் பிரச்சினைக்குரியவளாகியிருக்கிருள். அதே சமயம் இவளை பயன்படுத்தி அரசியல் லாபம் பெற அமெரிக்க உளவு ஸ்தாபனம் (சி ஐ. ஏ.) முழு முயற்சியெடுத்து அவளுக்கு உதவியளித்து வருகிறது.

### அஸ்தியைக்கரைக்க இந்தியா வந்தாள்

சுவெட்லாளுவுக்கு 4 கணவர்கள் என்று கூறப்படுகிறது. இந்த நாலு கணவர்களில்கடைசியானவர்தான் முன்ளுள் இந்திய மகாராஜா ஒருவரின் வழித்தோன்றலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினருமான பிரஜேஷ் சிங் என்பவர். சுவெட்லாளுவுக் ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிருர்கள்.

கடந்த நவம்பர் மாதம் பிரஜேஷ்சிங் காலமானதற்கு பின்னர்தான் சுவெட்லாளு பிரச்சினைகளில் சிக்கவேண்டி நேரிட்டது. தனது கணவரின் அஸ்தியை இந்தியாவிலுள்ள யமுனையில் [illegible] அனுமதி பெற்றுக் கொண்டாள் சுவெட்லாளு.

இந்தியாவுக்கு வந்த சுவெட்லாளு யமுனையில் தன் கணவனின் அஸ்தியைக் கரைத்துவிட்டு, இந்தியாவிலுள்ளதமது கணவரின் உறவினருடன் இருந்துவந்தாள்.

### தினேஷ்சிங்குடன் சந்திப்பு

அவள் புதுடெல்லிக்கு வந்த போது இந்திய வெளிவ்வகார அமைச்சரும், அவளது கணவனின் உறவினரும் இந்திய வெளிவிவகார அமைச்சருமாகிய தினேஷ் சிங்கின் இல்லத்தில் ஒரேயொருநாள் தங்கியிருக்கிருள். அவள் அங்கு தங்கியிருந்த போது, தினேஷ் சிங்கிடம் இந்தியாவில் தான் அடைக்கலமாக இருக்க விரும்புவது பற்றித் தெரிவித்திருக்க வேண்டுமென்றும், ரஷ்யாவின் பழைய சர்வாதிகாரியொருவரின் மகளுக்கு இந்தியா இடங் கொடுப்பது ரஷ்ய இந்திய நல்லுறவைப் பாதிக்கும் என்றும் அதனல் அந்த யோசனையை கைவிடும்படியும் தினேஷ் சிங் யோசனை கூறிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

தம்மைச் சுவெட்லாளு சந்தித்தது பற்றிக் குறிப்பிட்ட திருமதி. இந்திரா காந்தி, இந்தியாவிடம் அடைக்கலமாவதற்கு விருப்பம் தம்மிடம்எதையும் சுவெட்லாளு தெரிவிக்கவில்லையென்று கூறியிருக்கிருர்.

இதன் பின்னர், ஒரு நாள் காலையில் புதுடெல்லியிலுள்ள ரஷ்ய தூதரகத்துக்கு சுவெட்லாளு சென்றிருக்கிருள். இந்தியாவில் தான் இன்னும் நீண்ட நாட்களுக்கு தங்கிநிற்பதற்கு விசாவைப் புதுப்பிக்கும்படி சுவெட்லாளு கேட்டதாகவும், அதற்கு ரஷ்ய தூதரகம் மறுத்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

### அமெரிக்க தூதரகத்துக்குச் சென்றது ஏன்?

இதற்கு அடுத்த நாட் காலை சுவெட்லான தானே ஒரு டாக்சியை அமர்த்திக் கொண்டு டெல்லியிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு சென்ருள் என்று தெரிகிறது.

மறு நாள் சுவெட்லாளு சி. ஐ. ஏ. என்னும் அமெரிக்க உளவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியுடன் விமானத்தில் ரோமுக்கு பயணமானள். பின்னர் அங்கிருந்து அவளை அமெரிக்க உளவு ஸ்தானம் சுவிட்சர்லாந்துக்கு அழைத்துக் சென்றதாக கூறப்படுகிறது.

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நான் 'டூப்' காரனல்ல'

**நான்** ஜெமினி ஸ்டுடியோவில் பணி புரிந்து கொண்டிருந்தபோதே சினிமா நடிகனுக ஆகவேண்டும், புகழும் பணமும் சம்பாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட துண்டு. சினிமா நடிகர்கள் தான் மக்கள் மத்தியில் சீக்கிரமாக பிரபலமாக வந்து விடுகிருர்கள். நானும் சினிமாவில் நடிக்க நினைத்ததில் தப்பென்ன இருக்க முடியும்? மேலும் நண்பர்கள் நான் நடிகனுகவேண்டும் என்று அடிக்கடி ஆர்வமூட்டுவார்கள்.

இப்படி எனக்கு ஆசைவந்து சினிமாக் கோட்டையை என் எண்ணங்கள் முற்றுகையிட்டுக் கொண்டிருந்த போது சக்ரதாரி படத்தில் கிருஷ்ணனுக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அசல் கிருஷ்ணனைப் பார்ப்பது போலவே இருக்கிறது என்று ரசிகர்களும் நண்பர்களும் பாராட்டினுர்கள். ரசிகர்கள் பாராட்டு ஒரு நடிகனுக்குக் கிடைத்துவிட்டால் போதாதா?

வேலைக்கு முழுக்குப்போட்டு விட்டுபடங்களில் தொடர்ந்து நடிக்கலானேன். மனம் போல் மாங்கல்யம் படத்தில் எனக்கு புகழ் கிடைத்தது. நான் நட்சத்திரபதவி அடைந்ததும் இந்தப் படத்தின் மூலம்தான்.

ஆனுல் நான் அந்தப் பதவியை அடைவதற்கு முன்னுல் எடுத்துக் கொண்ட சிரமம் என்ன என்பதை நான் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

நான் சினிமாவுக்கு ஏற்ற விதத்தில் கொடுக்கப்படும் பாத்திரத்தின் அமைப்பைப் புரிந்து கொண்டு டைரக்டர் சொல்லுகிறபடி நடிக்கக் கடமைப்பட்டவன். எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் பின் வாங்க மாட்டேன். எனக்கு எப்பொழுதும் ஓர் அசாத்திய தைரியம் உண்டு என்பதைச் சொல்லுவது தவறல்ல என்று கருதுகிறேன்.

பொதுவாக இன்று போல் அன்றைக்கும் ஒரு நடிகனுக்குப்பதில் இன்னொரு நடிகனை 'டூப்' போட்டு நடிக்கவைக்கும் முறை இருந்தது. கஷ்டமான பாகங்களில் அந்த 'டூப்' நடிகர் தான் நடிப்பார். தூரக் காட்சியில் அந்த 'டூப்' நடிகர் நடிக்கும் காட்சிகளைப் படமாக்கி விடுவதால் எதையுமே ரசிகர்களால் தெரிந்து கொள்ள முடியாது.

மனம் போல் மாங்கல்யம் படம் பார்த்த ரசிகர்கள் நான் ஒரு பாழுங் கிணற்றினுள் குதிப்பதையும், கரைக்கு வந்த பின்பு வாயினுள்ளேயிருந்து உயிருடன் துடிக்கும் ஒரு மீனை வெளியே எடுப்பதையும் பார்த்திருக்கலாம். இவை இரண்டும் சாதாரணமானவை என்று நினைக்கிறீர்களா?

நான் குதிக்க வேண்டும் என்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறு இன்னும் ராயப்பேட்டையிலேயே இருக்கிறது. காமிராவும் மற்ற பொருட்களும் தயார் செய்யப்பட்டன. நான் மேக்கப்புடன் வந்து குதிக்க வேண்டிய கிணற்றைப் பார்த்தேன்.

கிணறு ஆழமாகவும், அதே நோத்தில் சுத்தமில்லாத தண்ணீர் உள்ளதாகவும் தோன்றியது.

படத்தின் கதாசிரியரும், உதவி டைரக்டருமாகிய திரு. கே. வி. ஸ்ரீநிவாஸ், பட அதிபர் திரு. பட்டண்ணுவிடம் கிணற்றினுள் வேறுயாரையாவது குதிக்கவைத்துப் படமாக்கிவிடலாமே என்று யோசனை கூறினுர். அந்த யோசனை எல்லோருக்குமே திருப்தியாக இருந்தது.

நான் படவுலகில் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்த காலம் அது. சாவித்திரியிடமும் அப்பொழுது தான் நட்பு ஏற்பட்டு, அந்த நட்பும் வளர்ந்து கொண்டிருந்த நேரம் அது. எனவே நான் குதிக்க வேண்டிய கிணறு பாழுங்கிணறு என்பதால் எல்லோரும் அஞ்சுவது இயல்பு தானே; அதிலும் டைரக்டர் கே. வி. எஸ். என் மீது தனி அன்பு வைத்திருப்பவர். படப் பிடிப்பில் கலந்து கொள்ள வந்த சாவித்திரியை முதன் முதலில் எனக்கு அறிமுகம் செய்து வைத்தவரும் அவர் தான்.



## ஜெமினி கணேசன் சொல்கிருர்

எனக்குப் பதிலாக இன்னெரு நடிகர் கிணற்றினுள் குதிப்பதை நான் விரும்பவில்லை. பொதுவாக நான் 'டூப்' போடுவதையே விரும்ப மாட்டேன். எந்த ஒரு காரியத்தையும் நானுகவே செய்தால்தான் திருப்தி ஏற்படும்.

நான் டைரக்டரிடம் சென்று 'டூப்போடாமல் நானே கிணற்றினுள் குதிக்கப்போகிறேன். அப்பொழுது தான் காட்சி தத்ரூபமாக அமையும்' என்று சொன்னேன். பிடிவாதமாகவும் கூறினேன்.

எல்லோரும் என்ன நடக்குமோ என்று பயந்துபோதிலும் கடைசியில் சம்மதித்தார்கள். நான் கிணற்றினுள் அவர்கள் சற்றும் எதிர் பார்க்காத விதமாக தலைகீழாகவே குதித்து விட்டேன். அதிர்ஷ்டவசமாக உடலிலோ, தலையிலோ அடிபடவில்லை.

அதன் பிறகு உயிருடன் உள்ள மீனை வாயினுள் வைத்திருக்கும் காட்சியைப் படமாக்க ஏற்பாடு செய்யப்பட்டது. உயிருடன் துடிக்கும் மீன் தொண்டையினுள்போய் விட்டால் என்னுவது? அவ்வளவு தான்!

வாயினுள் மீனைவைத்திருப்பது அபாயகரமானவேலை என்பதால் அசல் மீனுக்குப் பதில் மீன்போல் செய்யப்பட்ட மிட்டாயை வாய்க்குள் வைத்துக் கொள்ளலாமே என்று யோசனை கூறினுர்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளாமல் உயிருடன் உள்ள அசல் கெண்டை மீனையே வாய்க்குள் வைத்துக் கொண்டேன். அந்தக் காட்சி படத்தில் நன்ருக அமைந்திருந்தது.

இப்படி எதையும் நானுகவே செய்தால்தான் திருப்தி ஏற்படுகிறது. ஆனுல் ரசிகர்கள் சிலவற்றை நம்ப மறுக்கிருர்கள். இது ஜெமினிகணேசன் செய்யவில்லை. டூப் போட்டிருக்கிருர்கள் என்று சொல்லிவிடுகிருர்கள்.

எல்லா காட்சிகளிலுமே நான்தான் நடிக்கிறேன். 'டூப்' போடும் அவசியத்தையே வைத்துக்கொள்வதில்லை.

கொஞ்சும் சலங்கை படத்தில் நடிக்கும் பயங்கர சண்டைக் காட்சிகளில் எல்லாம் நெருப்புக்கு மத்தியில் நான் தான் சண்டை போட்டிருக்கிறேன், எத்தனையோ படங்களில் துணிச்சலான காரியங்கள் செய்யும் போது உடலின் பல பகுதிகளில் காயங்கள் கூட பட்டிருக்கின்றன.

எனக்கு குதிரை ஓட்டத் தெரியும். எத்தனையோ படங்களில் குதிரைச் சண்டைகளையும் நீங்கள் பார்த்திருக்கலாம்.

நான் நன்ருகப் பாடுவேன். முறைப்படி சண்டையும் செய்வேன். இரவல் குரல் பாடுவதற்கென்று பழக்கப்படுத்தி விட்டதால் இனி படங்களில் பாடிப் பயன் இல்லை. ஆனுல் சண்டைசெய்வதில் பின் வாங்கமாட்டேன்.

சமீபத்தில் வெளியான 'சரசுவதி சபதம்' படத்தில் முதலில் நான் கோழையாக நடிக்கிறேன். பிறகு வீரனுக மாற்றப்படுகிறேன். கடைசியில் நடைபெறும் சண்டைக்காட்சியில் மாமிச மாலை போன்ற ஒரு பெரிய மல்லனை அலாக்காகத்தூக்கி தோள் மீது போட்டுக் கொண்டு சில சுற்றுகள் சுற்றிவிட்டுக் கீழே போடுகிறேன்.

இந்தக்காட்சியைப் பார்த்த ரசிகர்கள், 'ஜெமினிகணேசனுவது, அந்த மாமிச பர்வதத்தைத் தூக்குகிறதாவது. எல்லாம் டூப்' என்று பேசிக்கொள்கிருர்கள். கண்ணெதிரே பார்த்தபிறகும் அதை நம்ப மறுக்கிருர்கள்.

உண்மையிலேயேநான்தான் அந்த மல்லனைத் தூக்கிப் போட்டேன். இனியாவது டூப் என்று தயவு செய்து குறை கூருதீர்கள்.

என் சினிமா வாழ்க்கை சுவையாக இருந்தது. ரசிகர்களின் அன்பான ஆதரவு தொடர்ந்து கிடைத்திருக்கும் போது கவலை என்னை அணுகுமா? எப்பொழுதும் மகிழ்ச்சியுடனேயே வாழ்க்கை நடத்துகிறேன்.



'கந்தன் கருணை'யில் நாகேஷ், மனோரமா இப்படி வருகிருர்கள்.

திரை விமர்சனம்:

# கந்தன் கருணை

**க**ந்தக் கடவுளின் பெருமைகளை விளக்கும் கந்த புராணத்திலிருந்து கொஞ்சம்; கர்ணபரம்பரைக் கதைகளிலிருந்து கொஞ்சம்; 'ஔவையார்' படத்திலிருந்து கொஞ்சம்; தன் கற்பனையிலிருந்து கொஞ்சம்; இப்படி அங்கும் இங்கும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து கந்தன் கருணையை உருவாக்கியுள்ளார் கலைஞர் ஏ. பி. நாகராஜன்.

'திருவிளையாடல்' தந்த வெற்றியை அடுத்து சரஸ்வதி சபதத்தை தயாரிதத நாகராசன் தமதுமூன்ருவதுபுராணப் படமாக ஏ. எல். எஸ். ஸுக்காக 'கந்தன் கருணையை' உருவாக்கியிருக்கிருர்.

பக்தியை வளர்க்கவே புராணப் படங்களை அவர் தயாரிக்கிருர் என்று சொன்னுல், அந்த நோக்கத்தை 'கந்தன் கருணை' எவ்வளவு தூரம் நிறைவேற்றியிருக்கிறது என்பதை ரசிகர்களே தீர்மானித்துக்கொள்ளட்டும்.

துள்ள மாஸ்டர் ஸ்ரீதர் ஆகியோர் நன்ருக பாத்திரமறிந்து நடித்துள்ளனர். தெய்வயானையாகத் தோன்றும் விஜயா நடிப்பு பாராட்டும்படியாக இருக்கிறது.

வள்ளிநாயகியாக வரும் ஜெயலலிதா 'தொப்புள்' காட்டத்தான் வேண்டுமா?

சூரபன்மனுக நடித்துள்ள அசோகன் பாராட்டுப் பெறுகிருர், பாலாஜி பானுகோபன், சகாதேவன் சிங்கன், ஜி. சகுந்தலா அசமுகி.

செட்டுக்கள் அமைப்பு பிரமாதம்.

தெய்வயானை — முருகன் முதலிரவு காட்சியை அசிங்கப்படுத்தாமல் எடுக்க ஏ. பி. என். முயற்சித்திருக்கிருர். எனினும் அந்த நேரத்தில் புராணப் படத்திலும்கூட— பாட்டு அவசியம்தானு?

சிவாஜி வரும் காட்சிகளில் எதையாவது பாராட்ட வேண்டுமானுல் சூரனிடம் தூதாகச் சென்று வாதாடும் காட்சியைக் கூறலாம்.



படத்தின்பெயர் என்னமோ 'கந்தன் கருணை'தான். ஆனுல் 'வீரபாகு கருணை' என்று போடலாம்போல இருக்கிறது. படத்தில் வீரபாகுவுக்குக் கொடுத்த தேவையற்ற முக்கியத்துவம் படத்தின் நாயகனை கந்தனுக்குத் தரப்படவில்லை. வீரபாகுவாக நடித்த நடிகர் திலகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்பதற்காக கந்தக் கடவுளை ஏ. பி. என். இப்படி அலட்சியம் பண்ணியிருக்க வேண்டுமா?

கந்தனிடம் வீரபாகு கண் சிமிட்டுவதும், உரப்புவதும், தொட்டுப் பேசுவதும் சகிக்க முடியவில்லை. என்னதான் அண்ணனுலும் — அதிலும் கடவுளிடம் இவ்வளவு 'சோஷியலா'?

கந்தனுக நடித்துள்ள சிவகுமார், பால முருகனுக நடித்

ஏ. பி. என். னின் அழகு தமிழ் வசனங்கள் தேன் சொட்டுகின்றன. அத்துடன் கே. பி. சுந்தராம்பாளின் பாடல்கள் இனிமை சேர்க்கின்றன.

பாடல்களை கண்ணதாசன் இயற்றியுள்ளார். அருணகிரி நாதர் இயற்றிய 'ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம்' என்ற திருப்புகழின் கடைசி அடியை விரும்பியபடி மாற்றியமைத்தது மன்னிக்க முடியாத குற்றம்.

ஏ. பி. என். னின் இனிமை சொட்டும் தமிழ் வசனங்களைக் கேட்கவும் இன்னிசையில்மிதக்கவும், காட்சி ஜோடனைகளில் இதயத்தைப் பறிகொடுக்கவும் கந்தன் "கருணையைப் பார்க்கலாம்.

—மகேஸ்.

## எம். ஜி. ஆர். வீட்டின் பெயர்!

தேவரின் தண்டாயுதபாணி பிலிம்ஸார் முழு நீள கலர்ப் படம் ஒன்றை எம். ஜி. ஆர். வீட்டின் பெயரில் தயாரிக்க இருக்கின்றனர். அதாவது அப்படத்திற்கு 'தாய்வீடு' என்று பெயர். எம். ஜி. ஆர். வீட்டின் பெயரும 'தாய்வீடு' தான் என்பது நேயர்களுக்கு தெரிந்திருக்கும்.

இது சாகசச் செயல்கள் பலவற்றைக்கொண்ட ஒரு வேட்டைக்காரச் சூழ்நிலையைக் கொண்ட படமாக இருக்குமென்றும் ஜெயலலிதா நாகேஷ் ஆகியோர் நடிப்பார்களென்றும் கதாநாயகனைப்பற்றி விரைவில் அறிவிக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

தயாரிப்பில் இருக்கும் 'மகராசி'க்குப் பின் இப்படம் தயாரிக்கப்படுமாம்.

இதற்கு முன்பு தேவர் தனது அடுத்த கலர் படத்தில் எம். ஜி. ஆர். நடிப்பார் என்று அறிவித்திருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவாணன் பதில்கள்

எஸ். பி. சண்முகம்,
நாககெட்டியா.

கே: நட்சத்திர ரோஜாக்கள் எத்தனை?

ப: ஐந்து!

கே: நட்சத்திர நிர்மலாக்கள் எத்தனை?

ப: மூன்று!

கே: திருமதி. பத்மினி தன் கணவரை விட்டுப் பிரிந்துவிட்டாரா?



ப: தற்போது பத்மினி சென்னையிலும், அவரது கணவன் லண்டனிலுமாகப் பிரிந்து தான் இருக்கிறார்கள்!

கே: திருமதி சரோ மீண்டும் படங்களில் நடிப்பாரா?

ப: நடிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

கே: சாவித்திரியைப்பற்றி 4 வரிகள் கூறுங்கள்!

ப: எவருடனும் நடிப்பில் ஈடு சொல்ல முடியாத 'நடிகையர் திலகம்'. ஜெமினி கணேசனின் அருமை மனைவி. இரண்டு குழந்தைகளுக்குத் தாய். தனது கணவனை 'ஜெமினிப்பிள்ளையார்' என்று கேலி செய்யும் இவர் இப்போதுதானே பிள்ளையாராகி வருகிறார்.

ஃ

எம். எல். ஹசன்,
ஏருவூர்-3.

கே: எம். ஜி. ஆர். நடித்து அதிகவசூலை கொடுத்த 5 படங்கள் எவை?

ப: மலைக்கள்ளன், மதுரை வீரன், நாடோடி மன்னன், எங்கவீட்டுப்பிள்ளை, அன்பே வா.

ஃ

எம். அசிஸ்,
ஏருவூர்-3.

கே: தங்கவேலுவின் முதல் படம் எது? அவர் எத்தனைபடங்களில் நடித்துள்ளார்?



ப: முதல்படம் சதிலீலாவதி. நடித்துள்ள படங்கள் 116.

கே: சினிமா உலகில் முதல் முதல்தயாரித்து வெளியிடப்பட்ட பேசும் படம் எது?

ப: மகாகவிகாளிதாஸ்-இது 1931ல் வெளிவந்தது.

ஃ

சி. மரியநாயகம்,
மருதானை.

கே: குமாரி சச்சுவின் தற்போதைய முகவரி என்ன?

ப: பெயருடன், மைலாப்பூர், சென்னை-4.

கே: குமாரி சச்சு முதலில் தேவதாஸ் படத்தில் நடித்தாரா? அன்றேல் காவேரி படத்தில் நடித்தாரா?

ப: இரண்டிலுமல்ல. சச்சு முதன் முதலில் நடித்தது ஜுபிடரின் 'ராணி' படத்தில். இப்படத்தின் டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி.

கே: சிவாஜி கணேசனின் முகவரி என்ன?

ப: பெயருடன், போக்ரோடு, சென்னை என்று போட்டால் போதும்.

கே: நகைச்சுவை நடிகர் நாகேஷ் இலங்கைக்கு வருகை தருவது எப்போ? சாத்தியமாகுமா?

ப: திரையுலகின் இன்றைய 'பிசி' நடிகரான நாகேஷை இலங்கைக்கு அழைத்துவர முயற்சிகள் நடக்கின்றன. அவருடன் கூட மனோரமாவை அழைத்துவரவும் முயற்சிசெய்யப்படுவதாக கேள்வி.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: சிவாஜி கணேசன் எந்தப் படத்தில் போலீஸ் இன்ஸ்பெகடராக நடித்துள்ளார்?

ப: 'நவராத்திரியில்' அவர் ஏற்ற ஒன்பது பாகங்களில் அதுவும் ஒன்று என்பதை மறந்துவிட்டீரா?

ஃ

எச். ஹுசைன்,
ஏருவூர்,

கே: நாகேஷ் நடித்த முதல் தமிழ் படம் எது?



ப: 'மனம்போல மாங்கல்யம்' என்று அவரே கூறியிருக்கிறார்.

ஃ

சு. சின்னக்கறுப்பன்,
பலாங்கொடை.

கே: இலங்கையில் எம். ஜி. யாருக்குக் கொடுத்த நடிப்பு மன்னன் என்ற பட்டம், சிவாஜி திரையுலகிலிருந்து விலகும்வரை எம். ஜி. ஆருக்குப் பொருந்தாது என்று நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன். உங்கள் கருத்து என்ன?

ப: உங்கள் கருத்து தவறானது. இலங்கையில் எம். ஜி. ஆருக்கு அந்தப்பட்டம் வழங்கப்படுமுன்னரே, தமிழகத்தில் நாடோடி மன்னன் வெற்றி விழாவின் போது அப்போதைய தமிழக நிதியமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்களால் 'நடிகமன்னன்' என்ற பட்டம் மக்கள் திலகத்துக்கு வழங்கப்பட்டுவிட்டது.

ஃ

எல். குமார்,
மன்னார்.

கே: பண்டைக் காலத்துப் பெண்களுக்கும் இப்பொழுதுள்ள நடிகைகளுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: பண்டைத் தமிழ் பெண்களிடம் அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு என்ற 4 குணங்கள் இருந்தன. இக்கால நடிகைகளைக் கேட்டால் அவை என்னவென்று கேட்பார்கள்.

திரைவாணன்,
சுதந்திரன் கலைப்பகுதி,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

## குரு சதன்

விலங்குகள், பறவைகள்போல குரல் கொடுப்பதில் சதன் ஒரு புலி. அவருடைய திறமையை எல்லாக் கலைஞர்களும் (தவளைகளும் பாபபுகளும் உட்பட) பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பது கண்கூடு.

அவரைப்போல் நானாவிதமான குரல்களை எழுப்ப வேண்டும் என்று நினைத்த வாலிபர் ஒருவர் சமீபத்தில் சதனைச் சந்தித்து, அதைக் கற்றுக் கொடுக்குமாறுகேட்டார். அதற்குசதன் ''ஐயா, சிஷ்யரே! இதையெல்லாம் ஒரு வாத்தியாரை வைத்துக் கொண்டு கற்றுக்கொள்ள முடியாது. பல வாத்தியார்கள் தேவைப்படும். அவர்களை ஒரு பள்ளிக்கூடத்தில் சந்தித்து விட முடியாது. பல பள்ளிக்கூடங்களில் பரவிக் கிடக்கிறார்கள்' என்று கூறினார். வந்த சிஷ்யருக்கு அது புரியவில்லை.

பிறகு சதன், அவருக்குப் புரியும்படியாக, 'வாத்தியார்கள் என்றால் மிருகங்கள், பறவைகள், ஆகியவை. பள்ளிக்கூடங்கள் என்றால் வன விலங்குகள் இருக்கக் கூடிய காடுகள், மிருகக் காட்சிசாலைகள், சர்க்கஸ் கூடாரங்கள் முதலியவை' என்று கூறிவிட்டு. 'இன்று வரை எனக்கு நேரம்கிடைக்கும் போதெல்லாம் மிருகக் காட்சி சாலைக்குச் சென்று அங்குள்ள வாத்தியார்களிடம் பாடம் கேட்டுத்தான் வருகிறேன்! ஆகவே, உங்களுக்கு குருவாக இருக்கத் தகுதி படைத்தவன் நானல்ல; அவர்களே!' என்று கூறினர்.

அதற்குப் பிறகு சிஷ்யர் அங்கு நிற்கவில்லை.

'வருகிறேன்' என்று புறப்பட்டு விட்டார்.

அநேகமாக அவர் மிருகக் காட்சி சாலைக்குத்தான் போயிருப்பார் என்று சதன் கூறுகிறார்!

# கலைஞர்களை வாழ வைக்கும் தெய்வம் எது?

எனக்குத் தெரிந்த மட்டில் பில்லிமோரியா என்ற கலைஞர் ஒருவரே தன் ரசிகர்களுக்கு தொடர்ந்து பதில் எழுதியவரென்றும் கையெழுத்திட்ட புகைப்படங்களை ஏராளமாக ரசிகர்களுக்கு அனுப்பி வந்தவரென்றும், இதற்காகவே ஒரு தனி காரியதரிசியை வைத்திருந்தவரென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இந்த வழியை இன்று கடைப்பிடிப்பவர்கள் யார் இருக்கிறார்கள்?

கலைஞர்கள் பல வழிகளிலும் ரசிகர்களின் மனதை புண்படுத்தினாலும் அவர்கள் தங்கள் ரசிகத் தன்மையை மாற்றிக் கொள்வதில்லை.

அவர்களுக்கு அரசியலைப் பற்றிய கருத்துக்கள் மாறும்- கட்சிகளில் உள்ள கொள்கைகள் மாறும். கொள்கைகளில் உள்ள பிடிப்புகள் மாறும் - பிடிப்புகளில உள்ள உறுதிகள் மாறும் - காலம் மாறும், தலைநகர் மாறும், தலைமைகள் மாறும்- ஆனல், கலைஞர்களின் வாழ்க்கைப் பாதையைப் படித்து மகிழும் ஆர்வம் மட்டும் மாறாது.

தலைவர்களின் சுயசரிதைகள் வீர புருஷர்களின் வரலாறுகள், மேதைகளின் வரலாற்றுக் காவியங்கள் ஆகியவைகளில் ஒன்றைக் கூடப் படித்திராத, அவைகளின் முன்னுரையைக்கூட நுகர்ந்திராத மனிதர்கள் இருக்கலாம். நான் நிச்சயமாகவும் கூறுவேன், - அப்படியும் சில பேர் இருக்கிறார்கள்!

ஆனல், ஒரு கலைஞருடைய வாழ்க்கையைப் படித்திராத அல்லது கேட்டு அறியாதவர்கள் இருக்க முடியாது.

'இப்பொழுது நான் பார்ப்பதில்லை' என்று பகவத் கீதையைக் கையில் வைத்துக் கொண்டு சிலர் கூறலாம். அவர்கள் கூறுவதும் உண்மையாக இருக்கலாம்!

அவர்களும் எப்பொழுதாவது டி. பி. ராஜலெட்சுமி அல்லது அஸ்வத்தமா போன்ற கலைஞர்களின் ரசிகர்களாகவே இருந்திருப்பார்கள். வாழ்க்கை வரலாறுகளைப்



## ஜெயலலிதா சொல்கிறார்

படித்தவர்களாகவே இருந்திருப்பார்கள் - கிட்டப்பா அல்லது வி. ஏ. செல்லப்பா போன்ற கலைஞர்களின் திறனைச் சுவைத்துக் கூறியவர்களாகவே இருந்திருப்பார்கள்.

'படிப்பதற்கு நீ லாயக்கில்லை' என்று ஆசிரியர்களால் ஒதுக்கப்படும் மாணவர்களும் கூட கலைஞர்களின் வாழ்க்கைகளைப் படித்தவர்களாகவே இருப்பார்கள்.

ஒதுக்கிய ஆசிரியரும் ஒரு ரசிகராகவே இருப்பார் யாராவது ஒரு கலைஞருககு!

நீ உதவாக்கரை' என்று பெற்றோர்களால் ஒதுக்கப்படும் பிள்ளைகளும் சினிமாக் கலைஞர்களைப் பற்றிய பேச்சில் தீரர்களாக இருப்பார்கள்.

பெற்றோர் நோயவாய்ப்பட்டிருந்த நேரத்திலும் சினிமா கலைஞர்களை பற்றிய பேச்சில் தீர்க்கதரிசிகளாக இருப்பார்கள்.

பெற்றோர் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்திலும் தன அபிமான நட்சத்திரம் நடித்த புதிய படத்தையோ பழைய படத்தையோ பார்க்கப் போகும பிள்ளைகளும் உண்டு!

இவற்றையெல்லாம் நான் எதற்காக கூறுகிறேன் என்றால், கலைஞர்களிடமிருந்து எந்தவிதமான கைமாறையும் எதிர்பாராமல் அவர்களுடைய முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகித்து வருபவர்கள் ரசிகர்களே என்பதை விளக்கும் பொருட்டே.

ரசிகர்களுடைய இந்தப் பொது நோக்கமே கலைஞர்களைக் காரில் உலாவ வைக்கிறது. பங்களா வாசியாக்குகிறது - சுகஜீவனத்தைத் தருகிறது.

ஆகவே, முன்னேறியுள்ள கலைஞர்கள், ரசிகர்களை மறந்தால் வாழவைத்த தெய்வத்தை மறந்ததற்கு ஒப்பாகும்!

நான் இதை மறக்கவில்லை. அடிக்கடி நினைத்துப் பார்த்துப் பெருமைபடுகிறேன். என்றும் அந்த வாழ வைத்த தெய்வத்தின் அருள் நாடி தவம் புரிந்து கொண்டேயிருக்கிறேன்.

## 'வீரபாகு' சிவாஜி



கந்தன் கருணையில் வீரபாகுவாக நடித்துள்ள பத்மஸ்ரீ கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்படுக! சமூக நலனில் அக்கறை காட்டுக

## முஸ்லிம் மக்களுக்கு திலிப் குமார் வேண்டுகோள்

**முஸ்லிம்களின் விசுவாசத் தன்மையைச் சந்தேகிப்போரின் தேச விசுவாசத்தை நான் சந்தேகிக்கிறேன். ஒருவர் எவ்வளவு பெரிய உச்சாணிப் புகழ் பெற்றவராயிருப்பினும்சரியே, முஸ்லிம்களின் விசுவாசத்திற்குச் சான்றுகோர அவருக்கு என்ன உரிமையிருக்கிறது? என்று புகழ்மிக்கத் திரைப்பட நடிகர் திலிப்குமார் வினவினர்.**

இந்தியத் திரை வானில் ஒளிபாய்ச்சும் வெண்ணிலாவாகச் சிறப்புற்று விளங்கும் திலிப் குமார் (யூசுப்கான்) அண்மையில் பெங்களூர் வருகை தந்தபோது 'கஷேமன்' உர்து வாரத்தாள் ஆசிரியர் ஜனுப் உலிமான் அஸத் அவர்களுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திலிப்குமார் மேலும் கூறியதாவது:—

### வரலாறு படைத்தவர்கள்

"முஸ்லிம்கள் உன்னதமான வரலாறு படைத்தவர்கள். தங்கள் முன்னேரின் சிறப்புக்குரிய சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டிருப்பவர்கள். முஸ்லிம்கள் என்போர் யார் — அவர்களால் என்ன சாதிக்க முடியும்? என்பனவற்றை அந்த வரலாற்றுச் சுவடிகள் உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

"ஆனல், இந்திய முஸ்லிம்களின் இன்றைய நிலை பரிதாபத்துக்குரியதாக உள்ளது. தங்கள் பாரம்பரியத்தை மறந்துவிட்டிருக்கிருர்கள்; வீரப் புகழ் பறிக்கப்பட்டவர்களாக இருக்கிருர்கள்!

"இந்தியமுஸ்லிம்கள் விழிப்புணர்வோடு கிளர்ந்தெழ முற்படுகிருர்கள். ஆனல், அதற்கான வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. தங்கள் நிலையைப் பகிரங்கப்படுத்தவே விரும்புகிருர்கள். எனினும் அவர்களின் உதடுகள் அசைய மறுக்கின்றன; வாய் திறப்பதற்கு முன்னதாகவே அடக்கப்பட்டுவிடுகின்றனர்! தங்கள் பரிதாப நிலைக்குப் பரிந்து கண்ணீர் சொட்டுவதன் மூலம் தங்கள் நெஞ்சத்தில் கொழுந்துவிட்டெரியும் தீயை அணைக்கவே எண்ணுகின்றனர்; ஆனல், கண்ணீர் வடிக்கவும் அனுமதிக்கப்படுகிருர்களில்லை! அவர்களின் இதயம் சுக்குநூருகச் சிதறிவிட்டது! இவ்வேதனையிலிருந்து இந்த சமுதாயத்தை மீட்க எவரும் முன்வரக் காணேம்!

### சுயநலமே பிரதானம்!

தலைவர்கள் எனச் சொல்லிக் கொள்வோர், சமூகநலனை விட தங்கள் சுயநலததிலேயே நாட்டமுடையவர்களாக இருக்கிருாகள். முஸ்லிமகளின் பெயர்கூறி தங்களுக்கான சகல பலன்களையும் பெற்றுக்கொள்ளும்அவர்கள், சமூகத்தைப் பற்றிச் சிந்திக்க மறுக்கிருர்கள்.

"அந்த பிரகஸ்பதிகள், சமூகம் அழிவதை, அழிக்கப்படுவதைச் சகித்துக்கொள்கிருர்கள்; தங்களுக்குச் சிறு தொல்லை ஏற்படுவதையும் அனுமதியாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

### ஒன்றுபடுங்கள்

"இத்தகைய இழிநிலைக்கு முடிவு கட்டியாக வேண்டும். தலைவர்களும், உலமாக்களும் தங்கள் பொறுப்பை உணர்ந்து முன்வரவேண்டும்.

"முஸ்லிம் சமுதாயத்தைச் சீர்படுத்துவதில், சிதறுண்டு வாழும் முஸ்லிம்களை ஒன்றிணைத்து வலுப்படுத்துவதில் முன்னேற்றப் பாதையில் ஈர்த்துச் செல்வதில் உலமாக்களும்; தலைவர்களும்; பத்திரிகைகளும் உடனடியாக முன்வந்தாக வேண்டும்.

"பிளவுபட்டுநிற்கும் தருணமல்ல; வாக்குவாதம் புரிந்து காலத்தை விரையமாக்கும் நேரமல்ல. செயல்படவேண்டிய சந்தர்ப்பமிது. கடந்த காலத்தை உணாந்து வருங் காலத்தை உத்தேசித்து சமூக நலனில் நாட்டஞ் செலுத்த வேண்டும். இறைவனின் கட்டளைக்கு சிரம்தாழ்த்தி. இறைதூதர் ரசூலே கரீம் (ஸல்-அம்) அவர்களின்மார்க்கத்தின்பால் முஸ்லிம்களின் மனதை ஈர்த்துச்செல்ல, நப்பாசைகளிலும், பதவிப் போட்டிகளிலும் உழன்று, சமூகத்தை வழி கெடுக்கும் தியமனப்பான்மையை அகற்ற உடனடியாக முயற்சித்தாக வேண்டும்.

### விசுவாசமற்றவரா?

"முஸ்லிம்களின் விசுவாசத் தன்மையைச் சந்தேகிப்போரின் தேச விசுவாசத்தை நான் சந்தேகிக்கிறேன். இந்த நாட்டில் ஒருவர் எவவளவு பெரிய உச்சாணிப் புகழ் பெற்றவராயினும் சரியே முஸ்லிம்களின் விசுவாசத்திற்குச்சான்றுகோர அவருக்கு என்ன உரிமையிருக்கிறது?

"முஸ்லிம்களின் தேச விசுவாசம் வெளிப்படையானது. எனினும், சோதனையான. நெருக்கடியான நேரத்தில் முஸ்லிம்கள் முறைதவறி நடத்தப்பட்டார்கள். இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க அரசியல் தலைவர்கள் முன்வரவில்லை.

"உத்தியோக பீடங்களை அலங்கரிக்கும் முஸ்லிம்கள் இருக்கிருர்கள்; அமைச்சர் என்ற அந்தஸ்து பெற்ற முஸ்லிம்களும் இருக்கவே செய்கிருர்கள். முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இந்த பயங்கரமான சோதனையின்போது அவர்கள் வாய் திறந்ததுண்டா? இல்லை! இதிலிருந்து என்ன புரிகிறது? அவர்களுக்கு சமூகத்தைப் பற்றிய அக்கரையில்லை. தங்கள் நலனில் மட்டுமே நாட்டங்கொண்டவர்கள் என்பது தான்!

---

# மலர்களல்ல...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் ஊடாகத் தெரிகின்ற அந்தஉருவமென்ன?என்உருவா?... என்னைப் போன்ற இன்னெருவா உருவமா?

நீ ஆடவனு? அந்த உருவம் என்னைப் பார்த்துக் கேட்கின்றது.

நான் விரக்தியாகச் சிரிக்கின்றேன்.

'நீ படித்தவனு?' உருவம் அதட்டுகின்றது.

மௌனமாக இருக்கின்றேன்.

இன்று ஸ்டெலஸ்டா வழி தவறியது யாரால் தெரியுமா?... உன்னல் தான். திருமணம் செய்து ஒரு பெண்ணின் பருவப் பசியைத் தீர்க்க முடியாத உனக்குத் திருமணம் ஏன்? இன்று எத்தனையோ குடும்பப் பெண்கள் வழி தவறி பிற ஆடவர்களுடன் கொள்ளும் இச்சைக்குக் காரணமென்ன? உன் போன்ற உணர்வற்ற ஆண்களால் தான். அவளின் பருவ உணர்ச்சியைத் தீர்க்க முடியாத நீ ஒரு ஆண்மகனு? உன் உறவுக்காக உன் அன்பு மொழிக்காக எத்தனை இரவுகள் ஏங்கியிருப்பாள் தெரியுமா?... அவளைத் தவறு செய்யவைத்து இத்தனை பாபங்களையும் உருவாக்கியவன் யார் தெரியுமா? நீ தான்! உன் பலவீனம்தான்! போ!... நீ போய் அவளுக்குப் பிறந்த மழலையைக் கட்டியணை. உன்னல் அவள் செய்து தவறிய பாவங்களைத் துடை. அதே பாவத்தினை இனியேலும் செய்யாதே. போ! அந்த உருவம் மறைகின்றது.

ஆம்! அவளின் பசியைப் போக்கத் தெரியாத நான் ஆண்மகனல்ல. இனிமேலும் நான் அந்தத் தவறைச் செய்யமாட்டேன். ஸ்டெலஸ்டா! என் கண்ணே என்னை மன்னித்து விடடி. உன் அழகு வாய்ந்த கன்னங்களில் முத்தமாரி பொழிந்து கொண்டே உன் பருவப் பசியைத் தீர்க்க முடியாத பாபசாலியாகி விட்டேன். உனக்குப் பிறக்கப்போகும் குழந்தை உனக்கு மாத்திரம் குழந்தையல்ல, எனக்கும் தான்.

---

## நோய் பரவுகிறது

எதிர்க்கட்சித் தலைவிக்குத் தான் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் வெற்றி கிலியை ஏற்படுத்தியுள்ளதென்றிருந்தோம். ஆனல் ஆளும் கட்சியில் உள்ள ஒரு சில பொறுப்பற்ற பின் வரிசை அங்கத்தவர்களுக்கும் கிலி பிடித்திருப்பதை அவர்களின் உளறல்கள் மூலம் அறிய முடிந்தது.

'இந்தியாவில் தி.மு.க. வின் வெற்றியினுலும், தமிழரசுக் கட்சி அதைப்பாராட்டியதனுலும் தான் கொலன்னுவையில் நாங்கள் தோற்றுவிட்டோமோ என ஐயுறுகிறேம்' என்று பாராளுமன்ற அங்கத்தவர்களின் உத்தியோக வாசஸ்தலமான சிறுவஸ்தியில் ஒரு பின் வரிசை அங்கத்தவர் கருத்துத் தெரிவித்தார். இவர் மலை நாட்டைச் சேர்ந்தவர். அங்குள்ள தமிழ் பேசும்மக்களின் ஆதரவினுல் வெற்றி பெற்றனர். அப்படியிருந்தும் அவர் இப்படிப் பேசியது விந்தையாகவும் வேடிக்கையாகவும் இல்லையா?

---

# இலங்கையில் தேவாரமணி

தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளை பண்ணுடன் பாடிப்பழகுவதற்கு இந்து சமயத்தவருக்கு பயிற்சி அளிப்பதற்காக தேவார இன்னிசை. செல்வர், தேவார மணி, தமிழ் இசை மணி பீ. ஏ. எஸ். இராசசேகரன் தென்னிந்தியாவிலிருந்து கடந்த வாரம் ஈழம் வந்துள்ளார். கொழும்பு விவேகானந்த சபை, இந்து சமய ஆலோசனைச் சபை ஆகியனவற்றின் அழைப்பின் பேரிலேயே திரு. இராசசேகரன் இங்கு வந்துள்ளார்.

திரு. இராசசேகரன் 1959ம் ஆண்டு சித்தன் கேணியில் நடைபெற்ற ஒரு ஆலய நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் பொருட்டு ஏற்கனவே அவர் இலங்கைக்கு வந்திருக்கிருர்.

சிலம்புச் செல்வர் ம. பொ. சியின் கொள்கைகளில் அதிக ஈடுபாடுள்ள திரு. இராசசேகரன் தமிழரசுக் கழகக் கிளையொன்றின் செயலாளராகவும் கடமையாற்றியிருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. இராசசேகரன் இலங்கையில் சுமார் 1 வருட காலம் தங்கியிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் சென்று தேவாரப் பயிற்சியளித்து வருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. முதல் மூன்று மாத காலம் வட கொழும்பிலும், தென் கொழும்பிலும், கொழும்பு விவேகானந்த சபையினரால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு பயிற்சி அளிப்பார் என்று தெரிகிறது.

அதன் பின் தமிழர் பெரும்பான்மையினராக வாழும் இடங்களில், விவேகானந்த சபையினரால்தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடாகியுள்ளது.

இவ்வகுப்புக்களில் சேர ஆர்வமுள்ள இந்துக்கள் பொதுச் செயலாளர், விவேகானந்த சபை, 34 விவேகானந்த மேடு, கொழும்பு 13 என்ற முகவரிக்கு எழுதி விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

# தமிழில் வங்கிச் சுற்றறிக்கை

'மத்திய வங்கி வெளியிடும் சுற்றறிக்கைகள், ஏனைய வெளியீடுகள் யாவும் தமிழிலும் வெளிவர வேண்டுமென எமது மன்றம் வங்கியின் செயலாளரைக்கேட்டிருந்தும் இதுவரை அதற்கு பதில் கிடைக்கவில்லை. விரைவில் அதற்கு நல்ல பதில் கிடைக்குமென்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு' இவ்வாறு மத்திய வங்கித் தமிழிலக்கிய மன்றத்தின் 1966-67ம் ஆண்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வங்கி நூல்நிலையத்தில் சகல தமிழ் பத்திரிகைகளையும் எடுப்பதற்கும் மன்றம் விடுத்த வேண்டுகோள் ஆட்சிபீடத்தின் பரிசீலனையில் இருப்பதாகவும் அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

மத்திய வங்கித் தமிழிலக்கிய மன்றத்தின் புதிய நிர்வாகிகள் வருமாறு:—

தலைவர்-செல்வி புஸ்பாகாசிப்பிள்ளை. துணைத்தலைவர். மா.க. கனகேந்திரன். செயலாளர்-மு. பாஸ்கரகுமாரன், துணைச்செயலாளர் எஸ்.பி. இராசா. பொருளாளர்- சோ. நடராசா, துணைப்பொருளாளர்-து. சின்னத்துரை. நூல்நிலையப் பொறுப்பாளர்- சி. துரைசிங்கம், செயற்குழு உறுப்பினர்கள்- நா. குமாரசாமி, இ. சூரியபிரகாசம், எஸ். மகேசுவரம், செல்வி. ப. மயில்வாகனம், செல்வி. மா. மாணிக்கவாசகர்.

---

# ஸ்டாலினின்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல் இன்று சுவிட்சர்லாந்தில் சுவெட்லானு எந்த மூலையில் மறைந்திருக்கிருள் என்பது யாருக்கும் தெரியாத புதிராக இருக்கிறது.

அவள் எங்கேயிருக்கிருள் என்பதையறிய உலகத்துப் பத்திரிகைநிருபர்கள்சல்லடை போட்டு சலித்துவிட்டார்கள். ஆனல் இன்றுவரை அவள் இருக்குமிடத்தை எந்த நிருபராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் சுவெட்லானுவுக்கு ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் அடைக்கலம் கொடுப்பதை அமெரிக்கா ஆதரிப்பதாக கருத்து வெளியிட்டுள்ளார். சிவெட்லானுவிடமுள்ள இரகசியங்களை அறிந்து கொள்ளவும் ரஷியாவுக்கெதிராக அவளைப் பயன்படுத்தவும் இந்த ஏற்பாடுதான் பயனளிக்கும் போலும்.

ஸ்டாலின் சர்வாதிகாரியாக இருந்த நேரத்தில் நடத்திய கொடூரச் செயல்களில், ரஷ்யாவின் இன்றைய தலைவர்கள் பலருக்கும் பங்கிருக்கலாமென்றும், இதை சரியாக தெரிந்து வைத்திருப்பவள் சுவெட்லானுவே என்றும் கூறப்படுகிறது. இந்த ஆபத்தை உணர்ந்து சுவெட்லானுவை ரஷ்யாவுக்குக் கடத்திச் செல்லரஷ்யா முழுமுயற்சி செய்யலாம். அதே சமயம் அமெரிக்க உளவுஸ்தாபனமும் சுவெட்லானுவை இலேசில் பறி கொடுத்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது

எது எப்படியிருந்தாலும், சுவெட்லானு இன்று ஒரு பிரச்சினைக்குரிய சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பெண்ணுகிவிட்டாள். இவளால், சோவியத் அமெரிக்க நல்லுறவுகள் பாதிக்கப்படக்கூடிய பேராபத்து நிறைய உண்டு. இவள் விஷயத்தில் இவ்விரு வல்லரசுகளும் எப்படி நடந்து கொள்ளுகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

—எஸ். ஆர். எம்

---

## தளங்கள் கைமாறுமா?

"1957ல் திரு. பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்ட கட்டுநாயக்கா ஆகாயப்படைத் தளத்தையும் திருகோணமலை கடற்படைத் தளத்தையும் மீண்டும் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாகஅறியப்படுகிறது" என்று எத்த (11-2-67) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

---

## கொலன்னுவ தேர்தல் பற்றி தீர்மானம்

'கொலன்னுவ இடைத்தேர்தலின் போது நடைபெற்ற ஊழல்கள்பற்றி விசாரணை செய்யுமாறு கோரி எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரும்'

—"எத்த" (7-3-67)

---

## புதிய கண்டுபிடிப்பு

தண்ணீர் சுத்தம் செய்யும் சிறிய நவீன இயந்திரமொன்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனை ஒரு சாதாரண லொறியில் எடுத்துச் செல்லலாம். ஏரி, ஆறு, கிணறுகளில் 3000 மக்களுக்குத் தேவைப்படும் தண்ணீரை இந்த இயந்திரம் நாளொன்றுக்குச் சுத்தம் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருஷ்டிதோஷம்": சில சுவையான தகவல்கள்

"திருஷ்டி தோஷம்" பற்றிய பேச்சு நம் நாட்டுக்கு மட்டும் உரித்தல்ல. எல்லா நாடுகளிலும் அது பற்றிப் பேச்சு அடிபடுகிறது.

"கௌதமாலா"வில் சிறு குழந்தைகளுக்கு விஷதிருஷ்டி படாமல் இருப்பதற்காக முகம் மட்டும் வெளியில் தெரியும்படியாத் தலையிலே பல விதமான விநோதச் சித்திரங்கள் அமைந்த குல்லாய்களை அணிவிப்பார்களாம். இது தவிர அங்கிருக்கும் தாய்மார்களில் சிலர் தங்கள் குழந்தைகளின் முகத்தையும் சேர்த்து ஒரு கூடையைப் போட்டுப் போர்த்திட விடுவதும் உண்டாம்! இவை 'விஷ திருஷ்டி' குழந்தைகள் மீது படாமல் இருப்பதற்காக அவர்கள் எடுத்துக் கொள்ளும் தற்காப்பு நடவடிக்கை என்று சொல்கிறார்கள்.

மத்திய தரைக் கடல் பகுதியில் பொதுவாக எல்லோருடைய விழிகளும் கறுப்பாகத் தான் இருக்குமாம். அந்தப் பகுதியில நீலமணிக் கண்களை உடையவர்கள் பார்வை திருஷ்டி தோஷத்தை உண்டாக்கவிடும் என்று நம்பப்படுகிறது. இதைப்போலவே வட ஐரோப்பாவில்—கருவிழி படைத்தவர்களின் பார்வை பட்டால் பலவித இன்னல்கள் உண்டாகும் என்று ஒரு கருத்துப் பரவியுள்ளது!

பிரிட்டனில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சி நடந்தது.

ஒரு ஆள் நீரில் மூழ்கி இறந்துபோனான். அவனைப் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்று ஒரு டாக்டரிடம் கொண்டு சென்றனர். டாக்டர் செத்துப் போன மனிதனைப் பார்த்தார். திடுக்கிட்டுப் போனார்.

செத்துப் போன ஆள் சாவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் அவரை வந்து பார்த்தானும். 'என்னை விஷ திருஷ்டியுள்ள ஒருவன் பார்த்துவிட்டான். ஆகவே நான் இன்னும் கொஞ்ச நாட்களுக்குள் செத்துப்போய் விடுவேன்! என்று அழுது புலம்பிவிட்டுப் போனானும்! அவன் சொன்னதுபோலவே அவன் செத்துப் போய்விட்டதைப் பார்த்ததும் டாக்டருக்கு வியப்பு தாங்க முடியவில்லை! ஆகவே அவர் இந்த விநோத நிகழ்ச்சியை அவர் எழுதிய மரண விசாரணைக் குறிப்பில் அப்படியே எழுதிவைத்துவிட்டார்.

இன்னொரு நிகழ்ச்சி. இது இத்தாலியில் நடைபெற்றது.

ஒரு பெண், கணவனிடமிருந்து விவாகரத்துக்கோரி நீதி மன்றத்தில் வழக்குப் போட்டாள். அந்த வழக்கின் போது அவள் கொடுத்த வாக்கு மூலம் மிகவும் விசித்திரமானதாகும்.

'எனக்கு விஷ திருஷ்டி இருப்பதாக என் கணவர் எப்போது பார்த்தாலும் கரித்துக் கொண்டே இருக்கிறார். நான் சூன்யக்காரிகள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டுமே யொழிய குடும்பத்தில் இருக்கத் தகுந்தவள் அல்ல என்று என்னைக் கொடுமைப் படுத்துகிறார். ஆகவே எனக்கு அவரிடமிருந்து பிரிந்துபோக அனுமதி அளியுங்கள்!"

இது தான் விவாகரத்து செய்து கொள்வதற்கு அவள் கூறிய காரணம். இதை அவளுடைய கணவனும் ஒத்துக் கொண்டானும்! அப்புறம் என்ன? 'விஷ திருஷ்டி' பற்றிய பேச்சே அந்தப் பெண்ணுக்கு விவாக விடுதலையை வாங்கித் தந்துவிட்டது!

இதேபோல் யூகோஸ்லேவியாவில் ஒரு சம்பவம்! அங்கே ஒரு பெண் இருந்தாள். அவள் நல்ல அழகி. ஆனாலும் அவளுடைய அண்டை அயல் வீட்டுக்காரர்கள் 'இவள் விஷ திருஷ்டி படைத்தவள். இவளுடைய பார்வைபட்டு பத்து பன்னிரண்டு பேர்களுக்கு மேல் செத்து விட்டனர். ஆகவே அவளை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்!" என்று பொலிசில் புகார் செய்தார்களாம்.

இதையெல்லாம்விட மிகவும் விசித்திரமான சம்பவம் பிரேஸில் நாட்டில் நடைபெற்றது.

பிரேஸில் நாட்டில் ஒரு அதிசயமான பறவையின் பார்வை யார்மீது பட்டாலும் அந்த ஆள் செத்துவிடுவானும்! இப்படி ஒரு நம்பிக்கை.

அப்படிப்பட்ட பறவையை ஒரு வேடன் மிகவும் சமர்த்தியமாக அதன் பார்வை தன் மீது படாதபடி கழுத்தைப் பிடித்து அழுத்தி அமுக்கிப் பிடித்துக்கொண்டு வீட்டுக்கு கொண்டுவந்து விட்டானும். ஆனால், அவனுடைய மனைவியோ, கணவன்மேல் உள்ள கோபத்தின் காரணமாக, அவனுக்குத் தெரியாமல் அந்தப் பறவையின் பார்வையை அவன்மீது படும்படி செய்துவிட்டாளாம்! அதனால் அந்த வேடன் திடீரென்று மரணமடைந்து விட்டானும். இதனால் ஊர் முழுவதும் ஒரே பரபரப்பு!! ஊர் மக்கள் அனைவரும் வேடன் மனைவியை 'கொலைகாரி' என்று குற்றஞ் சாட்டினார்கள்.

ஆனால்-இதை எப்படி கோர்ட்டில் நிரூபிப்பது. ஆகவே அந்தப்பேச்சு, பேச்சளவுடனேயே அடங்கிப் போய் விட்டது! எப்படி இந்த வேடிக்கை?

## உண்மை! ஆனல், அதிசயமில்லை!!

சாய்ந்த கோபுரம் என்றால் உடனே நினைவுக்கு வருவது பைசா நகரிலுள்ள சாய்ந்த கோபுரம்தான். ஆனல், அதற்கு மட்டுமே அந்தப் பெருமை உண்டு என்று எண்ணிவிட வேண்டாம். இன்னும்சில சாய்ந்த கோபுரங்களும் உள்ளன. மத்திய ருமேனியாவில் உள்ள மீடியாஸ் என்னும் நகரிலும் இத்தகைய கோபுரம் ஒன்று இருக்கிறது.

பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் எப்படி கட்டப்பட்டிருக்கிறதோ அப்படியே கட்டப்பட்டிருக்கிறது இது. கி. பி. 1450-ஆம் ஆண்டில் இதைக் கட்டினார்களாம். இதற்கு 'டமார கோபுரம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். ஆரம்பகாலத்தில் இந்நகரின் பாதுகாப்பு அமைப்புக்களில் ஒன்றாக இருந்ததாம் இது. தென் கிழக்கு சுவிட்ஜர்லாந்திலுள்ள செயிண்ட் மார்ட்டிஸ் என்னும் நகரிலும் ஒரு சாய்ந்தகோபுரம் இருக்கிறது. கி. பி. 1573ம் ஆண்டில் மணிக்கோபுரமாகக் கட்டப்பட்ட இது கடந்த 165 ஆண்டுக் காலமாகச் சாய்ந்திருக்கிறது. முதலில் நேராகக் கட்டப்பட்ட இது நில நடுக்கத்தால் சாய்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

## மேதையை மிரட்டிய அந்த எண்

விக்டர் ஹ்யூகோ பிரபலமானபிரெஞ்சு நாவலாசிரியர். பெரிய மேதை. அவர் மனதில் '13' என்ற எண் தீமை பயக்கக் கூடியது என்ற நம்பிக்கை அழுத்தமாகப் பதித்து இருந்தது. அவர், 1871-ம் ஆண்டு போர்டெக்ஸ் என்ற இடத்தில் நடந்த கூட்டம் ஒன்றுக்காக அவருடைய நண்பர்களுடன் புறப்பட்டார்.

அவர் பயணமான தேதி பிப்ரவரி 13. அவர் பிரயாணம் செய்த வண்டிப் பெட்டியின் எண் 13. அது மட்டுமல்லாது விக்டர் ஹ்யூகோ, தங்குவதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதி அறையின் நம்பரும் 13 ஆகவே இருந்தது! அவ்வளவு தான் - மனிதர் மிரண்டு போய் விட்டார். அவருக்கு இரவு முழுவதும் தூக்கம் இல்லை. 'பதின்மூன்று' என்ற கெட்ட எண் என்ன தீமையை விளைவிக்கப் போகிறதோ என்று சிந்தித்துக் கொண்டே இருந்தார். 'போர்டெக்ஸில்' நிகழ்ச்சி முடிந்து பாரிசுக்குப் பத்திரமாகத் திரும்பும் வரை அவருக்கு வேறு நினைப்புத்தான்!

ஆனல் அந்தச் சமயம் விக்டர் ஹயூகோவிற்கு எந்த விதமான கெடுதலும் ஏற்படவில்லை. இருப்பினும் [illegible] கெட்ட எண் என்ற [illegible] அவர் கடைசி வரையில் மாற்றிக் கொள்ளவே இல்லையாம்!

# கவிஞன் கனவு பலித்தது

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும்உலகத்தை வேரோடு
சாய்ப்போம்"

என்று புத்துலக வேட்கையோடு முழங்கினர் 'புதுவைக் குயில் புரட்சிக் கவி என்றெல்லாம் நாம் வாயினிக்க நெஞ்சினிக்கப் போற்றும் பாரதிதாசன். அவர் அவ்வாறு புத்துலக வேட்கை கொண்டமைக்கு காரணம் தமிழ் நாட்டைத் தமது பிதுராக்சித சொத்தாக நினைத்து மக்களின் நலன்களில் அக்கறை மிகக் கொள்ளாது ஆண்டு வந்த காங்கிரஸார்தான்!

தென்னாட்டில் தன்னலங் கொண்ட தலைவர்கள் மிகுந்து விட்டதால்—ஏழை எளியவரின் துயரை, கண்ணீரை ஏறிட்டும் பார்க்காது பஞ்சம்—பசி பட்டினியால் அவர்களை நலிந்து சாகவிட்டதால்—மாசில்லாத உயிர்த்தமிழை அமுதத் தமிழை ஆட்சியாளர் அலட்சியம் செய்துவந்த காரணத்தால் சாதிமதபேதங்களால் மூட வழக்கங்களால் சண்டையிடும் அறியாமை தமிழர் சமூகத்தில் நிறைந்து விட்டதால்—தமிழர் கலை—கலாச்சாரம்—பண்பாடு அத்தனையும் சீர்—சிறப்புக்குன்றிப் போவதைக் கண்ணுற்றதால் தான், அப்படியான [illegible]தொரு புதுஉலகம்காண வி[illegible]ந்தார் கவிஞர்.

அவர் விருப்பு—ஆசை இன்று தமிழ்நாட்டில் நிறைவேறிவிட்டது. பல ஆண்டு காலம் மக்களுக்குப் பலனென்றும் செய்யா ஆட்சி வீழ்ந்து இன்று ஆளும்கட்சியாக தி.மு.க. அறிவுக்கதிரவன் அண்ணு தலைமையில் மந்திரிசபை ஏற்பட்டுள்ளது.உதயசூரியன் உதித்துவிட்டது.அதனெழுச்சியில் தமிழன் தலைநிமிர்ந்து நிற்கிறான். இல்லாமை அறியாமை கல்லாமை தீண்டாமை யாவும் நீங்கிவிடும் என்ற திடநம்பிக்கையினுல் தமிழ் நாடு ஆனந்தக் கூத்திடுகிறது. இந்த வேளையில், 'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற ஆசைக் கனவுகண்ட எங்கள் புரட்சிப் பாவலன் எம்மிடையே வாழ்ந்திருந்தால், இன்று தமிழ்நாட்டில் உதயமாகிவிட்ட புதிய சகாப்தத்தைக் கண்டு எங்கும் எவர்முகத்திலும் புதிய மலர்ச்சி நடமிடுவதைக் கண்டு, எழும் ஆனந்தத்தால் தம் ஆசைக் கனவு பலிதமாகிவிட்டதென்ற பூரிப்பால்!

'புதியதோர் உலகம் கண்
டோம்—கெட்ட
போரிடும் உலகை வேரோடு
சாய்த்திட்டோம்'—

என்று பாடி புளகாங்கிதமடைந்திருப்பார் அல்லவா?

—'நோவண்ணு'
கல்முனை.

## "தாலாட்டு"

—பாலமுருகன்—

தாலாட் டம்மா தாலாட்டு
தங்கை மகனைத் தாலாட்டு
பாலாம் அமுதம் தனையூட்டு
பக்குவ மாகத் தாலாட்டு.

மெத்தை போட்ட தொட்டிலிலே
மெதுவாய்ப் போட்டுத்
தாலாட்டு
முத்தைக் காக்கும் சிப்பியைப்
போல்
மூடிக் காத்துத் தாலாட்டு.

பிஞ்சுக் காலில் முத்தமிட்டு
பிறைபோல் வளரத்தாலாட்டு
கொஞ்சம் இன்ப நினைவுடனே
நெஞ்சில் போட்டுத் தாலாட்டு.

வள்ளுவன் போலப் புகழ்
பெறவே
வாழ்த்து கூறித் தாலாட்டு
தெள்ளு தமிழில் கவிவடித்து
தோளில் போட்டுத் தாலாட்டு.

முல்லை மலரைத் தாலாட்டு
முக்கனிச்சாற்றைத் தாலாட்டு
தொல்லை நீக்கும் பேறென்று
தொடர்ந்து மகனைத்
தாலாட்டு.

# மாணவர் அரங்கு

## சர்ச்சிலின் நகைச் சுவைகள்

இங்கிலாந்தின் அரசியல் மேதை சர்ச்சில் புத்திக் கூர்மைக்குப் பெயர்போனவர். அவருக்கும் திருமதி நான்ஸி ஆஸ்டருக்கும் எப்போதும் சண்டையாக இருக்கும். 'நீங்கள் மாத்திரம் என் கணவராக இருந்தால் உங்களுக்கு காப்பியில் விஷம் கலந்துகொடுத்திருப்பேன்' என்றார் திருமதி நான்ஸி.

'அப்படியா! நீங்கள் என் மனைவியாகஇருந்தால் நான் நிச்சயமாக அதைக் குடித்து விடுவேன்' என்றார் சர்ச்சில்.

சர்ச்சில் தம்பதிகள் லண்டனிலுள்ள தங்களது ஹைட்பார்க் வீட்டில் பெரிய விழாக் கொண்டாடினார்கள். அதன் காரணம் சர்ச்சிலின் 82 வது பிறந்த நாள். அப்போது அவரை புகைப்படம் எடுத்த போட்டோக் கிராபர் 'தங்களது 100வது பிறந்த நாள் அன்று தங்களைப் புகைப்படம் எடுக்க விரும்புகிறேன்' என்றார். அவரை ஏற இறங்க ஒருமுறை பார்த்துவிட்டு 'தாராளமாகச் செய்யேன். உன்னைப் பார்த்தால் திடகாத்திரமாகவும் இளமையாகவும் இருக்கிறாய்' என்றார் அந்த 82 வயதுக் குறும்புக் [illegible]

[illegible] சர்ச்சில் [illegible] அவர் நண்பர் ஒருவர் கேட்டார்: "நீங்கள் ஒவ்வொரு முறை சொற்பொழிவு செய்யும்போது இவ்வளவு பெரிய கூட்டம் சேருவது நீங்கள் என்ன நினைப்பீர்கள்?"

"நன்றாகத்தான் இருக்கும். ஆனல் நான் பேசுவதைவிட என்னைத் தூக்கிலிடுவதாக இருந்தால் அதைப்போன்று பத்து மடங்கு கூட்டம் வரும் என்று நான் நினைப்பேன்" என்றாராம் அரசியல் மேதை சர்ச்சில்.

## முதல் தபால் நிலையம்

முதன் முதல் தபால் நிலையம் நிறுவப்பட்ட இடம் எது தெரியுமா?

அமெரிக்காவில் உள்ள போஸ்டன் நகரில் தான் முதல் தபால் நிலையம் நிறுவப்பட்டது. ஆண்டு 1639. பின்னர் 1657ல் வெர்ஜீனியா நகரில் மற்றொரு தபால் நிலையம் ஏற்பட்டது. 1672ல் நியூயார்கிற்கும் போஸ்டன் நகருக்கும் தபால் சர்வீஸ் நடத்தப்பட்டது. 1683ல் வில்லியம் பென் என்பவரால் பிலடெல்பியா நகரில் நிறுவப்பட்ட தபால் நிலையம் சுற்றுப்புற நகரங்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை தபால் பட்டுவாடா செய்துவந்தது.



பிச்சைக்காரன் நம் 1:—"நான் எனது அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை அரசாங்கத்திடம் கொடுத்துவிடப் போகிறேன்.

பிச்சைக்காரன் நம் 2:— ஏன் அப்படி செய்யப் போகிறாய்.

பிச்சைக்காரன் நம்—1: பின்னே இந்த 'பிச்சை' அரிசியை மானங்கெட்டு வாங்கச் சொல்கிறாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-வது வெற்றி வாரம்

திரைப்படவசூலிலே அரியதோர் சாதனை! முன்னைய சாதனைகள் முறியடிக்கப்படுகின்றன! என்று மில்லாவகையில் அன்பர்களின் அமோக ஆதரவைப் பெற்று வருகிறது!

புராணப்பட டைரெக்டர் ஏ. பி. நாகராசனின் கைத்திறனில் உருவான மற்றுமோர் வெற்றிச் சின்னம்!

ஈரோஸ் (பாமன்கடை) | **சென்ட்ரல்** (மருதானை) | ஜெஸீமா (கிருண்ட்பாஸ்)

ராணி (யாழ்ப்பாணம்) | ராஜேஸ்வரா (மட்டுநகர்) | லிபர்ட்டி (அட்டன்)

சிவாஜி, ஜெமினி, சிவகுமார், அசோகன், பாலாஜி, நாகேஷ், ச. ஆர். சகாதேவன், சாவித்திரி, ஜெயலலிதா, கே. ஆர். விஜயா, கே. பி. சுந்தராம்பாள், ஜி. சகுந்தலா, மனோரமா நடித்த

ஏ எல் எஸ் புரொடக்ஷன்ஸ்

## கந்தன் கருணை


ஈஸ்ட்மென் கலர்



திரைக்கதை வசனம் டைரெக்ஷன்: ஏ. பி. நாகராஜன்

## இப்பொழுது காட்சிதருகிறது

எம்பயர் (கொழும்பு)
செல்லமகால் (கொட்டாஞ்சேனை)
வின்சர் (யாழ்ப்பாணம்)
இம்பீரியல் (மட்டுநகர்)
நெல்சன் (திருமலை)
றீகல் (கண்டி)




ரவிச்சந்திரன்
கே. ஆர். விஜயா
மனோகர்
பாலாஜி
பாலையா
ஷீலாதேவி
நடிக்கும்

# இதயகமலம்

(ஈஸ்ட்மன் கலர்)

## இப்பொழுது காட்சி தருகிறது

கெபிட்டி (கொழும்பு) — தாராசிங் நடிக்கும் "சங்ரம்"

எமது புதுவருட வெளியீடு

ரவிச்சந்திரன் ஜெயலலிதா



## குமாரிப் பெண்

## 2-வது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை)

நவா (கும்பனித்தெரு) | விஜயா (மட்டுநகர்) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

மோடேன் (பண்டாரவளை) | நியூசினிமா (குருநாகல்) | பிறின்ஸ் (காலி)

சந்திரா (கம்பளை) | வெம்பிளி (கண்டி)

ஜெய்சங்கர், எல். விஜயலட்சுமி, அசோகன்
வசந்தா, மனோகர், தங்கவேலு நடிக்கும்

மொடேன் தியேட்டர்சாரின்

# இரு வல்லவர்கள்



5-வது வாரம்

வெலிங்டன் யாழ்ப்பாணம் | ராஜ் (நீர்கொழும்பு)

எம். ஜி. ஆர்., சரோஜாதேவி ராதா அசோகன் நடிக்கும்

## தாயின் மடியில்

கிங்ஸ்லி (கொழும்பு)

## கணவனே கண்கண்ட தெய்வம்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் ஏப்ரல் [illegible] அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org